
# குத்தூசி

மாத வெளியீடு

KUTHOOSI: HIGH CLASS THAMIZH MONTHLY

ஆசிரியர்: சா. குருசாமி



ஊசி 2 குத்து

★ அக்டோபர் 1963 ★

இதனுள்:

சாபம் பலிக்காது!
வாழ்த்துக்கள்
சமூக நீதிக்கு வழி
தொழிலாளர் தொழு நோய்
ஸாக்கோ - வான்ஸெட்டி.
கணிதப் பொறிகள்
வடமொழி வாக்குகள்
புளுகுப்போர்?
சொற்சிலம்பம்
குழந்தைக்குப் புத்தகம்.
பெண்கள் பகுதி
கவிதைப் பகுதி
இலக்கியப் பகுதி
மதிப்புரை
இன்னும் பல.



Telegrams:
" SWITCHES "

Phone:
51436

# KASIMARI INDUSTRIAL CORPORATION

"KASIMARI BUILDINGS"

295, THIRUVOTTIYUR HIGH ROAD,

MADRAS-21.

INDUSTRIALISTS, ENGINEERS & CONTRACTORS

**We Undertake:**

ALL KINDS OF STRUCTURAL FABRICATIONS AND ENGINEERING WORKS OF EVERY DESCRIPTION

**Our Motto:**

QUICK, EFFICIENT AND PROMPT SERVICE

# எமது புதிய வெளியீடுகள்

| | ரூ. காசு. |
|---|---|
| கால நிலை இயல் | 10 00 |
| இர. இராதா, M.A., L.T., M.A. | |
| பகவதி எம். எல். ஏ. | 8 00 |
| "துமிலன்" | |
| முதன்மைபெற்ற அமெரிக்கப் பெண்மணிகள் | 6 00 |
| *தமிழில்:* ஏ. ஆர். இந்திரா | |
| இனி நாம் செய்ய வேண்டுவது யாது? —டால்ஸ்டாய் | 3 50 |
| ரா. விசுவநாதன் | |
| பாய் பரமானந்தன் | 3 25 |
| தென்காசி ச. சொக்கலிங்கம் | |
| யார் அவர்? | 2 50 |
| மகரம் | |

## பழனியப்பா பிரதர்ஸ்

சேப்பாக்கம்; . . தெப்பக்குளம்;
சென்னை - 5 . . திருச்சி - 2

## தி மதருஸ் இண்டஸ்ட்ரியல் இன்வெஸ்ட்மெண்ட் கார்ப்பரேஷன் லிமிடெட்.

23, நுங்கம்பாக்கம் ஹைரோடு, (போன்: 82026) சென்னை-34.

புதிய தொழில்களை ஆரம்பிக்கவும், பழைய தொழில்களை விஸ்தரிக்கவும் தேவையான நிதியை உதவ சென்னை அரசாங்கம் மதருஸ் இண்டஸ்ட்ரியல் இன்வெஸ்ட்மெண்ட் கார்ப்பரேஷனை ஆரம்பித்துள்ளது. இக் கார்ப்பரேஷன் ஏற்றுக்கொள்ளும் பிக்ஸட் டிபாஸிட்டுகளின் அசலுக்கும் வட்டிக்கும் சென்னை அரசாங்கம் நிபந்தனையின்றி உத்திரவாதம் அளித்திருக்கிறது.

*எங்கள் டிபாசிட்டுகளின் பேரில் கீழ்க்கண்டவாறு வட்டிகள் அளிக்கிறோம்:—*

| | | | |
|---|---|---|---|
| ஒரு ஆண்டும் அதற்கு மேலும் | ... | $4\frac{1}{2}$% | ஒரு ஆண்டிற்கு |
| இரண்டு ஆண்டுகளும் அதற்கு மேலும் | ... | $4\frac{3}{4}$% | ,, |
| மூன்று ஆண்டுகளும் அதற்கு மேலும் | ... | 5% | ,, |
| நான்கு ஆண்டுகளும் அதற்கு மேலும் | ... | $5\frac{1}{4}$% | ,, |
| ஐந்து ஆண்டு முதல் இருபது ஆண்டுகள் வரை | | $5\frac{1}{2}$% | ,, |

ஒரு லட்சமும் அதற்கு மேற்பட்ட தொகையையும் மூன்று ஆண்டுகளுக்கும், அதற்கு மேலும் டிபாஸிட் செய்தால் மேற்கண்ட வட்டி விகிதங்களை விட 1/4% வட்டி அதிகமாக அளிக்கப்படும்.

மற்ற விவரங்களுக்கு எழுதித் தெரிந்துகொள்ளவும்.

**எஸ். இராஜரத்தினம்**
*காரியதரிசி.*


## இந்த இதழ்பற்றி உங்கள் கருத்தென்ன?

★ மறுப்புக் கருத்துள்ளது
எது? — ஏன்?

★ சிறப்புக் கருத்துள்ளது
எது? — ஏன்?

★ பிழையற்ற தமிழில் அரைப்பக்கத்துக்கு மேற்படாமல் எழுதியனுப்புக.

குறிப்பு:—ஒவ்வொரு மாத இதழிலுமுள்ள இலக்கண-அச்சுப் பிழைகளைக் கண்டு பிடித்துத் தெரிவிப்போருக்கு குத்தூசி நன்றியுடையதாயிருக்கும்.

—ஆசிரியர்.

# MEENAKSHI GROUP OF MILLS

MADURAI (South India).

---

Manufacturers of:

**Single Yarn in couhts 16s to 100s, carded and combed, in hanks and in cones for Weavihg and Hosiery Factories and Grey Gada. Grey and Bleached Mulls, Long-Cloth, Dyed Cloth etc.**

★

1. The Sree Meenakshi Mills, Ltd., Madurai.
2. The Sree Meenakshi Mills, Ltd., Paravai.
3. Thiakesar Alai Manaparai.
4. Alagappa Textiles (Cochin) Ltd., Alagappanagar.
5. Thiagarajar Mills, Kappalur.
6. Rukmini Mills Ltd., Silaiman.
7. Sree Sivakami Mills Ltd., Thenur.
8. Saroja Mills Ltd., Coimbatore.
9. The Coimbatore Kamala Mills Ltd., Coimbatore.
10. Sri Sarada Mills Ltd., Podanur.
11. Sree Rajendra Mills Ltd., Salem.
12. Loyal Textile Mills Ltd., Kovilpatti.
13. Virudhunagar Textile Mills Ltd., Sulakarai.
14. Parvathi Mills Ltd., Quilon.
15. Vijayamohini Mills Ltd., Trivandrum.
16. Kerala Lakshmi Mills Ltd., Trichur.

*For Best*

HALF-TONE

LINE &

TRICOLOUR

BLOCKS

Please Contact :

NEWTON & CO.,

**80, WALLAJA ROAD,**

**MOUNT ROAD :: MADRAS-2.**

(or Ring up : **86729**)

**PROMPT SERVICE**

# "குத்தூசி"

## இரண்டாவது ஆண்டுக்கு...

## தேவை! விற்பனையாளர்!!

குத்தூசிக்கு, முன் பணம் கட்டக் கூடிய விற்பனை யாளர் கீழ்க்கண்ட ஊர்களுக்குத் தேவை :

| | |
|---|---|
| சிதம்பரம் | விழுப்புரம் |
| திண்டுக்கல் | திருவண்ணாமலை |
| லால்குடி | தூத்துக்குடி |
| கரூர் | சீர்காழி |
| மதுரை | காஞ்சீபுரம் |
| நாகர்கோவில் | விருதுநகர் |
| திண்டிவனம் | ஆத்தூர் |
| உடுமலைப்பேட்டை | புதுக்கோட்டை |
| ஒரத்தநாடு | தர்மபுரி |

## கட்டுரையாளருக்கு வேண்டுகோள் :

1. நல்ல வெள்ளைத் தாளில், நெருக்கமில்லாமல், ஒரே பக்கத்தில்,
2. ஒரு படி (நகல்-காப்பி) வைத்துக்கொண்டு,
3. கூடுமானவரையில் பிறமொழிக் கலப்பின்றி எளிய, இனிய நடையில், கூறியது கூறாமல், சுருக்கி, சொல் சிக்கனத்துடன்,
4. கூடுமான வரையில் 5 பக்கங்களுக்கு மேல் இராமல்,

எழுதியனுப்ப வேண்டுகிறேன்.

"குத்தூசி"

''மெய்ப்பொருள் காண்பது அறிவு''

# குத்தூசி

# சாபம் பலிக்காது!

பத்திரிகா முனிவரின் சாபம் பலிக்காது போலத்தான் தோன்றுகிறது!

> ''புயற்காற்றையும், காட்டு வெள்ளத்தையும் எதிர்த்துப் புறப்பட்டிருக்கும் உன் தனி நடைப் பயணம் முற்றுப் பெறாமலிருக்கக் கடவது!''

என்று பத்திரிகா முனிவர் சாபமிட்டாலும், ''மூச்சுள்ள வரையில் ஒரு புது முயற்சி என்றுதான் இதில் குதித்திருக்கிறோம்'' என்று சென்ற ஆண்டு அக்டோபரில் எழுதினோமல்லவா?

குத்தூசியைக் கொல்லமுடியாது! தற்கொலையும் செய்து கொள்ளாது! இயற்கையான மரணம் ஏற்பட்டால் தான்! ஆனால்ஆலமரமாக பரந்து, படர்ந்து வளராது. ''......அண்ணல் யானை ஆட்பெரும் படையொடு மன்னர்க்கிருக்க'' நிழல் தரமுடியாவிடினும், தனித் தென்னை மரத்தைப் போல் பல பேரறிஞர்களும், பட்டறிவுப் பெரியார்களும் உவந்தளிக்கும் நீரையுண்டு தலையாலே இளநீராகத்தரும்! தந்து கொண்டேயிருக்கும்.

> ''பல்லாயிரம் பேர் படித்துப் பயனடைவார்கள் என்ற நம்பிக்கையில்லை; ஆசையுமில்லை. சில ஆயிரம் பேராவது இம்மாதிரியான ஏட்டை விரும்பிப் படித்துப் பயனடைவார்கள் என்ற நம்பிக்கை மட்டும் உண்டு. இதுபோதும் நமக்கு.''

இப்படி எழுதி முடித்திருந்தோம், சென்ற ஆண்டு இதே நாளில்.

அக்டோபர் 2-ல், காந்தியார் பிறந்த நாளில், குத்தூசி பிறந்தது! காந்தீயப் பாதையிலேதான் இதன் ஆசிரியர் (கல்லூரி மாணவனாக

அங்கே:

அண்ட வெளி
சுற்றி !

இங்கே:

அரச மரத்தைச்
சுற்றி !



இருந்த போது) நடக்கப் புறப்பட்டார். அத்துடன் பகுத்தறிவுப் பாதையில், ஈரோட்டுப் பெரியார் பாதையில் நடந்து பிரிந்து நல்வழிப் பாதையில் நெடுந்தொலைவு வந்துள்ளார். இவ்இரண்டு நடைபாதைகளிலுமுள்ள இன்பதுன்பங்களைக் கடுகளவேனும் வாழ்க்கையில் கண்டவர். சிறப்பாக காந்தியாரின் திடீர் முடிவை யறிந்தவுடனேயே துடிதுடித்தவர். ஆகவே, அக்டோபர் 2-குத்தூசி பிறந்தநாள்!

ஓராண்டு குத்தூசியில் பல குறைகளுண்டு! குறையில்லாத மனிதனுமில்லை; அமைப்புமில்லை; முயற்சியுமில்லை.

ஆனாலும் குத்தூசியின் குறிக்கோளில் எவருக்கும் எவ்வித அய்யப்பாடும் இருக்காது.

பகுத்தறிவுடன் கூடிய சமதர்ம மனித சமுதாயக் கோட்டையைக் கட்டும் பெரு முயற்சியில் குத்தூசி ஒரு சிறு கல்லாகவேனும் இருக்கும்! முடிந்தால் மூலைக் கல்லாகவும் இருக்கும்.

எதிலும் மெய்ப்பொருள் காண்பதுதான் அறிவு என்பதை மறக்காதபடி, அரசியல் குட்டைக்குள் தடுமாறி வீழ்ந்து விடாமல், விருப்பு-வெறுப்பு இல்லாமல், நடுநிலை நலம் காணும் கண்ணோட்டத்துடன், ஆனால், வெண்டைக்காய் ஆகாமல், எதையும், யார் யார் வாய்ப்பட்டதையும், அலசி அலசி அச்சமின்றி எடுத்துக் காட்டும்.

தகுதிமிக்க கட்டுரையாளர் பலர் தம் பரந்த படிப்பையும் திரண்ட அறிவையும், ஆழ்ந்த ஆராய்ச்சியையும் வாரி வாரிக் கொட்டிக் கொண்டே யிருக்கின்றனர். குத்தூசியின் மூச்சுத் திணறும்படியாக கவிதை—கட்டுரை—அருவி நீர் சடசடவென்று தங்கு தடையின்றி, நாள் தவறாமல் பொழிந்துகொண்டே யிருக்கிறது!

இதுதான் குத்தூசியின் முதல் வெற்றி! அதாவது, தமிழ் மொழியை பங்களாச் செடியைப் போல் வெட்டிவிட்டுக் கொண்டேயிருக்கக் கூடாது! மலைக் காடு வளர்வதைப் போல் பல்வேறு மரம், செடி கொடிகளுடன் வளரவிட்டு, மழைத்தண்ணீரைத் தேக்கி அறிவு ஆறுகளாக ஓடவிட்டு, வாழ்க்கைக்கு இன்றியமையாத, ஊற்றுப்பெருக்கால் உலகு ஊட்டும், நன்னீராயிருக்க வேண்டும்.

ஒவ்வொரு துறையிலும் ஆற்றல் மிக்கோர், அறிவு மிக்கோர் எத்தனை ஆயிரம்பேர் தமிழ்நாட்டில் உள்ளனர் என்பதை எள் மூக்களவேனும் எடுத்துக் காட்டியே தீரும், குத்தூசி!

"சிறந்த ஏடு! உயர்ந்த ஏடு!"—என்றெல்லாம் இது கூறப்படுமானால், இதன் முதற்பெருமை, இந்த ஏட்டின், இந்த நாட்டின், முன்னணி எழுத்தாளர்களுக்கு! அடுத்த பெருமை, அழகு சொட்டும்படி உருவாக்கிவரும் அச்சகத்தாருக்கு! இரு திறத்தாருடன் முடிந்தது வேறு பேச்சில்லை! வேறு யாருக்கும் பங்கு இல்லை! இவ்இரு சாரா

ருக்கும் எம்மால் போதுமான நன்றி செலுத்த முடியாது! இன்னும் பல்லாண்டுகள் இவர்கள் இந்தத் தமிழ்ப்பணியாற்றித் தீரவேண்டுமே!

ஆகவே, பொங்கட்டும் புதுமை எழுத்து! பல்துறைப் பட்டதாரிகள் பிறமொழிக் கடல்களுக்குள் மூழ்கி மூழ்கி, சிறந்த முத்துக்களைத் தேடி யெடுத்துத் தமிழ் மாலையாக்கிக் காட்டுவோம்! பழங்கதை போதும்! பழம் பெருமை அகல் விளக்கொளி போகட்டும். புதுப்புது ஒளியைக் காண்போம்! அதைப் பிறருக்கும் காட்டுவோம்!

நன்றி! ஆம்! குத்தூசியைக் கொல்ல நினைப்போர்க்கு முதல் நன்றி! ஆதரித்துப் போற்றி வளர்ப்போர்க்கு அடுத்த நன்றி! எல்லோர்க்கும் நெஞ்சு நெகிழ்ந்த நன்றி!

# திருமண விரயம்

பிற நாட்டுத் திருமணங்களைக் காட்டிலும், பிற மதத் திருமணங்களைக் காட்டிலும், தமிழ் நாட்டின் இந்து மதத் திருமணத்தில் சடங்குகளும் மூட நம்பிக்கைகளும் மிகுதி. இருபது ஆண்டுகட்கு முன்பு வரையில் நான்கு நாள், ஆறு நாள் திருமணம் என்று வைத்துக்கொண்டு, அக்கிரமச் செலவும், தேவையற்ற சடங்குகளும் நடத்தி வந்ததை எண்ணிப் பார்த்தால், இன்று எவ்வளவோ குறைந்து திருந்தி யிருக்கிறது என்றே கூறலாம். சீர்திருத்தக் கருத்து ஒரு வகையில் இதற்குக் காரணம் என்றாலும், வைதீகர்கூட இவற்றைச் சுருக்கிவிட்டதற்கு, பொறுக்க முடியாத தொல்லையும் விலைவாசி ஏற்றமும் முக்கியமான காரணங்களாகும்.

ஏன்றாலும், பணவசதி உடையவர்கள் வீண் விருந்துகளையும் ஆடம்பர நகை-உடை முதலியவற்றையும், குறைத்துக்கொள்ளவில்லை. புரட்சித் திருமணம்—தமிழ்த் திருமணம்—தன்மானத் திருமணம்-என்ற பெயர்களால் மண நிகழ்ச்சி நடத்துகிறவர்கள்கூட இத்துறையில் குற்றவாளிகளாகவே இருந்து வருகின்றனர்.

இதை முன்னாள் முதலமைச்சரான திரு. காமராசர் அவர்கள் சென்னை பத்திரிகை நிருபர்களிடம் பேசுகையில் சுட்டிக்காட்டிக் கண்டித்திருப்பது போற்றத் தக்கது.

திருமண நிகழ்ச்சிகளில் ஆடம்பரச் செலவுகள், விருந்துகள். நிறுத்தப்படவேண்டும். முடியாவிடில் பெரிதும் குறைக்கப்படவேண்டும்.

இனி, சடங்குகள் பற்றிக்கூட ஒன்று நினைவுக்கு வருகிறது. இன்று 'புரட்சித் திருமணம்' என்ற பெயரால் நடந்து வருவது நாற்பதாண்டுக்கு முந்திய "மாடல்!" ஆகவே மிகப் பழமையானது!

நல்ல மாதம், நல்ல நாள், நல்ல நேரம், குத்துவிளக்கு, தாலி— போன்ற பத்தாம் பசலி வழக்கங்களும், தேவையற்ற முறைகளும் நம்பிக்கைகளும், தமிழரின் பெயராலோ, தன்மானத்தின் பெயராலோ-கூடத் தலைகாட்டக் கூடாது.

பெண்ணும் ஆணும் அரசாங்கத் தலைமை மருத்துவர்களின் உடற்பரிசோதனை நற்சான்று பெற்ற பிறகுதான் திருமணம் இறுதியாக முடிவு செய்யப்பட வேண்டும். ஒவ்வொரு திருமணமும் அரசாங்க 'ரிகார்டுகளில்' பதிவு செய்யப்பட வேண்டும். கடந்த இருபதாண்டுகளாக இதுபற்றி நாம் வற்புறுத்தி வந்துள்ளோம். பதிவு பற்றியும் திரு. காமராசர் அவர்கள் வலியுறுத்தி யிருப்பது வரவேற்கத் தக்கது.

யார் பூனைக்கு மணி கட்டுவது ? வெண்ணெயை (அதிகாரத்தை) வைத்துக்கொண்டு நெய்க்கு (சாதனைக்கு) அழுவது கூடாது. துணிந்து சட்டம் இயற்ற வேண்டும்.

# பெரும் பண்டிகைகள்

ஸ்ரீராமநவமி, கிருஷ்ணஜெயந்தி, விநாயக சதுர்த்தி, ஆயுதபூஜை! சரஸ்வதி பூஜை! தீபாவளி! - இப்படி ஏதாவது ஒன்று தமிழனின் தலையில் கொத்திக்கொண்டே இருக்கிறது! ஒருநாள் ஒருபொழுதாகிலும் இன்பமாக இருக்க ஆசைப்பட்டு, குடியர்கள் குடிப்பது போலவும், சூதாடிகள் சூதாடுவது போலவும், ஆண்கள் விலைமாதர் பால் செல்வது போலவும், மதவாதிகள் இப்பண்டிகைகளைக் கொண்டாடி வருகின்றனர்!

இவற்றில் எதற்காவது தமிழனின் தொடர்பு உண்டா? இக்கதைகளைக் கடுகளவு அறிவுள்ள காட்டுமிராண்டியாவது நம்புவானா ? பண்டைத் தமிழன் இவற்றைக் கொண்டாடியதாக ஒருவரி ஆதாரத்தையாவது, எங்காவது காட்ட முடியுமா ? படிக்காத தமிழனுக்கும் அறிவில்லை ! படித்த தமிழனுக்கும் அறிவில்லையே !

கற்றனைத்து அறிவு ஊறும், என்பது தமிழ் நாட்டைப் பொறுத்த மட்டில் முழுப் பொய்யாக ஆகிவிட்டதே! அறிவு பெற்றவன்கூட மற்றவனுக்கு இவற்றின் மடமையைக் கூற நடுங்குகிறானே! வாக்கு (Vote)ப் பெட்டி நினைவு அவன் கையையும் வாயையும் கட்டி விடுகிறதே !

அண்ட வெளியில் பறக்கும் நாடுகளிலும், அணுக்குண்டுகளை அடுக்கி வைத்திருக்கும் நாடுகளிலும் ஆயுதபூஜை இல்லை. ஆனால் அரிவாளையும் அம்மியையும் வைத்துக்கொண்டு "ஆயுத பூஜை" செய்கிறானே ! வெட்கப்பட வேண்டாமா ?

100க்கு 100 பேரும், 99 பேரும் ஆகக் கல்வி பெற்றுள்ள நாடு களில் எதிலாவது சரஸ்வதி (கல்விக் கடவுளச்சி) பூஜை நடக்கிறதா? 100க்கு 50கூடப் படிக்காத இந்து சமூகத்துக்கு ஏன் சரஸ்வதி பூஜை? பிறநாட்டார் எள்ளி நகையாடுவது தெரியவில்லையா?

புதுத்துணிக்கும், எண்ணெய் முழுக்குக்கும், பணத்தைப் புகை-யாக்கும் பட்டாசுக்கும்—ஒரு பண்டிகையா?

ஆபாச உருவமுள்ள பிள்ளையார் ஒரு கடவுளா? அதற்கு ஒரு பண்டிகையா? அதைப்போல ஒரு பிள்ளை பிறந்தால் எந்த பக்தனா வது அதை வைத்துக்கொண்டு கொஞ்சுவானா?

படுமோசம்! மகா வெட்கக் கேடு!

இத்தனை மடமைகளுக்கும் அரசாங்கம் (மதச்சார்பற்றது, நினை விருக்கட்டும்!) பொது விடுமுறை விடுவது கேவலம், கேவலம்! மகா மகா கேவலம்!!

பகுத்தறிவு வேறு, படிப்பு வேறு என்பதற்கு நிலையான எடுத்துக்-காட்டு ஒன்றே ஒன்றுதான் உண்டு!

அதுதான் செந்தமிழ் நாடு! ஆதலால் செந்தமிழ் நாடென்னும் போதினிலே, ஆயிரம் தேள் வந்து கொட்டுது, நாவினிலே!

*"நம்மிடத்தில் உள்ள ஒன்றைக்கொண்டு இன்பம் அனுபவிக்கும் போது அதன் பெருமையை நாம் மதிப்ப தில்லை; அது நம்மைவிட்டுப் பிரிந்த பிறகு, அல்லது தொலைந்து போன பிறகு அதன் மதிப்பை உணர்ந்து வேதனைப்படுகிறோம். பிறகு நம் உடைமைகளை மதிக்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்துகொள்கிறோம்."*

— ஷேக்ஸ்பியர்

* * *

*"உறுதியான நட்பு என்பது இன்பத்திலெல்லாம் அருமையான இன்பமாகும். இது நம் கவலைகளையெல் லாம் குறைக்கும்; துன்பங்களையெல்லாம் அகற்றும். எதிலும் இறுதி நிலையில் இருக்கும் போது நமக்கு அறிவுரை கூறும் உண்மையான நண்பர்கள் ஒருவரிடம் மற்றவர் உலக இன்பத்தையே காண்கிறார். எவனொரு வன் தன்னைத்தானே நேசிக்கிறானோ அவன் மனித சமுதாயத்தை நேசிப்பவனாகிறான்."*

—செனிகா

# வாழ்த்துரைகள்:

''1962 அக்டோபர் மாதம் 2-ம் தேதி தொடங்கப்பெற்ற குத்தூசி மாத ஏடு தனது முதல் ஆண்டைச் சிறந்த முறையில் முடித்துக்கொண்டு, இரண்டாவது ஆண்டைத் துவக்க இருப்பது அறிந்து மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். இரண்டாவது ஆண்டு துவக்க ஏடு மேலும் சிறந்த முறையில் வெளிவர எனது இதயங்கனிந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.''

கே. காமராஜ்
2—9—63.

*　*　*

''பத்திரிகை படிக்கும் ஆர்வம் இன்று மக்களிடையே பெருகியிருக்கிறது. அதற்கேற்ப பத்திரிகைகளின் எண்ணிக்கையும் வளர்ந்து வருகிறது. அவை நாட்டின் நல்வாழ்வு ஒன்றையே கருத்தாகக் கொண்டு பணியாற்றவேண்டும். அதன்மூலம் மக்களின் நல்லெண்ணத்தைப் பெறமுடியும். அந்த வகையில் ''குத்தூசி'' மாத இதழ் சமுதாய நன்மைக்காகப் பாடுபடும் ஏடாகத் திகழும் என்று நம்புகிறேன். என் நல்வாழ்த்துக்கள்.''

எம். பக்தவத்ஸலம்
7—9—63.

*　*　*

ஓராண்டு நிறைந்து 'குத்தூசி' மறு ஆண்டில் புகுகின்றது. அதன் ஆசிரியர் பழுத்த பகுத்தறிவாளர். உண்மையின் பரப்பையும் ஆழத்தையும் அறிந்து அரிதியிட்டவரில்லை. ஆனல், அதை ஏற்றுக்கொள்ளாதவரும், மறுப்பவரும் உண்டு. மதத்தையும் கடவுளையும் குறுக்கே கொண்டு நிறுத்துவர். இந்த விந்தையைக் கண்ட காந்தி அடிகள் ''உண்மையே கடவுள்'' என்று, நெற்றிக் கண்ணைத் திறந்துகாட்டி அச்சுறுத்தவந்த சனதனிகளுக்கு சொன்னதுண்டு.

உண்மையைக் காணுவதற்கு இதுவரை கிடைத்துள்ள கருவிகளில் பகுத்தறிவே சாலச் சிறந்தது. அதனினும் கூரிய "மெய்யுணர்ச்சி" (Intuition) இன்னும் கைவந்த வித்தை அல்ல.

விருப்பு, வெறுப்பு, பயம் ஆகியவற்றை ஒதுக்கி, சிந்தனையைக் கிளரி, பகுத்தறிவைத் தூண்டும் 'குத்தூசி'யின் வெளியீடுகள் பல்கிப் பெருகி தமிழகத்தை வளம்படுத்துமாறு விழைகின்றேன்.

சோ. இலட்சுமிரதன் பாரதி
9—9—63.

*　*　*

''தாங்கள் நடத்திவரும் 'குத்தூசி' என்னும் திங்கள் இதழ்க்கு ஓராண்டு நிறைவுற்றமையறிந்து உவகை மிகக் கொள்கின்றேன். ''கலையுரைத்த கற்பனையை நிலையெனக் கொண்டாடும் கண்மூடி வழக்கம்'' நிறைந்த இந்நாட்டில் பகுத்தறிவுக் கொள்கையைப் பரப்பும் நோக்குடன் இதழ் நடாத்துவது என்பது செங்குத்தான மலையுச்சியில் ஏறுவது போன்றதாகும். பகுத்தறிவுக் கொள்கைக்கெனவே வாழ்ந்துவரும் தங்களை நோக்கித் துன்பங்கள் பல தொடர்ந்து வரினும் அவைதாம் இடுக்கட்படுமேயன்றித் தாங்கள் அயர்வுற்று உள்ளம் அழிந்து ஓய்வு பெற மாட்டீர்கள் என்பதைத் தமிழுலகம் நன்கு அறியும். ''இன்பம் விழையான், இடும்பை இயல்பு என்பான், துன்பம் உறுதல் இலன்'' எனும் வள்ளுவர் வாய்மொழிக்குத் தாங்கள் சிறந்த எடுத்துக்காட்டாவீர்கள்.

பாலுணர்ச்சியைத் தூண்டும் கவின்மிகு காரிகையரின் கவர்ச்சிப் படங்களை முகப்பில் தாங்கியும், மாற்றுக் கொள்கையினரை வீண்பழிக்கு ஆளாக்கும் வெற்றுரைகளைத் தாங்கியும், ஆரவாரத்துடன் வரும் இதழ்களே செல்வாக்குப் பெறும் இந்நாளில், அறிவிழந்து அல்வழிச் செல்வாரைக் கொள்கைவழி நின்று தெருட்டும் கட்டுரைகளைக் கொண்டு வரும் இதழ்கள் தளர் நடை இட்டுத்தான் உலவ இயலும். ஆயினும் எடுத்த கருமத்தைத் தொடுத்து முடிக்கும் வினைத்திட்பம் உடைய தாங்கள், ''குத்தூசி'' என்னும் கொள்கை இதழைக் கண்ணுக்கும் கருத்துக்கும் மகிழ்ச்சியூட்டும் வகையில் பன்னிருதிங்கள் பாங்காக வளர்த்துவிட்டீர்கள். இன்னும் பன்னூறு ஆண்டுகள் பாரில் வாழவும் பயனுறு தொண்டாற்றவும் அன்போடு வாழ்த்துகின்றேன்.

வாழ்க, ''குத்தூசி''; வளர்க மதிதொறும்;
தமிழ்ப் பகைமாய்த்துத் தண்டமிழ் போற்றி
அறிவே கடவுளாய் அன்பே கொள்கையாய்
அனைவரும் நலமுற ஆற்றுக பணியே!
கொள்கைவீரர் குருசாமி வாழ்க!
வாழ்க பல்லாண்டு வாழ்க!
சூழ்க, நல்லின்பம் துயர் எலாம் நீங்கவே!''

சி. இலக்குவன்
10—9—63.

* * *

''சென்ற ஒரு ஆண்டாக வெளிவந்து கொண்டிருக்கிற ''குத்தூசி'' என்னும் திங்கள் இதழைப் படித்து மகிழ்ந்தேன். நல்ல கட்டுரைகளைத் தாங்கி இப்பத்திரிகை திங்கள் தோறும் வெளிவருகின்றது. பலதுறைகளிலும் வல்ல அறிஞர்கள் எழுதும் கட்டுரைகள் அறிவுக்கு விருந்தளிக்கின்றன. மனிதர் ஒவ்வொருவரும் அறிய வேண்டிய பலசெய்திகளை வெளியிட்டுக் கொண்டு 'குத்தூசி' சமுதாயத்திற்குத் தொண்டாற்றி

வருகிறது. நல்ல தாளில், அழகான எழுத்தில், விரும்பத் தக்கமுறையில் இதனை வெளியிட்டு வருகிற இதன் ஆசிரியர் திரு சா. குருசாமி அவர்களைப் பாராட்டுகிறேன். இதுபோன்ற அறிவு வளர்ச்சிக்குரிய பத்திரிகைகள் இக்காலத்துக்கு மிகவும் தேவை. ஒவ்வொருவரும் இதனைப் படித்துப் பயன்பெற வேண்டும் என்பது எனது விருப்பம்.

மயிலை சீனி வேங்கடசாமி
15—9—63.

* *

"பதுங்கிக் கிடப்பதை அம்பலப்படுத்துவதே குத்தூசியின் தொழில். அச்சிடுவதெல்லாம் ஏடு; பேனா எடுத்தவனெல்லாம் எழுத்தாளன், என்ற முறையில் கீழ்த்தரமான உணர்ச்சிகளைத் தூண்டி மக்களை மடமையில் அமுத்திவரும் இந்நாளில் அறிவின் ஒளிவிளக்காய் விளங்குகிறது, "குத்தூசி". சமதர்மம் என்ற சாணைக்கல்லிலே தீட்டப்பட்ட குத்தூசி மடமையைக் குடைந்து சுரண்டலைப் "பராண்டி" பிற்போக்குத் தனத்தைத் தோலுரித்துக் காட்டி வருகிறது.

குத்திக் குத்தித்தான் குத்தூசி ஒளிபெற முடியும். இன்றேல் துருப்பிடித்த இரும்பாகிவிடும். எனவே, குத்தூசி விடுதலை வேட்கை, சமத்துவ உணர்ச்சி, சமதர்மக் கொள்கை இவை தவிர வேறெந்த வெறிக்கும் இடம் கொடாமல் தமிழ் வளரவும், தமிழ் மக்கள் வாழவும் என்றென்றும் இடையறாது தொண்டாற்றி வரவேண்டும்.

பிறந்து ஓராண்டு முடிவதற்குள்ளாகவே பத்திரிகை உலகில் உயரியதோர் இடத்தைக் கைப்பற்றிய "குத்தூசி" புத்தாண்டிலே புதுமைப் பித்தும், விடுதலை வேட்கையுங் கொண்டு சமத்துவம், சமதர்மம் ஆகிய தத்துவங்களைத் தமிழ் மக்கள் வாழும் மூலை முடுக்குகளிலெல்லாம் சங்கநாதம் செய்யும் ஒரு அறிவுப் பாசறையாகத் திகழ வேண்டுமென வாழ்த்துகிறேன்.

தற்போது கருத்தோவியங்களே பெரும்பாலும் குத்தூசியில் இடம் பெறுகின்றன. முற்போக்குக் கருத்துக்களைப் பரப்பும் சிறுகதைகளும் தொடர் கதைகளும் இடம் பெற்றால் குத்தூசி மக்களது மனத்தை மேன் மேலும் கவர முடியும். இப்பணியில் தமிழ் மக்களின் அன்பும் ஆதரவும் எப்போதும் குத்தூசிக்குக் கிடைக்கும் என்பது எனது நம்பிக்கை.

எம். ஜே. கே. தவராஜ்
(டில்லி) 11—9—63.

* * *

"குத்தூசி" சென்ற ஓராண்டில் ஆற்றிய அரும்பணி பெரிது. பல நல்ல உயர்ந்த கருத்துக்களைத் தாங்கிவரும் தங்கள் ஏடு சிறக்க என வாழ்த்துகின்றேன். தங்கள் முயற்சி வெல்வதாக.

அ. மு. பரமசிவானந்தம்
2—9—63.

கு. கு.

# காந்தியார்பற்றி: குறிப்புகள்

காந்தியார் பிறந்தது, 1869 அக்டோபர் 2ல். இறந்தது, 1948 ஜனவரி 30ல். இயற்கையாக இறக்கவில்லை. அமெரிக்க விடுதலைத் தலைவர் ஆப்ரகாம் லிங்கனை 1865 ஏப்ரல் 14ல் நாடகக் கொட்டகையில் பூத் என்ற வெறியன் சுட்டுக் கொன்றானல்லவா? அது போலவே இந்திய விடுதலைத் தலைவர் காந்தியாரை கோட்சே என்ற மத வெறிப் பார்ப்பனன் சுட்டுக் கொன்றான்.

எனவே, மரணத்தின்மூலம் சாக்ரட்டீஸ், லிங்கன் போன்ற உலகப் பெரியார்களின் வரிசையில் இடம் பெற்றுவிட்டார்.

* * *

சில குறிப்புகள் இங்கே :

''1942ல் காந்தியை நான்கேட்டேன், 'சுதந்திர இந்தியாவில் என்ன நடக்கும் ? குடியானவரின் நிலையை வளரச்செய்ய உங்கள் திட்டம் என்ன?''

அவர் அளித்த பதில்: "நிலத்தைக் குடியானவன் எடுத்துக் கொள்வான். 'எடுத்துக் கொள்' என்று நாம் அவனுக்குச் சொல்லத் தேவை யில்லை; அவனாகவே எடுத்துக் கொள்வான்.''

''நிலச்சுவான் தார்களுக்கு நஷ்ட ஈடு கிடைக்குமா ?''

''கிடைக்காது! அரசாங்க நிதி இதற்கு இடங்கொடாது", என்றார் காந்தி.''

—'காந்தி வாழ்க்கை'(லூயி பிஷர்)

* * *

''காந்தி தம் கக்கூசையே நூல் நிலையம் (Library) என்று கூறுவதுண்டு. ஒரு அலமாரி நிறையப் புத்தகங்களை அங்கு (கக்கூசில்) வைத்திருந்தார்."

(டை - டை)

* * *

''சாதாரணமாக பள்ளி ஆசிரியர்களிடம் குழந்தைகளை ஒப்படைக்கவே கூடாது என்பது என் கருத்து. ஆசிரியர்களிடம் ஒழுக்க உறுதிதான் முக்கியமேயன்றி அவர்களுடைய இலக்கியத் தகுதி முக்கியமல்ல. இலக்கணமும் எழுதப் படிக்கவும், கணக்குப் போடவும் குழந்தைகளுக்குக் கற்றுக் கொடுப்பது அவ்வளவு முக்கியமல்ல; தூய்மையாக இருக்க வேண்டியதையும், நல்ல பழக்க வழக்கங்களையும் குழந்தைகளுக்குக் கற்பிப்பதே முக்கியம்.''

(''காந்தியார் சுயசரிதை'')

* * *

''உண்மையைத் தவிர வேறு கடவுள் இல்லை என்பதை, ஒரே மாதிரியான எனது அனுபவங்கள் எனக்கு உறுதியாக உணர்த்தியிருக்கின்றன. உண்மையைக் காண்பதற்குள்ள ஒரே வழி அகிம்சை (துன்புறுத்தாமை-இன்னா செய்யாமை) என்பதை இந்நூலின் ஒவ்வொரு பக்கமும் படிப்போருக்கு அறிவுறுத்தாவிடில், இதை எழுதுவதற்கு நான் எடுத்துக்

கு. மீ. சுவாமிநாதன், M. Sc.

# கணிதப் பொறிகள்

*[தமிழை வளர்க்க முடியுமா? முடியும். இதுபோன்ற கலைத்துறைக் கட்டுரையினால்தான் முடியும். பண்டை இலக்கியத்தை மட்டுமே புரட்டிக் கொண்டிருப்பதால் தமிழ் அழியாமலிருக்குமே யொழிய வளராது; வளரவே வளராது. எல்லாக் கலைகளையும் தமிழில் மொழி பெயர்த்துக் குவிக்கும் மொழி பெயர்ப்புப் படை (army) வேண்டும். அப்படையின் முன்னணி வீரர்களில் ஒருவர், இக்கட்டுரையாளர். "கேளா ஒலி" பற்றி முன்பு விளக்கினார். இதில் "கணிதப் பொறி" பற்றி விளக்குகிறார். ஒவ்வொரு கலைத்துறையிலும் இம்மாதிரி எவரெஸ்ட் உச்சி ஏறும் முயற்சியாளர் பலர் முன்வர வேண்டும். இவர்களால்தான் தமிழ் வளரும். தமிழ் இலக்கியப் பசும்புல் தரையில் படுத்துறங்குவோர்களால் தமிழ் வளராது.*

—ஆசிரியர்]

அண்ட வெளிப் பயணம் எல்லோரும் எளிதில் அடையக் கூடியதாக விரைவிலேயே பெருகி வளரும் இக்காலத்திலும் கூட, சாதாரண மனிதனை மட்டுமின்றி, அறிவியல் வல்லுனர்களைக்கூட பெருவியப்பில் ஆழ்த்தக் கூடியதும், பாமரன் முதல் பண்டிதன் வரை பயன்படுத்திப் பயன் பெறக் கூடியதுமானதொரு கருவியே 'கணிதப் பொறி" (Computer) என்பது. இதுவும், மற்றெல்லா அறிவியல் சாதனங்களைப் போன்றே, பற்பல நூற்றுண்டுகளாக, உலகின் தலைசிறந்த சிந்தனையாளர் பலரும் சிந்தித்து உணர்ந்து உருவாக்கியதொன்று. இது கருவாகி உருவாகி உதித்து வளர்ந்த விதத்தினைக் காண்போம்.

கணிதப் பேராசிரியர்களும், எம்.ஏ., பி.ஏ., என கணிதத்தில் பட்டம் பெற்றவர்களும் கூட, நீண்ட எண்களடங்கிய பட்டியலை கூட்டத் தொடங்கினால், ஒவ்வொருமுறை கூட்டும்பொழுதும் ஒவ்வோர் விடை பெறுவதில் வியப்பொன்றுமில்லை. பெரும் பெரும் சமன்பாடுகளை (equations) எழுதி கணித்து, அவற்றினின்றும் தேவையான விடைகளை விநாடியில் விடுவித்து விடுவர். ஆனால், எண்கள் நிறைந்த கணக்குகள் போட வேண்டுமெனில் முகம் சுளிப்பர். இது யாவரும் அறிந்த ஓர் இடர்ப்பாடேதான். ஆதலின் இவ்வகை எண் கணிதத்தினை எளிதாக்கும் பொருட்டு, பலமுறைகள் பன்னெடுங் காலமாகவே வகுக்கப்பட்டு வந்துள்ளன. இவைகளில் முதன்மையானதும், எளிதானதும் "லாகிருதம்" (Logarithms) ஆகும்.

கொண்ட தொல்லை வீண் என்றே கூறுவேன்."

(ஷே-ஷே)

* * *

"சோமநாதபுரம் கோயிலை அரசாங்கத்தின் பணத்தைக் கொண்டு திருப்பணி செய்யக் கூடாது என்று ஒரு கிருஸ்துவர் ஒரு பத்திரிகையில் எழுதியிருக்கிறார், இக்கருத்தை நான் ஆதரிக்கிறேன். இந்திய யூனியன் மதச் சார்பற்ற அரசாங்கமாகும்; மதச்சார்பு கொண்டதல்ல."

—காந்தி ("ஹரிஜன்"7-12-47).

* * *

"களங்கமில்லாத மனச்சான்றுடன் பொதுத்தொண்டில் ஈடுபடுபவர், அதன் அவசியத்தை நாளுக்கு நாள் மேலும் நன்றாக உணர்வார்கள்; அவருடைய நம்பிக்கையும் வளர்ந்து கொண்டேயிருக்கும். சுயநலத்தைத் துறக்கத் தயாராயில்லாமலும், தன்னுடைய பிறவியின் பயனை அறியாமலும், உள்ள ஒருவர் பொதுத் தொண்டுப் பாதையில் செல்ல முடியாது. பொதுத் தொண்டில் ஈடுபடுவோர், தமக்கு இன்றியமையாத தேவைகளை மட்டும் எடுத்துக்கொண்டு மற்றவற்றை விலக்கிவிடவேண்டும். வசதிக் குறைவு ஏற்பட்டாலும் அமைதியாகவும், மனத்தில் கோபம் இல்லாமலும் கவலை இல்லாமலும் இருக்கவேண்டும்."

("யங் இந்தியா" - 9-9-26)

★காந்தியார் அரசியல்துறையில் அன்னியர் ஆட்சியை எதிர்த்துப் போராடியதும், சொந்த வாழ்க்கையில் மிகமிக எளிய வாழ்க்கை வாழ்ந்ததும் மட்டுமே சிறப்புக்குரியவை. மற்றப்படி சாதி, சமயம், கடவுள், மூட நம்பிக்கை - முதலிய சமுதாயத் துறைகள் அனைத்திலும் அவரது கொள்கைகள் வெறும் வெண்டைக்காய்!ஒரே வழ வழா! கொழ கொழா! ஒருவரியிலாவது வெட்டு ஒன்று, துண்டு இரண்டு-என்ற கருத்தைக் காணவே முடியாது.

ஆகையால்தான் எல்லோராலும் போற்றப்படக் கூடிய "மகாத்மா" ஆனார்! தம் பெயருக்கு முன்னால் பெருமைக்குரிய அடைமொழி நிலைத்து நிற்க வேண்டுமென்று ஆசைப்படுகின்ற பெருந்தலைவர் யாவரும் இப்படித்தான், "எல்லோரையும் திருப்திப்படுத்தும்" திருத்தொண்டில் ஈடுபடவேண்டும்! விளம்பரப் பிரியர்களான பெருந்தலைவர்களிடம் நிலையான, உறுதியான, கொள்கையை எதிர்பார்க்கமுடியாது. சமுதாயத் துறையில் இந்நாட்டுக்கு காந்தியார் ஆற்றிய பணி-பெரிய சுன்னம்... 0.

*"கோயிலாவது ஏதடா? குளங்களாவது ஏதடா?*
*கோயிலும் குளங்களும் கும்பிடும் குலாமரே!*
*கோயிலும் மனத்துளே; குளங்களும் மனத்துளே*
*ஆவதும் அழிவதும் இல்லை, இல்லை, இல்லையே."*

—சிவவாக்கியர்.

கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல் என்ற நான்கு வகை கணித முறைகளையும், முதல் இரண்டு முறைகளுக்குள் அடக்கும் பொருட்டு 'லாகிருதம்'' கண்டுபிடிக்கப்பட்டது. லாகிருதத்தைப் பயன்படுத்துவதால் எவ்வளவு பெரிய எண்களையும், மற்ற எவ்வளவு பெரிய எண்ணு லும் பெருக்குவதோ, வகுப்பதோ மிகவும் எளிதாகிறது. மேலும் எண்களின் மூலங்களை (Roots) கண்டுபிடிப்பதும் மடிப்புகளை (Powers) கண்டுபிடிப்பதும் எளிதில் முடிகிறது சாதாரணமாக உபயோகப்படுத்தும் லாகிருதம் "10" ஐ அடிப்படையாக (Base) கொண்டது. இந்த அடிப்படையில் எண்களைக் கீழ்க்கண்டவாறு எழுதலாம் :—

| | | | |
|---|---|---|---|
| $1 = 10^0$ | ·1 | $10^{-1}$ |
| $10 = 10^1$ | ·01 | $10^{-2}$ |
| $100 = 10^2$ | | |
| $1000 = 10^3$ | ·001 | $10^{-3}$ |
| $10{,}000 = 10^4$ | ·0001 | $10^{-4}$ |

அதாவது,

ஒன்றின் லாகிருதம் 0
பத்தின் லாகிருதம் 1
நூறின் லாகிருதம் 2

நாம் 100-ஐ. 1000-ஆல் பெருக்க வேண்டுமெனில், 100ன் லாகிருதமான 2-ஐயும் 1000ன் லாகிருதமான 3-ஐயும் கூட்டி கிடைக்கும் எண்ணுன 5-க்கு எதிர் லாகிருதம் (Anti logarithms) காண வேண்டும். இதையே $10^2 \times 10^3 = 10^5$ என எழுதுகிறோம். இவ்வாறு இரண்டு எண்களைப் பெருக்க வேண்டுமானல், அவற்றின் லாகிருதங்களைக் கூட்டி எதிர் லாகிருதம் காண்பதன் மூலம் விடை எளிதில் கிடைக்கிறது. ஒவ்வொரு எண்ணையும் 10ன் மடங்காக எழுதினல் மட்டுமே நாம் அதனை எளிதில் கையாள முடியும். ஆதலின் 10ன் அடிப்படையில் ஒவ்வொரு எண்ணையும் எழுதுவதற்குகந்தவாறு கணக்கிட்டு, லாகிருத அட்டவணை (Logarithmic Tables) என்ற சிறிய, ஆனல் மிகவும் பயனுள்ள, நூலாக வெளியிடப்பட்டுள்ளது. இதனுதவியால் எவ்வாறு எந்த எண்ணையும் 10ன் மடங்காக எழுதுவது எனக் காண்போம்.

எடுத்துக் காட்டாக, 1845 என்ற எண்ணை எடுத்துக் கொள்வோம். இதில் நான்கு இலக்கங்கள் உள. அதாவது எண் 1000க்கு மேற்பட்டதாகவும் 10,000க்குக் கீழ்ப்பட்டதாகவும் இருப்பதால், இதன் லாகிருதம் 3க்கும் 4க்கும் இடையிலிருக்கும். நான்கு இலக்கங்கள் எனக் கண்ட உடனேயே அவ்வெண்ணின் லாகிருத முழுப் பகுதி அல்லது லாகிருத குண எண் (Characteristic of the Logarithm) 3 என எழுதி விடலாம். மிகுதியுள்ள பகுதியைக் கண்டு பிடிப்பதற்குத்தான், லாகிருத அட்டவணையை நாட வேண்டும். இந்த அட்டவணையில் மொத்தம் இருபது நெடும் பகுதிகள் (Columns) உள. முதற்பகுதியில், 10 முதல் 99 வரை வரிசையாக எண்கள் காணப்படுகின்றன. அடுத்த 10 பகுதிகள் தலைப்பில் 0, 1, 2, 3 என 9 வரை எண்கள் இடப்பட்டிருக்கின்றன. அதற்கு அடுத்த 9 பகுதிகளும் சராசரி மிகுதி (Mean Difference) என்ற பொதுத் தலைப்பின்கீழ், 1, 2...... என 9 வரை தலைப்பு எண்கள் இடப்பட்டுள. நமக்குத் தேவையான ஐந்து வரிகள் மட்டும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

## லாகிருதங்கள்

| | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 16 | 2041 | 2068 | 2095 | 2122 | 2148 | 2175 | 2201 | 2227 | 2253 | 2279 | 3 | 5 | 8 | 11 | 13 | 16 | 18 | 21 | 24 |
| 17 | 2304 | 2330 | 2355 | 2380 | 2405 | 2430 | 2455 | 2480 | 2504 | 2529 | 2 | 5 | 7 | 10 | 12 | 15 | 17 | 20 | 22 |
| 18 | 2553 | 2577 | 2601 | 2625 | 2648 | 2672 | 2695 | 2718 | 2742 | 2765 | 2 | 5 | 7 | 9 | 12 | 14 | 16 | 19 | 21 |
| 19 | 2788 | 2810 | 2833 | 2856 | 2878 | 2900 | 2923 | 2945 | 2967 | 2989 | 2 | 4 | 7 | 9 | 11 | 13 | 16 | 18 | 20 |
| 20 | 3010 | 3032 | 3054 | 3075 | 3096 | 3118 | 3139 | 3160 | 3181 | 3201 | 2 | 4 | 6 | 8 | 11 | 13 | 15 | 17 | 19 |

1845 என்ற எண்ணிற்கு லாகிருதம் எடுக்க வேண்டுமெனில், முதல் இரு இலக்கங்களான 18ஐ முதல் நெடும் பகுதியில் கண்டு, அதற்கு நேரான வரியில் பார்க்க வேண்டும். மூன்ருவது இலக்கமான 4ன் கீழ் அவ்வரியில் காணப்படும் எண் 2648 ஆகும். அதே வரியில், சராசரி மிகுதிப் பகுதியில் நான்காவது இலக்கமான 5ன் கீழ் காணப்படும் 12ஐ இந்த எண்ணுடன் கூட்டிவரும் 2660தான், 1845ன் பகுதி லாகிருதம் (Mantiss) ஆகும். 1845ன் முழு லாகிருதம் 3·2660 ஆகும். இதிலுள்ள 3 என்னும் குண எண், நாம் எடுத்துக்கொண்ட எண்ணில், நான்கு இலக்கங்கள் உள எனக் குறிக்கிறது. நாம் 184·5 என்ற எண்ணிற்கு லாகிருதம் எழுத வேண்டுமெனில், 2·2660 என எழுதி விடலாம். ஏனெனில், கொடுக்கப்பட்ட எண்ணில், முழு எண்ணின் இலக்கங்கள் எத்துணை என கணக்கிட்டு, அதில் ஒன்று குறைவாக குண எண்ணை எழுத வேண்டும். பகுதி லாகிருதம் எடுக்கும்பொழுது, புள்ளியைப்பற்றி கவலைப்படாமல் எண்ணை 18, 4, 5 என்று எடுத்துக்கொண்டு முன்போலவே லாகிருதம் காண வேண்டியது தான். அஃதே போன்று, 18·45 எனும் எண்ணின் லாக். 1·2660 ஆகும். இப்போது, நாம் 1845 என்ற எண்ணை 195 என்ற எண்ணுல் பெருக்க வேண்டுமானுல், இரண்டு எண்களின் லாகிருதங்களையும் கூட்டி வரும் எண்ணிற்கு எதிர் லாகிருதம் காண வேண்டும்.

| | |
|---|---|
| 1845ன் | லாக். = 3·2660 |
| 195ன் | லாக். = 2·2900 |
| (1845 × 195)ன் | லாக். = 5·5560 |

லாகிருத அட்டவணையைப் போன்றே, எதிர் லாகிருத அட்டவணையிலும் 30 நெடும் பகுதிகள் காணப்படுகின்றன. முதல் பகுதியில் மட்டும் எண்கள் ·00விலிருந்து ·99வரை வரிசையாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அடுத்த 10 நெடும் பகுதிகள், 0, 1,...9 வரை தலைப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. அதற்கு அடுத்த 9 பகுதிகளும். 'சராசரி மிகுதி' எனும் பொதுத் தலைப்பின் கீழ் 1, 2,...9 எனத் தலைப்புக் கொடுக்கப்பட்டுள்ளது நாம் பார்க்க வேண்டிய பகுதி மட்டும் கீழே காணப்படுகிறது:-

## எதிர் லாகிருதங்கள்

| | 0 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | Mean Differences | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| ·50 | 3162 | 3170 | 3177 | 3184 | 3192 | 3199 | 3206 | 3214 | 3221 | 3228 | 1 | 1 | 2 | 3 | 4 | 4 | 5 | 6 | 7 |
| ·51 | 3236 | 3243 | 3251 | 3258 | 3266 | 3273 | 3281 | 3289 | 3296 | 3304 | 1 | 2 | 2 | 3 | 4 | 5 | 5 | 6 | 7 |
| ·52 | 3311 | 3319 | 3327 | 3334 | 3342 | 3350 | 3357 | 3365 | 3373 | 3381 | 1 | 2 | 2 | 3 | 4 | 5 | 5 | 6 | 7 |
| ·53 | 3388 | 3396 | 3404 | 3412 | 3420 | 3428 | 3436 | 3443 | 3451 | 3459 | 1 | 2 | 2 | 3 | 4 | 5 | 6 | 6 | 7 |
| ·54 | 3467 | 3475 | 3483 | 3491 | 3499 | 3508 | 3516 | 3524 | 3532 | 3540 | 1 | 2 | 2 | 3 | 4 | 5 | 6 | 6 | 7 |
| ·55 | 3548 | 3556 | 3565 | 3573 | 3581 | 3589 | 3597 | 3606 | 3614 | 3622 | 1 | 2 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 7 |

முதல் இரு இல்க்கங்களாகிய ·55ன் நேர் வரியில், மூன்ருவது இலக்கணமாகிய 6ன் கீழ் காணேப் படும் எண்ணுன 3597தான் பெருக்குத் தொகையின் முதல் 4 இலக்கங்களாகும். பெருக்குத் தொகையின் லாகிருதத்திலுள்ள குண எண் 5, அப்பெருக்குத் தொகையில் மொத்தம் 6 இலக்கங்கள் இருக்க வேண்டு மெனக் குறிக்கின்றது. ஆதலின் பெருக்குத் தொகை 359700 ஆகும். நேரிட இரு எண்களேயும் பெருக்கிக் கிடைக்கும் விடை 359775. ஆதலின் 3 இலட்சத்திற்கு 75 அதாவது, 4000க்கு 1 என்ற விகிதத்தில் கூடவோ குறைவாகவோ கிடைக்கலாம். இந்த அளவு வித்தியாசம் மன்னிக்கக் கூடியதே!

ஒவ்வொரு எண்ணிற்கும் இரண்டாம் மடங்கு (Square) மூன்ரும் மடங்கு (Cube), நான்காம் மடங்கு (Fourth power)... எனப் பல மடங்குகள் இருப்பது போலவே, அவற்றிற்கு மூலம் (Square root), மூன்ரும் மூலம் (Cube root), நான்காம் மூலம் (Fourth root).........எனப் பல மூலங்களும் உண்டு. 9 என்ற எண்ணே எடுத்துக் கொண்டால், அதன் மூலம் $\sqrt{9} = 3$ ஆகும். 9ன் இரண்டாம் மடங்கு ($9^2 = 9 \times 9) = 81$ ஆகும். அதன் மூன்ரும் மடங்கு ($9^3 = 9 \times 9 \times 9) = 729$ ஆகும். இப்போது 729ன் மூன்ரும் மூலம் ($\sqrt[3]{729}$) என்ன வென்ருல் 9 எனக் கூற முடியும். இதைப் போன்ற முழு எண்களின் மடங்குகள் அல்லாத எண்களின் மூலங்களேக் காண்பது, லாகிருதங்களின் உதவியில்லா விடில் முடியாத ஒரு செயலாகும். நமது பழைய எண்ணுன 1845ன் மூலமோ, மூன்ரும் மூலமோ காண வேண்டுமெனில் கீழ்க் கண்டவாறு லாகிருத மூலம் எளிதில் கண்டுபிடித்து விடலாம்:—

1845ன் லாக் = 3·2660.

1845ன் மூலத்தின் லாக். = (3·2660 ÷ 2) = 1·6330.

1845ன் மூன்ரும் மூலத்தின் லாக். (3·2660 ÷ 3) = 1·0887.

·6330ன் எதிர் லாக். = 4295 ஆகும். குண எண் 1 ஆக இருப்பதால், நமக்கு வேண்டிய எண்ணில் இரு இலக்கங்களே இருக்க வேண்டும். ஆகவே எண் 42·95ஆகும். இதுவே 1845ன் மூலமாகும். அதே போன்று ·0887ன் எதிர் லாக் 1227, குண எண் 1 ஆதலால், வேண்டிய எண் 12.27 ஆகும். இவ்வெண்ணே 1845ன் மூன்ரும் மூலமாகும் இவ்வாறே எந்த எண்ணிற்கும் எந்த மூலமும் கண்டுபிடிப்பது எளிது.


அதே போன்று மடங்குகள் கண்டுபிடிக்க, எண்களின் லாகிருதம் கண்டு அதனே, இரண்டால் பெருக்கிஞல், இரண்டாம் மடங்கின் லாகிருதமும், 3, 4, 5 ஆகியவற்ருல் பெருக்கிஞல் மூன்று நான்கு, ஐந்தாம் மடங்குகளின் லாகிருதமும் கிடைக்கும். அவற்றின் எதிர் லாகிருதத்தைப் பார்த்து எண்களே எழுதி விடலாம். இவ்வாறு லாகிருதங்களின் மூலம் பெருக்கல், வகுத்தல், மடங்குகள் காண்பது, மூலங்கள் காண்பது ஆகியயாவும், சிறுவகுப்பு மாணவர்கள் கூட எளிதில் செய்து முடிக்குமாறு வழிகோலப்பட்டது. பள்ளியில் மாணவர்கட்கு மட்டுமன்றி, ஆய்வு கூடத்திலும், ஆராய்ச்சி நிலேயங்களிலும், இம்முறையைக் கையாள்வதால், மிகக் குறைவான காலத்தில், அதிகமான அயர்வுதரும் உழைப்பின்றி பெரும் பெரும் கணக்குகளே செய்து முடிக்க முடிகிறது.

“இயங்கோல்”

இதற்கு அடுத்த முன்னேற்றம். இவற்றை ஒரு சிறு கணித சாதனத்தின் மூலம் செய்து முடிக்கலாமென ஆராய்ந்து, அச்சாதனத்தை அமைத்ததே. இதனை ஆங்கிலத்தில் Slide rule என்பர். நாம் அதற்கு இயங்கு கணிதக் கோல் என்ஞே அல்லது சுருக்கமாக ‘‘இயங்கோல்’;* என்ஞே பெயரிடலாம். இதன் மூலம் நாம் லாகிருத அட்டவணையைப் பயன்படுத்த செய்து முடிக்கக் கூடிய எல்லாவித கணித முறைகளையும் மேலும் எளிதாகச் செய்வதுடன், சில விதமான சமன்பாடுகளை அமைத்து அவற்றின் விடைகளைக்கூட இவற்றின் வாயிலாகக் காண முடியும். நமது கணிதங்களின் தரத்திற்குத் தக்கவாறு பற்பல விதமான இயங்கோல்கள் இருக்கின்றன. சிலவற்றில், எளிதான வகைக் கணக்குகளையே (பெருக்கல், வகுத்தல், மூலங்கள் காணல், மடங்குகள் காணல் ஆகியவையே) செய்து முடிக்க முடியும். அதற்குத் தக்கவாறு அவற்றில் குறைந்த அளவிலேயே அளவுகோல்கள் (Scales) இருக்கும். மேலும் கடினமானதும், பலவகைப் பட்டதுமான கணக்குகளை செய்து முடிக்கக் கூடிய இயங்கோல்களில் அளவுகோல்களின் எண்ணிக்கையும் தக்கவாறு மிகுதிப்படும்.

மிகவும் எளிய வகை இயங்கோல் ஒன்றினை நாம் இங்கு விவரிப்பதற்கு எடுத்துக் கொள்வோம். கீழ்க்காணும் படத்தில், சாதாரணவகை இயங்கோலின் பகுதிகள் யாவும் குறிப்பிடப்பட்டுள்ளன.

இயங்கோலின் முக்கிய பகுதிகள்




மேலும் கீழுமாக அமைக்கப்பட்டுள்ள நிலையான அளவுகோல்களின் உட்புறத்தில் வரம்புகள் (Grooves) உள. அவ்வரம்புகளினூடே நடுவிலுள்ள இயங்கும் அளவுகோலினை இடப்புறமும் வலப்புறமும் நகர்த்தலாம். மற்ருெரு இயங்கும் பகுதிக்கு ‘Runner’ என்றே வழங்குவோம். இது ஒரு கண்ணுடி அல்லது அதைப் போன்ற பிளாஸ்டிக் துண்டே ஆகும். இதன் நட்ட நடுவில், அளவுகோல்களுக்குச் செங்குத்தாக மயிரிழை போன்ற மெல்லிய கோடு, அடிப்பக்கத்தில் வரையப்பட்டுள்ளது. இக்கோடுதான், அளவுகோல்கள் குறிக்கும் அளவுகளைத் தவறின்றிப் படிப்பதற்கோ, ஆரம்பத்


* வேறு, இதைவிடச் சிறந்த பொருத்தமான, எளிதான பெயர்கள் ஏதேனும் உங்களுக்குத் தோன்றின் எழுதி அனுப்பலாம்.

தில் எண்களை ஒன்றோடொன்று சரியாக படியும்படி வைப்பதற்கோ, விடைகளைக் கண்டெழுதுவதற்கோ பெரிதும் உதவுகின்றது. இவ்வகை இயங்கோல்களில் 4 அளவுகோல்கள் வரையப்பட்டுள்ளன. ஒவ்வொன்றும் சரியாக 25 செ. மீ. நீளமுள்ளது. அவைகளை A, B, C, D, அளவுகோல்கள் எனக் குறிப்பிடுகிறோம். Aயும் Dயும் நிலையான பகுதிகளிலும், Bயும் Cயும் இடையேயுள்ள இயங்கும் துண்டத்தின் மேலும் கீழுமாகவும் வரையப்பட்டுள்ளன. இவை யாவும் லாகிருத அளவுகோல்களே ஆகும். அதாவது சாதாரண அளவுகோல்களில் 0 இலிருந்து ஆரம்பித்து 1, 2, 3...என சமமான இடை வெளிகளில் குறிக்கப்பட்டிருக்கும். இதில் ஆரம்ப எண்ணே 1தான். ஏனெனில் 1ன் லாக் 0. ஆதலின் 1 எனக் குறிப்பிடப்பட்டுள்ள இடம் அதன் லாகிருதத்தையே குறிக்கிறது. அடுத்து 2ன் லாக் ·3010; 3ன் லாக் ·4771; 4ன் லாக் ·6021; 5ன் லாக் ·6990........... ஆகவே 2 என்ற எண் கோலின் கிட்டத்தட்ட மூன்றின் ஒரு பங்கினளவிலே காணப்படுகிறது. எண்கள் செல்லச் செல்ல, அவற்றிடையே உள்ள இடைவெளிகள் குறைந்துகொண்டே செல்கின்றன. Cயும் Dயும் ஒரேவிதமான அளவுகோல்கள். எண்ணிக்கைகளும் ஒரே விதமாக வரையப்பட்டிருக்கின்றன. இவற்றின் வலது கோடியிலும், இடது கோடியிலும் சுட்டு எண்களாக (Index) முதல் எண்ணின 1 குறிக்கப்பட்டிருக்கிறது. இவ்விரு சுட்டு எண்களுக்கிடையே ஒவ்வோர் அளவுகோலும் லாகிருத அளவில் பிரித்து தகுந்த உட்பிரிவுகளுடன் எண்ணிக்கை இடப்பட்டுள்ளது.

மற்றைய இரு கோல்களான Aயும் Bயும் ஒரேமாதிரியானவை. இவை ஒவ்வொன்றிலும் 12·5 செ.மீ. நீளமுள்ள இரண்டிரண்டு அளவுப் பகுதிகள் உள. இவைகளும் லாகிருத அளவிலேயே வரையப்பட்டுள்ளன. இந்நான்கு அளவுகோல்களைக் கொண்டே பெருக்கல், வகுத்தல், இருமடங்கு காணல், மூலங்களைக் கண்டுபிடித்தல், விகிதங்களை அறிதல், மற்றும் சில வகைச் சமன்பாடுகளைத் தெளிவுபடுத்தல் ஆகியவற்றைச் செய்து முடிக்கலாம்.

இயங்கோலில் கணக்குகளை அமைப்பதற்கும், அவற்றின் விடைகளைத் தவறின்றி எடுத்தெழுதுவதற்கும் முதற்படியாக, அளவுகோல்களில் குறிப்பிடப்படும் எந்த இடத்திலுள்ள எண்ணையும் சரியாக மதிப்பிட அறிந்து கொள்ள வேண்டும். இதை நன்கு அறிந்து கொண்டவர்களுக்கு, இயங்கோலினைக் கையாள்வது, மற்றெவ்விதமான சாதாரண அளவுகோல்களைக் கையாள்வதைப் போன்று மிக எளிதாகும். கீழ்க்காணும் படத்தில், "ரன்னர்"மூன்றுவெவ்வேறு இடங்களில் காண்பிக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு இடத்திலும் அதிலுள்ள மயிரிழைக் கோடு குறிப்பிடும் எண் என்ன என்பதைக் காண வேண்டும்:—

'ரன்னர்' மூன்று இடங்களில் வெவ்வேறு எண்களைக் குறிக்கின்றது.




1. கோடு அளவு கோலின் முதற்பகுதியிலேயே விழுவதால், எண்ணின் முதல் இலக்கம் 1.

2. அடுத்து, உட்பிரிவில் 1-க்கும் 2-டிற்கும் இடையே விழுவதால், அடுத்த இலக்கமும் 1.

3. அவ்வுட்பிரிவுகளில் மேலும் பகுக்கப்பட்டுள்ள ஐந்தாவது பிரிவில் விழுவதால் அடுத்த இலக்கம் 5.


4. ஆகையால், முதல் இடத்தில் குறிப்பிடப்படும் எண் 115 ஆகும். இதே இடம்தான் 1150, 115,000, 11·5 அல்லது ·115 ஆகிய எண்களையும் குறிப்பிடும். நாம் எடுத்துக் கொண்ட எண்ணிலுள்ள முதல் மூன்று இலக்கங்கள் எவை என்பதைத்தான் அதிலுள்ள இடம் குறிப்பிடும். அதில் புள்ளிகள் எங்கே இருக்க வேண்டும் மென்பதையோ, மொத்தம் எத்துணை இலக்கங்கள் உண்டு என்பதையோ அதினின்று அறிந்து கொள்ள முடியாது. நாம் நினைவிலிருத்திக் கொள்ள வேண்டியதுதான்.

இதே போன்று, இரண்டாவது, மூன்றாவது இடங்களில் குறிப்பிடப்படும் எண்கள் முறையே 1445, 1815 ஆகும்.

ஒரு எண்ணை மற்றதால் பெருக்குவதற்கு, Aயும் Bயும் அல்லது Cயும் Dயும் பயன்படுத்தப்படலாம். வழக்கமாக Cயும் Dயுமே உபயோகப்படுத்தப்படும். ஏனெனில் இவற்றில் அளவுப் பகுதிகள் அதிக நெரிசலின்றி இருப்பதால், எண்களை எளிதாகவும் சரியாகவும் குறிப்பிட முடியும். அதனால் தவறுகளும் குறைவாகவே இருக்கும்.

முதலில் ரன்னரிலுள்ள கோட்டினை D கோலிலுள்ள பெருக்கும் அல்லது பெருக்கப்படுகின்ற எண்ணின் மீது படியுமாறு வைக்கவேண்டும். அடுத்து, C கோலிலுள்ள இடது சுட்டு எண் (அல்லது வலது சுட்டு எண்) இந்த எண்ணிற்கு நேர் மேலாக கோட்டுடன் இணைந்திருக்குமாறு அமைக்க வேண்டும். பின்னர், C கோலில் இரண்டாவது எண்ணைக் கண்டு, ரன்னரை நகர்த்தி அதன் கோடு அவ்வெண்ணுடன் ஒன்றியிருக்குமாறு அமைக்க வேண்டும். அதன்கீழ் D கோலில் காணப்படும் எண்தான் நாம் எடுத்துக் கொண்ட இரு எண்களின் பெருக்குத் தொகையாகும்.

## ஒரு எண்ணை மற்றதால் பெருக்கி விடை காணும் விதம்




இப்பெருக்குத் தொகை எவ்வாறு கிடைக்கின்றது என்பதை எளிதில் அறிந்து கொள்ளலாம். நாம் ஏதேனும் இரு எண்களைப் பெருக்க வேண்டுமானல், அவற்றின் லாகிருதங்களைக் கண்டு பிடித்துக் கூட்டுகிருேம். இக் கூட்டுத் தொகையே நமக்கு வேண்டிய விடையின் லாகிருதம். இதற்கு எதிர் லாகிருதம் கண்டு பிடித்தால் நமக்கு விடை கிடைக்கிறது. நாம் இப்போது 184 என்ற எண்ணை, 19 என்ற எண்ணல் பெருக்க வேண்டுமானல் (முன் கொடுக்கப்பட்ட அட்டவணையிலிருந்து)

184ன் லாக். = 2·2648


19ன் லாக். = 1·2788

பெருக்குத் தொகையின் லாக் = 3·5436

பெருக்குத் தொகை (3·5436ன் எதிர்லாக்) = 3496. இம்முறையில் பெருக்குவதற்கு, இரு எண்களுக்கு லாகிருதம் கண்டு கூட்டிப் பெருக்குத் தொகையின் லாகிருதத்தை அறிய வேண்டியிருக்கிறது. அதன் எதிர் லாகிருதத்தைப் பார்த்து விடை அறிந்து கொள்ள வேண்டும். இவ்வாறு பெருக்குத் தொகை காண்பதுஎளிதேஆனலும்,சிறிது நீண்ட வழியாக இருப்பதால், அதிகமான எண்களைப்பெருக்கும் போதும், வகுக்கும் போதும் சற்று அயர்வு தோன்றும். ஆனல் இவை யாவற்றையும் இயந்திர கதியில் இயங்கோல் மிக மிக எளிதாகச்செய்து முடிக்கிறது. முன்னரே கூறியவாறு, இதிலுள்ள அளவு கோல்களிலுள்ள எண்கள் அவற்றின் லாகிருத அளவிலேயே குறிக்கப் பட்டுள்ளன. D கோலின் இடது சுட்டெண்ணிலிருந்து 184 என்ற எண்வரை உள்ள நீளம் 184ன் லாகிருதத்தையே குறிக்கிறது. அதே போல் C கோலின் இடது சுட்டெண்ணிலிருந்து 19 என்ற எண் வரையுள்ள நீளம், 19ன் லாகிருதத்தையே அளவாகக் கொண்டுள்ளது. ஆதலின் நாம், C கோலின் இடது சுட்டெண்ணை D கோலிலுள்ள 184 என்ற எண்ணுடன் பொருத்தி வைப்பதன் மூலம் 184ன் லாகிருதத்துடன் வேண்டும் எண்ணின் லாகிருதத்தைக் கூட்டிக் கொள்ள வாய்ப்பு ஏற்படுகிறது. ஆதலின் C கோலின் 19 என்ற எண்ணின் கீழ் D கோலில் காணப்படுகின்ற எண் நேரிட பெருக்குத் தொகையே கொடுக்கிறது.

எண்களின் மூலங்களையும், மடங்குகளையும் கண்டுபிடிக்க, A கோலினையும் D கோலினையும் பயன்படுத்த வேண்டும். முன்பே குறிப்பிட்டவாறு D கோலானது 25 செ. மீ. நீளமுள்ள ஒரே லாகிருத கோலாக அமைக்கப் பட்டுள்ளது. ஆனால் A கோலில் 12.5 செ. மீ. நீளமுள்ள இரு கோல்கள் வரையப்பட்டுள்ளன. இரு கோல்களும் லாகிருத அளவிலேயே வரையப்பட்டவை. இம்மாதிரி வரையப்பட்டுள்ளதாலேயே, மூலங்களைக் காண்பதும், மடங்குகளை அறிவதும் மிக எளிதாகிறது. நாம் ரன்னரிலுள்ள கோடு ஏதாவது ஒரு குறிப்பிட்ட இடத்தில் இருக்குமாறு வைத்தால் D கோலில் ஒரு எண்ணையும் A கோலில் மற்றோர் எண்ணையும் குறிப்பிடும். A கோலில் காணப்படும் எண் D கோலில் காணப்படுகின்ற எண்ணின் மடங்கு, அல்லது D கோலில் காணப்படும் எண் A கோலில் குறிப்பிடப்பட்டுள்ள எண்ணின் மூலம் ஆகும். ஆதலின், நாம் ஏதேனும் ஒரு எண்ணின் மூலத்தை காணவேண்டுமெனில், அவ்வெண்ணுடன் பதியுமாறு ரன்னரிலுள்ள கோட்டினை அமைத்துப் பின்னர், அக்கோடு D கோலில் குறிப்பிடும் எண் எதுவென்று அறிய

A கோலிலும் D கோலிலும் உள்ள எண்களின் உறவு





வேண்டும். ஆனால் A கோலில் இருகோல்கள் இருப்பதால் சரியான விடை கிடைப்பதற்கு எந்தப் பகுதி கோலிலுள்ள எண்ணுடன் கோட்டைப் பொருத்த வேண்டுமென்று சரிவர தெரிந்து கொள்ள வேண்டும்.

1. நாம் மூலம் காணவேண்டிய எண் ஒன்றைவிடப் பெரிதாகவும், ஒற்றைப்படை இலக்கங்கள் கொண்டதாகஇருந்தாலும்(உ-ம்: 1.4, 143, 100, 10475) ஒன்றைவிடச் சிறிதாக இருந்து, தசமப் புள்ளிக்கும் முதலாவது எண் இலக்கத்திற்குமிடையே ஒற்றைப்படை சுழிகள் கொண்டதாகவும் உள்ள போதும் (உ-ம்: ·000373; ·0172...) A கோலிலுள்ள இடதுபக்க கோலையே பயன்படுத்தவேண்டும்.

2. எண் ஒன்றைவிடப் பெரிதாக இருந்து இரட்டைப்படை இலக்கங்கள் கொண்டதாக இருந்தாலும் (உ-ம்: 14, 10·5, 1120·5,......) ஒன்றைவிடச் சிறிதாக இருந்து, தசமப் புள்ளிக்கும் முதலாவது எண்ணிலக்கத்திற்குமிடையே இரட்டைப்படை சுழிகள் கொண்டதாகவும் அமைந்தால் (உ-ம்: ·005, ·00002734...), வலது பக்கத்தில் அமைந்துள்ள கோலினையே பயன்படுத்த வேண்டும்.

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

## 184 × 19 = 3496 என இயங்கோலின் மூலம் கண்டு பிடித்தல்




இதே போன்று, ஒரு எண்ணை மற்றதால் வகுப்பதும் எளிதில் செய்து முடிக்க முடியும். 18 × 3 = 54 என்றால், 3 = 54 ÷ 18 என்று யாவரும் அறிவோம். ஆகவே லாக் 18 + லாக் 3 = லாக் 54 என்றால், லாக் 3 = லாக் 54—லாக் 18 என்பதும், லாக் 18 = லாக் 54 லாக் 18 என்பதும் எளிதில் புலனாகிறது. நாம் இப்போது 54 என்ற எண்ணை 18 ஆல் வகுக்க வேண்டுமானால் கீழ்க்கண்டவாறு செய்யவேண்டும்:—


1. முதலில் வகுபடு எண்ணான 54ஐ D கோலில் கண்டு, அதனுடன் ரன்னரிலுள்ள கோடு பொருந்துமாறு ரன்னரை நகர்த்தி வைக்கவேண்டும்.

2. அடுத்து C கோலில் வகுக்கும் எண்ணான 18ஐக்கண்டு அவ்வெண் 54ன் நேர் மேல் வருமாறு C கோலினை நகர்த்தவேண்டும்.

3. இப்பொழுது C கோலிலுள்ள சுட்டு எண் D கோலில் எந்த எண்ணை காண்பிக்கின்றதோ, அந்த எண்ணே நமக்கு வேண்டிய விடையாகும். இதை தவறின்றி அறிந்து கொள்வதற்காக ரன்னரிலுள்ள கோடு C கோலிலுள்ள சுட்டு எண்ணுடன் பதியுமாறு ரன்னரை நகர்த்த வேண்டும்.

நாம் படிப்படியாக செய்ய வேண்டிய முறைகளை கீழ்க் காணும் படம் விளக்குகிறது.

## 54 ÷ 18 = 3 என இயங்கோலினைக் கொண்டு அறியும் விதம்



சோ. இலட்சுமிரதன் பாரதி, எம்.ஏ., பி.எல்.

# சமூக நீதிக்கு வழி

[சம வாய்ப்பு இருந்தாலன்றி சமூக நீதி கிடைக்காது என்கிறார், தமிழர் சமுதாயத்தைப் பற்றி ஆழ்ந்து ஆராய்ந்து அறிந்துள்ள இக்கட்டுரையாளர். சாதி, பொருளாதார மேடுபள்ளம் — முதலிய நீடித்த கோளாறுகளை நீக்கும் வழியையும் ஆராய்கிறார். பொது நலத்தலைவர்கள் படித்துணர்வார்களாக. —ஆசிரியர்]

இராமசாமிப்பெரியார் வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவத்திற்காக (Communal Representation)ப் போராட்டம் நடத்தப் போகிறதாகப் பேசி இருக்கிறார்கள்.

'பிரதிநிதித்துவம்' எந்தெந்த வகுப்புகளுக்கு? எங்கெங்கெல்லாம்? எந்த விகிதாசாரப்படி? இவைபோன்ற கேள்விகள் எழுகின்றன.

'ஹிந்து' என்றழைக்கப்படும் பெரும் சமூகத்தைச் சார்ந்தவர்கள் என்று சொல்லப்படும், தீண்டாதார் எனும் 'பட்டியலில் விவரித்த சாதிகள்' (Scheduled castes) 'பூர்வீகக்குடிகள்' (Tribes) ஆகிய இருவகையினர்களுக்கும் அரசாங்க அலுவல்கள் முதல் சட்டசபைகள் வரை, இடம் ஒதுக்கிப் பிரதிநிதித்துவம் ஏற்கனவே அளிக்கப்பட்டிருக்கிறது. இதைத் தவிர பிற்பட்ட வகுப்புக்கள் (Backward classes) மிகவும் பிற்பட்ட வகுப்புக்கள் (Most backward cla-sses)என்ற பட்டியல்களும் தயாரிக்கப்பட்டு பிரதிநிதித்துவம் அளிக்கப்படுகிறது. பூதேவர்களைத்(பிராமணர்கள்) தவிர்த்து மற்றெல்லோரும் அடியார்க்கு அடியாராகும் பாரம்பரியத்தில் மோகங்கொண்டவர்கள் போலும்! அல்லது ஒதுக்கிக் கீழே தள்ளப்பட்டவர்கள்பால் ஏசுநாதர் கூறிய அருளுரைகள் பலித்து வருவதினால் போலும்!

"வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம்" கோரிய பிராமணரல்லாதார் இயக்கம் பரவிப்பெரிதும் வெற்றியுற்றதை நாம் அறிவோம். இன்றைய சென்னை மந்திரி சபையைப் பார்த்தால் அது நூற்றுக்கு நூறு வெற்றி பெற்று விட்டதென்றே சொல்லலாம். முதலில் கேட்டாலும் பின்னர் வாக்குப்பட்டியல்களில் (Voters' lists) தங்களுடைய மிகுதியான பெரும்பான்மைபற்றி, வெற்றி பெற்றதனால் சட்டமன்றங்களிலும் கோரிய வகுப்புவாரி பிரதிநிதித்துவம் பின்னர் நழுவவிடப்பட்டது. இதர நிறுவனங்களிலும் பட்டம் பதவிகளிலும்தான் இத்தகைய பங்கீட்டைக் கோருவதாக எடுத்துக்கொள்ள வேண்டும்.

பெற்றோர்—பிள்ளைகள், ஆசிரியர்—மாணக்கர், ஆண்—பெண், வயதானவர்—இளைஞர் போன்ற நிலையாக இருக்கும் வகுப்புக்களைப் போல் அல்லாமல்,

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு இயங்கோலின் உதவி கொண்டு, பெருக்கல், வகுத்தல், மூலங்கள் காணல், மடங்குகள் தெரிந்து கொள்ளல் யாவற்றையும், பேப்பர் பென்சில் கூட இல்லாமல் செய்து முடிக்க முடிகிறது. இவற்றைவிட வளர்ச்சியடைந்துள்ள மற்ற கணிதப் பொறிகளைப் பற்றி அடுத்த இதழில் காண்போம்.

தன்மையையும் சிறப்பையும் கெடுத்துவிடும்.

மக்களுக்குள்ளே எழுகின்ற உறவுகளே அவர்களை ஒரு சமூகமாக்குகின்றன. அத்தகைய உறவுகளின் பரப்பையும் ஆழத்தையும் அளவிடவோ அறுதியிட்டுக் கூறவோ இயலாது. சில பொது இயல்புகளைக் கொண்டு அவற்றை வகைப்படுத்துகிறோம். வாழுகின்ற சுற்றுப்புறச் சூழ்நிலைகளைக் கருதியும், அவற்றில் காணும் பொதுத்தன்மைகளைக் கொண்டும் மக்களைத் தனித்தனியான பல நாட்டினர்களாகக் குறிக்கிறோம். அவர்கள் குடியிருக்கும் ஊர், நகர், நிலப்பரப்பு ஆகியவற்றிலிருந்து, கடற்கரை (நெய்தல்) மலை (குறிஞ்சி) காடுகள் (முல்லை) நீர்வளம் நிறைந்த நிலம் (மருதம்) பாலைவனம், இன்னும் ஓர் மொழி பேசும் பகுதி, ஒரே மன்னற முறைநிலவும் தேசம், ஆகியன வரைக்கும், அந்தந்த வகையில் பொதுஇயல்புடைய மக்கட் பிரிவுகளைக் காண்கின்றோம்; பிறப்பையே பிரதானமாகப் பிடித்து, வழிவழியாக வாழும், பலபூர்வீக இனங்களையே முதலில் மக்கள் அறிந்தனர் இவ்வாறாகப் பிறப்பும், மொழியும், தொழிலும் வழக்கும் மக்கட் பிரிவுகளுக்கு அடிப்படையாகவும், அவர்களுக்குள் ஏற்படும் உறவுகளுக்கு உரனும் திறமும் தருவனவாகவும் அமைகின்றன.

இவற்றுள் நெடும் பண்டைக் கால முதல் நேர்ந்துவரும் நெருங்கிய உறவிற்கு பிறப்பே அடிப்படையாக இருந்திருக்கிறது.

பிறந்த குடும்பம் (Family) குலம் (Genes) பூர்விக இனம் (Tribes & Races) சாதி (Caste) ஆகியனவெல்லாம் அத்திறத்தன. எனினும் போகப் போகக் கூடிப் பிரியும் உறவுகளால் ஆகிய வாழ்க்கையில் பிறப்பாகிய பாசவலையில் இருந்து விடுபட்டுச் சிறிது சிறிதாக ஒத்தது அறிந்து சேர்ந்து வாழும் ஒரு புதிய அன்பு, ஒப்புரவு, அருள் போன்ற ஆழ்ந்த பரவலான உன்னத நிலையை மக்கள் தேடும் போக்கைப் பார்க்கிறோம். அறிவுடைய மக்கள் விரும்பிப் போற்றுவதும் அதுவே. மக்களது நீண்ட பெரும் வரலாற்றுப் போக்கைப் பிறப்பினால் பெற்ற பதவியில் அடைபட்டு அமைவதில் ஆரம்பித்து, தன்னையே ஆளும் அறிவு பெற்று, உடன்பாட்டினால் அமைத்துக்கொள்ளும் உறவு நிலைமைக்கு (From Status to Contrac ) உயர்வதாகச் சொல்கிறார்கள் மக்கள் அனைவரும் இத்தகைய இடைநிலைப் போக்கின் பல படிகளிலேயே காணப்படுகிறார்கள்; மக்கள் எல்லோரையும் தனித்தோ, அவரவர்கள் தொகுதிகளைக் கொண்டோ, உருவிலும் திருவிலும், உள்ளத்தாலும் திறமையாலும் எல்லா வகையாலும் ஒரே படியாக ஒத்துச் சமமானவர்கள் (Equal) என்று சொல்ல முடியாது. ஒருவரிலிருந்து வேறு ஒருவர் தனித்துணரக் கூடிய வேறுபாடு உடையவர்களாகவே இருந்து வருகிறார்கள்.

## மனிதனும் செல்வமும்

மனிதர் உணவை மனிதர் பறித்து, நோகச் செய்யும் அநீதியும் கொடுமையும் பெருக்கெடுத்து ஓடிய காலையில் எழும் பெரும் புரட்சிகளில் பேர் போனது ஃபிரெஞ்சுப் புரட்சி. அதில் "விடுதலை, சமத்துவம், சகோதரத்வம்" என்ற மக்கட் பெருங்குரல் அலைகள் கொந்தளித்துக் குழம்பி எழுந்தன. அதை அடுத்து இத்தகைய கேடு

மறைந்து போகக்கூடியதும் ஒழித்துக்கட்ட வேண்டியதுமான சாதிகளை, வகுப்புக்கள் காரண மாக நிலையான பிரதிநிதித்துவம் கேட்பது, அவைகளை நிலைத்து விடச்செய்வதற்கும் பயன்படுத் தலாம்.

சாதியும் வகுப்பு பேதங்களு மில்லாததொருசமூகம்(Casteless and Classless Society) வேண் டும் என்பது காந்தி அடிகள் முதல் பெரியார் வரை ஒப்ப முடிந்தமுடிவு. அப்படியானால் அந்த நிலைமை கைகூடும் வரை அவற்றைக் கண்ட இடத்தில் எல்லாம் எதிர்த்துப் போராடு வதும். அவற்றை அனுசரிப்பவர் களையோ, ஆதரிப்பவர்களையோ ஒதுக்கித்தள்ளுவதுமே நேரடி யான சிறந்த வழியும், முறையு மாகும் அத்தகைய போக்கில் தயக்கமும் தளர்வும் ஏற்பட்டதி னாலேயே இன்று காங்கிரசு உள் ளிட்ட பல கட்சிகளும், சாதிக ளின் பேரால் வாக்குரிமை பெற்று, அவற்றிற்குச் செல்வாக் கும் ஆதரவு மளித்து நிலை பெறச் செய்யும் அளவிற்கு வந்து விட் டோம். "வன்னியர் வாக்கு அன் னியருக்கில்லை" போன்ற தேர்தல் முரசொலிகளைக் கேட்டஞ்சுகி றோம்

சாதிகளையும் வகுப்புக்களையும் நாம் ஒழித்துக்கட்டாத வரை பட்டம், பதவி, செல்வாக்கு, அதி காரம் ஆகியவற்றை யெல்லாம் ஒருசில சாதிகளும் வகுப்புக்க ளும் மிகுதியாக அடைந்து அனு பவிப்பதைத் தடுத்து அவற்றில் பிறவகுப்புக்களுக்கும் விகிதாசா ரப்படி பங்குதர வேண்டும் என்ற வாதம் நியாயமானதே. ஆனால் சாதிகளையும் வகுப்புக்களையும் ஒழித்துக்கட்டும் முயற்சிக்கும், போக்கிற்கும் ஊறு ஏற்படாத வகையில் அதைச் சாதிப்பதெப் படி என்ற கேள்வி பிறக்கின்றது.

## சாதி உணர்ச்சியின் வேர்

வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கேட்டு நீதிக்கட்சியும் (Justice party) தென்னிந்திய நல் உரி மைச்சங்கமும்தோன்றியபின்னர் சாதிகளையே ஒழிப்பதற்குத் தன் மான இயக்கமும் (Self Respect Movement) திராவிடர் கழகமும் பெரியார் தலைமையில் நடத்திய போராட்டங்கள் பல. இந்தியா வின் இதர பகுதிகளிலும் சமூக சீர்திருத்தச் சங்கங்களில் போதிய விரைவு காணாத படியி னால் சாதியை ஒழிப்பதற்கு 'ஜட் பட் தோரக் மண்டல்' போன்ற மன்றங்களை நிறுவிப் பாடுபட்ட னர். எனினும் சாதிகள் இன்னும் ஒழிந்தபாடில்லை. அவற்றின் வேர்கள் ஆட்டங்கண்ட காலத் தில் அதிகார மோகவலையில் அகப்பட்ட அரசியல் கட்சிகளின் செயல்களால் தேர்தல்கள், நீர் பாய்ச்சி அவற்றை மீண்டும் வலுப்பெற்று வளரச் செய்கின் றன சாதிகளையே வேரோடு பிடுங்கி எறியும் தீவிரத்திட்டங் களை விடுத்து. பதவிகளை வகுப்பு வாரியாகப்பங்கீடு செய்வதைமட் டும் வற்புறுத்தினால், பிராமணர் களுக்கு விரோதமாக எழுந்த உணர்ச்சி போன்றே, பிராமண ரல்லாதாரிடையே மிகுதியான பங்குகளைப் பெறும் காரணத் தினால், மலையாளிகள், முதலியார் கள், நாடார்கள்போன்றபலவகுப் பினர்கள் பேரிலும் அது வெறுப் புணர்ச்சிகளை எழுப்பி, மக்களை மயங்கச் செய்யலாம். அத் தகைய போக்கு முடிவில்லாத சாதிச் சுழற்சிகளிலேயே (Caste cycles) மக்களைக் கொண்டு செலுத்தும். சாதியை விட்டவர் கள் மற்ற சாதிகளில் இருந்தும் சமூக உறவுகளில் இருந்தும் விடு பட்டவர்களாகி விடுவதுடன் அமையும். சாதிக் குரோதம் புகுந்து, அந்த நிறுவனங்களின்

களுக்கெல்லாம் "பொருள் அல்லவற்றையும் பொருளதாகச் செய்யும்" பொருளும், அதையே மூலதனமாகக்கொண்டு உயரும் முதலாளித்துவச் சுரண்டலுமே காரணமென்ற வாதம் வலுத்து, நிலத்தையும், மூலதனத்தையும் பொது உடைமையாக்கிய ருஷ்ய-சீனப் புரட்சிகளும் தோன்றின. சமூகப் பொதுமைக் கொள்கையும் (Socialism), சமுதாயப் பொது உடைமைக் கொள்கையும் (Communism) அவற்றின் விளைவுகளே. மக்களுடைய ஆளுமையை (Personality)யும் திறமையையும், தங்களுடைய தேவைகளுக்கு மேற்பட்ட அளவில் பொருளைத் தேடி உடைமையாக்கிக் கொள்ளும்படி (Private Property) விட்டுவிட்டால், அது அவர்களைச் சுயநலச் சுரண்டுதலிலேயே சேர்க்குமென்பது இவ்வாதிகளின் முடிந்த துணிவு. உடையவர்—இல்லாதவர் (The Haves or Bourgeoisie and the Have nots or Proletariat) என்ற இரு கட்சியினர் தோன்றுவதும் அது வகுப்புப் போராட்டத்தை (Class War) விளைவிப்பதும், இறுதியில் இல்லாதவர்கள் சர்வாதிகார ஆட்சி (Dic a orship of the proletariat) நிலமிசை ஓங்குவதும் விலக்கொணு நிகழ்ச்சிகளென்பது இவர்களுக்குச் சரித்திர உண்மைகள். மனித இனத்தையே ஆளுவது பொருளுடைமையென்றும் அதை முதலாளி—தொழிலாளி ஆகிய இரு கூறுகளாக்கி, அதனல் விளையும் விரோதத்தையும் விபரீதங்களையும் சமுதாயப் பொது உடைமையினர் மிகைப்படுத்தி, தொழிலாளிகளுக்கு வெற்றிதரும் வகுப்புப் போரை விரைவினில் விழைகின்றனர். சமூகப் பொதுக் கொள்கையினர் (Socialists) இவ்விரோதங்களை வளரவிடாமல் தடுத்துப் பொதுமையைப் பரப்புவதற்கு அனுமதியும் சட்டரீதியுமான ஆட்சி முறை வழிகளைத் தேடுகின்றனர். ஒவ்வொருவரும் தங்கள் திறமைக்கேற்ப உழைத்துக்கொடுப்பதும், தமது தேவைகளுக்கேற்பக் கொள்வதும் இவர்களது கொள்கையாகும். (From each according to his ability and to each according to his needs)

மக்களுடைய ஆளுமையும் திறமையும் வளர்ந்தோங்குவதில் எத்தகைய தங்குதடையும் விதிப்பது அவர்களது சுதந்திரத்திற்கும் முன்னேற்றத்திற்கும் இடையூறு செய்வதாகும். ஆனல் அவர்களது செயல்கள் பிறருடைய நலன்களுக்கு கேடு விளைவிக்கக் கூடாது. இதற்குட்பட்டு, தனது உழைப்பையும் அறிவையும் கூட்டி சுற்றுப்புறச் சூழ்நிலைகளைப் பயன்படுத்தி, உடைமைகளையும் நலன்களையும் தேடுவதும், தன் உடைமைகளைச் சேமித்து மூலதனமாக்கி மேற்கொண்டு பொருள் வளர்ப்பதும் முறையாகும் என்பதே அமெரிக்கா போன்ற நாடுகளின் எதிர்வாதமாகும்.

## மேடும் பள்ளமும்போல அல்ல

மக்களுடைய அறிவு, திறமை, ஒப்புரவு ஆகியவற்றை வளர்ப்பதே ஒழுக்கமும் அறனுமாகும். மேட்டை வெட்டிப் பள்ளத்தில் போட்டு நிலத்தைச் சமன் செய்யலாம்; ஆனல் உடைமைகளை எல்லாம் வலிந்துகொண்டு எல்லோர்க்கும் வழங்கி விட்டால் நிலையான சமத்துவ வாழ்வு ஏற்படுமென்று வாதிக்க இயலாது. மீண்டும் அவரவர்கள் திறமைக்கேற்ற உயர்வு தாழ்வுகள் ஏற்படத்தான் செய்யும். எல்லோரையும் இல்லாதவர்களாக்கவோ தங்கள் திறமைகளை வளர்க்க

முடியாத சூழ்நிலைகளை உண்டு பண்ணவோ பலாத்காரப் போர் முறைகள் உதவலாம். ஆனால் அவர்களின் ஆற்றல்களை வளர்ப்பதற்கு அவை உதவா.

மக்கட் பிரச்னைகளை வெறும் பொருளாதார அடிப்படையிலோ (Materialism) அதை அறவே அகற்றிய இலட்சியவாதத்தினாலோ (Idealism) தனியாகப் பிரித்துத் தீர்த்து விடமுடியாது.

அமெரிக்கர் போன்ற நாட்டு மக்களிடையே, வேலையில்லாத் திண்டாட்டம், நரம்புக்கோளாறுகள், இரத்த அழுத்தம், வறுமை, பிணி போன்ற இன்னல்களால் துன்புறும் மக்களைக் காண்கிறோம். அதுமாதிரியே ருஷ்ய மக்களுள்ளும் பொது உடைமைத் தத்துவத்திற்கு ஏற்றவாறு உடைமைப்பற்றுக்களை ஒழித்து பொதுமை மனோபாவத்தை எல்லோரும் பெற்று விட்டார்களென்றோ, வாழ்க்கைத்தரமும் அதிகமாக உயர்ந்துவிட்டதென்றோ சொல்வதற்கில்லை. அமெரிக்கா, பிரிட்டன் போன்ற குடிஅரசு நாடுகளில் தனிப்பட்டவர்களின் சுதந்திரம் பாராட்டிப் போற்றப்படுகிறது; எல்லோருக்கும் உழைப்புரிமையும், இன்றியமையாத தேவைகளைத் தேடிப் பெறும் நிலைமையும் கிட்டவில்லை; ருஷ்யா, சீனா போன்ற பொது உடைமை நாடுகளில், எல்லோருக்கும் வேலையும், உணவு, உடை, வீடு போன்றவையும் கிட்டுகின்றன. தனிப்பட்டவர்களுக்குச் சுதந்திரம் கிடையாது.

மக்களுடைய ஆசைகளை வளர்த்து, தேவைகளைப் பெருக்கி சரக்குகளை உற்பத்தி செய்து குவிக்கும் பொருளாதாரப் போக்கு இவ்விரு திறத்தினருக்கும் பொது இயல்பு. குடிஅரசு நாடுகளில் தனிமனிதர்களின் இன்னல்களைத் தீர்த்து இன்றியமையாத் தேவைகளைப் பூர்த்தி செய்ய சமூகப் பாதுகாப்பு முறைகளும் திட்டங்களும் (Social security measures) உள்ளன. சமுதாயப் பொது உடைமைக் கொள்கைக்கு மாறுபடாமல் தங்கள் சங்கங்களுக்குள் விவாதித்துப் பேசுவதற்கு ருஷ்யா, சீன நாடுகளில் உரிமைகளுண்டு. விஞ்ஞான அறிவும் செய்நேர்த்தித்திறனும் ஓங்கிய வல்லரசுகளிடையே கூட இப்படி என்றால் பிற்போக்கான நாடுகளில் உள்ள சமூகக் குறைபாடுகளைப் பற்றிக் கேட்கவே வேண்டாம்.

## சம வாய்ப்பு

ஃபிரஞ்சுப்புரட்சிக்கு காரணமானவர்களில் ஒருவரான ரூசோ (Rousseau) "மனிதன் சுதந்திரனாகப் பிறக்கின்றான், ஆனால் எங்கும் விலங்குகளைத்தரித்திருக்கிறான்". (Man is born free but everywhere in chains) என்றார். எங்கும் விலங்குகளிற் காணும் மனிதனை எப்படிச் சுதந்திரத்தோடு பிறக்கிறான் என்று சொன்னார்? சுதந்திரம் மற்ற உயிர்களைப்போலவே அவனது பிறவி இயல்பு. எனினும் அதை அறியாமலோ, மறந்தோ அடிமையாக இருக்கிறான் என்பதே அவரது கருத்தாகக் கொள்ள வேண்டும். தம்மியல்பை உணர்ந்து சிறப்பவர் சிலர், உணராது தவிப்பவர் பலர்– உணரவிடாது தடுக்கும் சுயநலச் சுரண்டல் பேர்வழிகள் அநேகர். "அறிவுடையார் எல்லாம் உடையர், அறிவிலார் என்னுடையரேனும் இலர்". மக்களாகப் பிறந்தவர் அனைவரும் தம் திறமைக்கேற்ப முயன்று உயரும் போக்கிற்கு சமூகத்தில் வாய்ப்புக்களும் வசதிகளும் ஏற்படவேண்டும். அதற்கு இடையூறாக அவர்களது

பிறப்போ (சாதியோ), வகுப்போ, மற்ற எதுவோ இருந்தால் அங்கு சமூகநீதி இல்லை என்று தான் சொல்ல வேண்டும். எனவே சமத்துவமென்பதை மக்கள் எல்லோருக்கும் சமமான வாய்ப்புக்கள், என்ற பொருளிலேயே கொள்ளவேண்டும். உலகில் உள்ள மக்கட்தொகுதிகள், அவர்களுடைய நிறுவனங்கள், சங்கங்கள், அவைகளிற் காணும் உறவுமுறைகள் ஆகியவற்றைக் கவனிப்போமானால், சுதந்திரமும் சமவாய்ப்புக்களும் கிடைக்கக் கிடைக்க மக்கள் முன்னேறுவதையும், அவை சுருங்கச் சுருங்க, வளர்ச்சி தடைப்பட்டு அவர்கள் நலிவதையும் எளிதில் காணலாம்.

அன்பும் அருளும் எளிதிற் புரிந்து கொள்ளக் கூடியன. 'நீதி, நியாயம்' அப்படிப்பட்டவை அல்ல எது நீதி, எது அநீதி, என்று விளங்காமல், மூளையைக் குழப்பும் சந்தர்ப்பங்கள் பல. தம்மைப்போல் பிறரையும் எண்ணி, மனதைப் பதப்படுத்திப் பண்பட்டவர் உள்ளம், புண்பட்டவர்க்குப் பரிந்து தமதை எல்லாம் வாரி வழங்கும். அவர் தனக்கென வாழாப் பிறர்க்குரியாளர். ஆனால் 'நியாயம்' என்பது ஒருபக்கம் சாயாமல் நடுநிலைமையில் நின்று, சமன் செய்து சீர்தூக்கிச் சரியானது எதுவென்று கண்டுபிடிக்க வேண்டிய காரியம். ஆயும் அறிவின் வழிதோன்றும் அறனாகும். ஒருவருக்குச் சாதகமானது மற்றவருக்குப் பாதகமாயிருக்கலாம். முரண்பட்ட இருவேறு நிலைகளில் உண்மையைக் காண்பது அரிது.

ஒன்றிற்கொன்று விரோதமான இருவேறு துருவங்களில் (Two extremes) காணும், ஒன்றையும் (Thesis), அதன் மறுப்பையும் (antithesis) முடிந்த உண்மைகளாகக் கொள்ளாது, அவை இரண்டு இணங்கிய மற்றொன்றே (Synthesis) உண்மையாகும். இவ்வாறு முரண்பாடுகள் கண்டு, பின்னர் உண்மை காணுவதே முற்போக்கு முறை. ஜர்மானிய அறிஞரின் இத்தகைய தர்க்க முறையை ஒட்டியே, புலன்வழி செல்லும் போக்கே விடுதலை பெற்ற மனம் (Self) என்று நினைத்துப் பின்னர் அதன் துன்ப விளைவுகளினால் அதை ஒடுக்கும் கட்டுப்பாடுகளை (Government) எண்ணி, இரண்டையும் ஏற்காது, அவை இரண்டும் இணைந்த ஒன்றே (Self Government) சுதந்திரம் (Freedom) என்ற உண்மை நிலையை அறிகிறோம்.

உழைப்பினால் தேவைக்கான பொருள்களை உற்பத்தி செய்கிறோம். பின்னர் உபயோகத்திற்கு மேற்பட்டு விற்று ஊதியம் கிடைப்பதற்காகச் சரக்குகளை உற்பத்தி செய்கிறோம். அப்படிப் பெருகும் பொழுது மூலப்பொருள்களும் முதலும் உடைய முதலாளிகள், உழைப்பை நல்கும் தொழிலாளிகள், என்று இரு வகுப்புகள் ஏற்படுகின்றன. பின்னவர் உழைப்பின் மிகுதியால் கிடைக்கும் இலாபமெல்லாம் முதலாளிகளைச் சேர்கின்றது — அவர்கள் அதிகாரிகள் ஆகவும், உழைப்பவர் கடைசியராகவும் மாறி, இச் சுரண்டுதலின் மூலம் பகையும் வர்க்கப்போரும் விளைகின்றன. இதற்கு முடிவென்ன?

### பிளவு சக்திகள்

ஒன்று உற்பத்தி, அதை உற்பத்தி செய்பவர்களின் உபயோகத்திற்கும் தேவைகளுக்கும் மட்டிலுமே நடக்கவேண்டும். அப்பொழுது அவரவர்களின் உழைப்பின் பயனை அவரவர்

களே அடைகிருர்கள். (Self-sufficiency& Self Employment) அன்றி, இலாபம் கருதும் சுரண்டுதல்களுக்கு இடமில்லாமல், மூலப்பொருள்களும், உற்பத்தியும், அதன் விநியோகமும் பொது உடைமைகளாக இருக்க வேண்டும். சமூக நீதி இவ்விரண்டு வழிகளாலும் அமையலாம். ஆனுல் சரித்திரமும், பொருள்களை உடைமை கொள்ளும் போக்கும் அதிலும் சிறப்பாக நீராவி. மின்சாரம், அணுசக்தி முதலியவற்ருல் இயக்கப்படும் பூத இயந்திரங்களைக் கொண்டு சரக்குகளை, இமைப்பொழுதில் மலைபோல் குவிக்கும் உற்பத்திப் புரட்சிகளுக்கு (Industrial Revolutions) பின்னுல் அவற்றை சமூகப் பொதுமையாக (Socialism) கொள்ளும் போக்கிலேயே சமூக நீதியை வகுக்க முடியும்.

சமூகப் பொது இயலே, முதலாளித்துவத்தை ஒழித்துக்கட்டி இவ்வகுப்பு வேறுபாட்டைக் களைவதற்கு முதற்படி. அதன் முனைப்பும் உச்சமுமே சமுதாயப் பொது உடைமையாகும் என்பர். ஆனுல் மக்கள் உழைப்பு, வாழ்வு எல்லாம் பொருள்களை உற்பத்தி செய்வதில் அடங்கிவிடவில்லை. மனித உறவுகள், அவற்றை முறைப்படுத்தும் நிறுவனங்கள், கூட்டு வாழ்க்கைகள் எல்லாம் பொருள்வழி மட்டும் தான் எழுந்து அமைகின்றனவா? ஆண்-பெண் சேர்க்கை, குடும்பம், இனம் போன்ற இயற்கை உணர்ச்சிகளையும் பிறப்பையும் பொருளினும் சிறந்ததாகக் கொண்ட உறவுகளை என்னென்பது? வாழ்க்கையை முழுமையாகக்கொள்ளாது, அதன் பலதிறப்பட்ட அம்சங்களான, பிறப்பு இயல்புணர்ச்சிகள், திறமை, வலிமை, பொருள் உடைமை ஆகியவற்றில் ஒன்றையோ, சிலவற்றையோகொண்டு மக்கள் உறவுகளில் ஏற்படுகின்ற வேற்றுமைகளையும், தராதரங்களையும், அதிகார ஆதிக்கங்களையும், அநீதிகளையும் பொருளுடைமை வழியாக மட்டிலும் விளக்குவது எங்ஙனம் பொருந்தும்? சமுதாயப் பொது உடைமைக் கொள்கையின் அடிப்படையான வகுப்புப் போர் உலகை அழிக்கக் கூடிய அணுசக்திப் படைகள் இரு வகுப்பினரிடமும் இருப்பதால் அது எவ்வாருகவும் தவிர்க்கப்பட வேண்டுமென்ற முடிவுக்கு ருஷ்யா வந்துவிட்டது. இந்த அகற்சியின் (Revision) காரணத்திஞல் சீனு அதை கண்டிக்கிறது. அழிவுசெய்யும் பெரும்போரை விலக்கி, போட்டியினுலேயே (Competition) சமுதாய பொது உடைமைக்கு வெற்றி காண ருஷ்யா விரும்புகிறது. அவ்வழியாக முதலாளித்துவம் கரைந்து அழிந்துவிடுமென (Disintegration of Capitalism) அது நம்புகிறது.

மனித உறவுகளில் இணக்கக் குறைவோ, பிணக்கமோ, விரோதமோ, போட்டியோ ஏற்படுவதைக் கண்டு வருந்துவதற்கில்லை. அவை வரவேற்க வேண்டியவை. அவை ஏற்படாவிடில் இருக்கும் நிலைமை (Status quo) அப்படியே இருக்கும். எவ்வித மாறுதலுமிருக்காது. மாறுதல்கள் இன்றி முன்னேற்றமும் காணமுடியாது. அந்த முரண்பாடுகளை எப்படித் தீர்க்கிருேமென்பதுதான் முக்கியம். அழிவின்றி உண்மை கண்டு உயருவதே விரும்பத்தக்கது. விருப்பு, வெறுப்பு அற்ற நடுநிலைமையும், ஆயும் அறிவின் திறமுமே அதற்குத் துணையாகும். ஒருவர் மற்ருெருவர்க்காக இரு திறத்தார்களும் விட்டுக் கொடுக்

கும் அன்பு, அருள் நெறி ஒன்று. அன்றி விருப்பு, வெறுப்பு, பற்றுதல்கள் இல்லாத நடுநிலைமைப் பொதுவரின் தீர்ப்புக்கு இணங்குவது மற்ருென்று. தனியாள்—சமூகம், இவற்றில் ஒன்று மற்ருென்றை அழித்துவிடாமல், தனியாள் தன் உறவுகளின் மூலம், உலகத்தனைய விரிவடைவதும், சமூகம் ஒவ்வொருவருடைய நலத்தையும் பேணிப் போற்றுவதும் ஆகிய வழிகளிலேயே சமூக நீதி நிலவி வளர முடியும். அவ்வழியாகத்தான் உலகில் பிறப்பு, பலாத்காரம், செல்வம், தொழில் ஆகியன அளவிற்கு மேற்பட்டு அதிகாரமும் ஆதிக்கமும் படைத்து அநீதிகளை விளைவிப்பதைத் தடுக்கலாம்.

# ஹோமியோபதி

"இது இரண்டு கிரேக்கச் சொற்களைக் கொண்டது. "ஒத்த மருத்துவம்" என்பது பொருள். நோயின் சின்னங்களையே உண்டாக்கக் கூடிய மருந்துகளைக் கொண்டே அந்நோயைக் குணப்படுத்துவது. கி. மு. 400 ல் இருந்த ஹிப்பாகிரிடீஸ் என்னும் கிரேக்க மருத்துவர் முதன்முதல், "ஒத்ததன் மூலம் ஒத்ததைக் குணப்படுத்தலாம்," என்று கூறினர்.

18 ஆம் நூற்ருண்டின் இறுதியில் ஹானமன் (Hahnemann) என்ற ஜெர்மன் மருத்துவர் தம் உடலிலேயே பல்வேறு சோதனைகளைச் செய்துபார்த்து, இதை ஒரு தனி வைத்திய முறையாக்கினர்.

நோயின் சின்னங்கள் எந்த மருந்தின் சின்னங்களை ஒத்திருக்கின்றனவோ, அம்மருந்தைச் சிறிய அளவில் கொடுத்தால் அந்நோய் குணமாகும் என்பதைக் கண்டார். அளவைக் குறைத்துக் கடுமையாகக் குலுக்குவதின் மூலம் மருந்துச் சரக்கின் ஆற்றலை வெளிவரும்படி செய்யும் இதற்கு 'ஆற்றல் உண்டாக்கல்' முறை என்றுபெயர்.

ஹோமியோபதி மருந்துகளைச் செய்வதற்கு உலகத்தின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் மருந்துச்சரக்குகளைப் பெறுகிருர்கள். பாஷாணம் முதல் வண்டின் நஞ்சு வரையில் பல்வேறு சரக்குகள் பயன்படுகின்றன.

1790 ல் ஹானமன் இச்சிகிச்சை முறையைக் கண்டு பிடித்தார். இன்று அமெரிக்காவில் இம்முறைக்கு மிகுந்த செல்வாக்கு; பிறநாடுகளிலும் விரைவாகப் பரவிவருகிறது. 1867 ல் தான் இந்தியாவில் முதன்முதல் டாக்டர் மகேந்திரலால் சர்க்கார் என்ற வங்காளியால் இம்முறை கையாளப்பட்டது. இம்முறையை எல்லா மாநிலங்களிலும் அரசாங்க மருத்துவ முறையாகக் கையாள வேண்டும் என்று இந்திய ஹோமியோபதி விசாரணைக்குழு பரிந்துரை கூறியுள்ளது. இந்தியக் குடியரசுத் தலைவரின் மருத்துவராக ஹோமியோபதி மருத்துவரும் உள்ளார்.

—டாக்டர். A. உமாபதி முதலியார்.

("கலைக்களஞ்சியம்")

# வடமொழி வாக்குகள்

குறள் பாக்களைப் போல வடமொழியில் பொருள் செறிந்த சுவைததும்பும் பாக்கள் பல உள. சில தனிப்பாடல்கள், சில காப்பியங்களிலிருந்து எடுக்கப்பட்ட சிலவற்றின் மொழிபெயர்ப்பு இங்கு தரப்படுகிறது:—

"அரசனே! நிறைய பொருள் கொடுத்தும், சிறப்புத் தந்தும், பல நூல் வல்லுநரை உன் அவையில் வைத்திருக்கிறாய் எப்போதும் உனக்கு விருப்பமானவற்றையே அவர்கள் சொல்லுகிறார்கள். உன்னை எதிர்த்துப் பேச யாருக்குத் தைரியம் உண்டு? பேசினாலும் நீ கேட்பாயா? ஆதலின், இவ்வறிஞர்கள் எதற்காக வேணடும்? நீ கூறுவதை ஒட்டிப் பேசுவதற்கு அவர்களுக்குப் பணமும் மரியாதையும் கொடுக்க வேண்டியதில்லை. உன் பணத்தையும் மரியாதையையும் உன்னிடமே வைத்துக்கொள்.

* * *

அரசனுக்கு விருப்பமானதைச் சொல்லுபவர்களை மக்கள் வெறுக்கிறார்கள்; மக்களுக்கு நல்லதைச் சொல்லுபவர்களை அரசர்கள் வெறுக்கிறார்கள். அரசனுக்கும் மக்களுக்கும் ஒருங்கே நன்மை செய்பவர் கிடைப்பது அருமை, மிகஅருமை.

* * *

புரட்சி அரண்மனைக்கு இறுதி;
கடுஞ்சொல் நட்புக்கு இறுதி;
புன் செயல் அரசுக்கு இறுதி;
அரசின்கேடு நாட்டுக்கு இறுதி.

* * *

நூல்கள் பலவும் யாகத்தில் யானையையும், குதிரையையும், பசுவையும் கொல்லலாம் எனச் சொல்லுகின்றன. ஆனால், எந்த சாஸ்திரமும் புலியையும் சிங்கத்தையும் யாகத்தில் கொல்லலாம் என்று எப்போதும் சொன்னதில்லை; நாம் கேள்விப் பட்டதும் இல்லை.

யானைக்கும் குதிரைக்கும் பசுவுக்கும் பதிலாக ஆட்டுக் குட்டியைக் கொல்லலாம் என்றும் சாஸ்திரம் கூறுகிறது.

தேவர்களும் கூட பலமற்றவர்களைத்தான் பலி கொள்ளுகிறார்கள். மனிதர்களைப் பற்றிச் சொல்வானேன்?

* * *

மகள் விரும்புவது அழகு; தாய் விரும்புவது செல்வம்; தந்தை விரும்புவது கேள்வி; சுற்றத்தார் விரும்புவது குலம்; பிறர் விரும்புவது ருசியுள்ள விருந்து (திருமணத்தில்)

* * *

மருமகனுடைய மனம், தன் வயிறு, பெண்ணின் இச்சை, அடுப்பில் தீ, கடல்—இவ் ஐந்தும் என்றும் நிறையாது இன்று நிறைந்தாலும் நாளை மறுபடியும் கேட்கும் தன்மை உள்ளன.

* * *

உணவுக்காக என்ன செய்தாலும் அது எவ்வாறு பாபம் ஆகும்? தளர்ந்த நிலைமையில் உள்ள மனிதனுக்குக் கருணை எப்படி உண்டாகும்?

* * *

நொடிந்த உள்ளம் உடைய நிலைமையிலும், துயரத்திலும், எதிரி முன் போரிலும், அரசன் வாயிலிலும், சுடுகாட்டிலும் யார் எதிர்ப்படுகிறார்களோ அவர்கள் உற்றார் உறவினர் எனக் கொள்ளவேண்டும்.

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

# தொழிலாளர் தொழு நோய்

நாக. நடராசன், M.A.

[வேலை நிறுத்தம் தொழிலாளரின் தொழுநோய். இதனுல் அரசாங்கத்துக்கு இழப்பு எதுவுமில்லை. சமுதாயத்துக்குத்தான் இழப்பு. தொழிலாளர்களைக் கொண்டது தானே, சமுதாயம்? ஆகவே தொழிலாளர்களுக்குத்தான் இழப்பு! இதைப் புள்ளி விவரத்துடன் தெளிவாக்குவதே இக் கட்டுரை.—ஆசிரியர்.]

கடந்த ஜூன் 13ல் புது டெல்லியில் நடைபெற்ற இந்தியத் தொழிலாளர் மாநாட்டில் பேசிய திரு. H. P. மர்ச்சண்ட் என்பவர், "எல்லா வேலை நிறுத்தங்களுக்கும் தடை விதிக்க வேண்டும்," என்று கூறியிருக்கிருர். வேகமாகப் பரவி வருகிற வேலைநிறுத்தம் என்ற வியாதிக்கு இது ஒரு தீவிரமான நிவாரணி! "வேலை நிறுத்தம் எங்களது உரிமை," எனக் கூறிவரும் வர்க்கத்திற்கு இது ஒரு சவுக்கடி! நாட்டு நலனில் நாட்டங் கொண்டவர்களும், பொருளாதார வளர்ச்சியில் அக்கறை கொண்டவர்களும் இதை வரவேற்பார்கள்.

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

சித்த: என்ருல் மனம்; சித: என்ருல் உடல். ஒரு 'த்' எழுத்துக்கு உள்ள மகிமையைப் பாருங்கள்! 'சித' ஏதோ ஒரு நாளைக்கு (சுடுகாட்டில்) எரியப் போகிறது. 'சித்த' நாள்தோறும் எரிந்து அவிகிறது.

* * *

(கொண்ட) கடனில் மிச்சமோ, நெருப்பில் மிச்சமோ, பகைவனில் மிச்சமோ வைக்காதே! அவை மறுபடியும் மறுபடியும் கிளம்பி உன்னை அழிக்க முற்படும்.

* * *

காடு இருப்பதால் புலியைக் கொல்வதில்லை; புலி இருப்பதால் காட்டை வெட்டப் பயப்படுகிருர்கள். ஆதலின், காட்டைப் புலி காக்கிறது; புலியைக் காடு காக்கிறது.

* * *

(திரட்டியவர்: நக்கீரன்)

போர் ஆபத்து, இலை மறைவு காய் மறைவாக இன்னமும் நிலவி வரும் இந்த நெருக்கடி நேரத்தில் பல தொழிற் சங்கங்கள் தமது வாக்குறுதிகளையும் மீறிக் கோணல்தனமான போக்கில் ஈடுபட்டு வேலை நிறுத்தங்கள் செய்வதைக் கண்டு நமது மனம் புழுங்குகிறது

ஆட்சியாளர் அண்மையில் ஒரு புள்ளி விவரச் செய்தியை வெளியிட்டிருக்கிருர்கள். நெருக்கடி நிலையில் வேலை நிறுத்தங்களினுல் எவ்வளவு மனித நாட்கள் (Man days) பாழாயின என்பதை அச்செய்தி எடுத்துக் காட்டுகிறது.

நவம்பர் 1962–இழந்த மனித நாட்கள்—121,000

டிசம்பர் 1962-இழந்த மனித நாட்கள்—30,000

ஜனவரி 1963–இழந்த மனித நாட்கள்—40,000

ஃபிப்ரவரி 1963-இழந்த மனித நாட்கள்—34,000

மார்ச் 1963–இழந்த மனித நாட்கள்—1,21,000

நாட்டின் முதுகெலும்பு வர்க்கத்தின் 'சாதனை'யின் விளைவு இது! ''உற்பத்தி பெருக வேண்டும்; உற்பத்தியே போர்க் கருவி'' என்ற ஆட்சியாளர்தம் 'சுலோகங்களு'க்குக் காட்டப் பட்ட 'மரியாதை', இது!!

இந்த வேலை நிறுத்தத்திற்கான கோரிக்கைகள் தாம் என்ன? ஊதிய உயர்வு, ''போனஸ்'', நிர்வாக பிரச்னை, விடுமுறை நாட்கள், ஓய்வு, எடுப்பு (Leave), பிற காரணங்கள் எனத் தொழிலாளர் துறை பொருளாதார வாதிகள் (Labour Economists) பகர்கிருர்கள்.

அடிப்படையில் உள்ள காரணந்தான் என்ன? தொழிலாளர்களுடைய அறியாமையும், இல்லாமையும் தாம். இந்த இரண்டையும் வைத்துக் கொண்டே தான் அரசியல் கட்சிகள் தங்களுடைய சுயநல வாழ்வு என்ற கோட்டையை எழுப்புகின்றன.

தொழிற் சங்கங்கள் அரசியல் அடிப்படையில் இயங்குகின்றன. அகில இந்தியத் தொழிற்சங்க காங்கிரஸ், இந்தியத் தேசீயத் தொழிற் சங்க காங்கிரஸ், ஐக்கிய தொழிற் சங்க காங்கிரஸ், ஹிந்து மஜ்தூர் சபா ஆகிய அகில இந்திய ரீதியில் இயங்கும் மிகப் பெரிய தொழிலாளர் சங்கப் பேரவைகள், முறையே கம்யூனிஸ்ட் கட்சி, காங்கிரஸ் கட்சி, இடதுசாரி அரசியல் கொள்கை உடைய சோஷலிஸ்ட்டுகள் பிரஜா சோஷலிஸ்ட் கட்சி ஆகியவற்றின் ஆதிக்கத்தின்கீழ் இருப்பதொன்றே போதும், இதற்குச் சான்று தர! ''தொழிலாளர்களிடையே அரசியல் உணர்ச்சி ஓங்கி இருக்கிறது'', என்ற மத்தியத்திட்ட அமைச்சர் திரு. நந்தா அவர்களின் வாக்குமூலமொன்றே போதும், இதற்கு ஆதாரம். ஒவ்வொரு கட்சிக்கென்று ஒரு ''யூனியன்!'' எந்தத் தொழிலாளர் கிளர்ச்சியாவது எந்த ஒரு அரசியல் கட்சியின் தூண்டுதல் இன்றியோ, ஆதரவு இன்றியோ நடைபெறுவதாக யாராவது கூற முடியுமா? அவர்களுடைய அறியாமையையும், இல்லாமையையும் வைத்தேதான் அரசியல் கட்சிகள் அவர்களை அரசியல் சூதாட்டரங்கில் பகடைக் காய்களாகப் பயன்படுத்துகின்றன.

## அகவிலையும் கூலி உயர்வும்

''கூலி உயர்வு தேவை'' என்று கூப்பாடு போட்டு-பிற காரணங்களை ஆதாரமாக வைத்துத் தொழிலாளர் நடத்தும் கிளர்ச்சி

களின் விளைவு இதோ! ஊதிய உயர்வு தரப்பட்ட பின்னர், உற்பத்திச்செலவு அதிகரித்ததென உற்பத்தியாளர் விலையைக் கூட்டுகின்றனர். வேலை நிறுத்தங்களினால் தொழில் பாதிக்கப்பட்டு, உற்பத்தி நலிந்து, அகவிலை உயர்கிறது. இதற்குச் சான்ருக, அரசாங்கம் வெளியிட்டுள்ள புள்ளி விவரம் பேசுகிறது!

அக்விலைப் புள்ளி:

நவம்பர், 1962—130·1
டிசம்பர், 1962—125·8
ஜனவரி, 1963—126·0
ஃபிப்ரவரி, 1963—126·6
மார்ச், 1963—127·2

இந்த அகவிலை உயர்வில், தங்களுடைய வேலைநிறுத்தங்களும் அடிப்படைக் காரணங்களுள் ஒன்று எனத் தொழிலாளர் வர்க்கம் உணரவேண்டும்.

பொதுமக்கள் பாதிக்கப்படுவதோடல்லாமல் முதலாளிகள் தமது இலாபம் குறைந்து, உற்பத்திப்பொருள்களுக்கான 'மார்க்கெட்' சரிய, தொழில் பலவீனமடைய, அவதியுற நேரிடுகிறது; தொழில் வளர்ச்சி மந்தமாகிறது.

வேலை நிறுத்தங்களின் எதிரொலியாய் நிகழும் 'கதவடைப்புக்கள்' பல தொழிலாளர்களுடைய வேலையை-வாழ்வைப் பறித்து, உற்பத்தியை நசுக்கி, அகவிலையை உயரச்செய்து, மக்களுக்கு கேடு தருகின்றன.

## நோய் தடுக்க..

தொற்று நோயாகப் பரவி வருகின்ற இக்கேட்டிற்கு முடிவுதான் என்ன? அரசினருடைய கனரகத் தொழில்கள் (Heavy Industries), மற்றைய ஆதாரத் தொழில்கள் (Basic Industries), பொதுமக்கள் நலனுக்கான ஊழியங்கள் (Public utility service) முதலிய வற்றில் வேலைநிறுத்தங்களுக்குத் தடை விதிக்கவேண்டும். அடையாள வேலை நிறுத்தம், அனுதாப வேலைநிறுத்தம் முதலிய கேலிக்கூத்துகளுக்கு சட்டபூர்வமாக முற்றுப் புள்ளி வைக்க வேண்டும்.

தடுப்பு முறைகளை நோக்குவோம். "தொழிலாளர் நலச் சட்டங்களை அமல் நடத்தாததால் ஏற்பட்ட தொழிற் தகராறுகளைத் தவிர, அரசியல் காரணங்களின் பேரிலும் பல தொழிற் தகராறுகள் ஏற்பட்டிருக்கின்றன," என்று அமைச்சர் திரு. நந்தா கூறுகிருர். இதற்குத் தீர்வு? தொழிலாளர் நலச் சட்டங்களைத் தீவிரமாக அமுல் படுத்தத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

அண்மையில் நடைபெற்ற இந்தியத் தொழிலாளர் மாநாட்டில் பேசிய திரு. நேவல் டாட்டா என்ற தொழிலதிபர், "விலைவாசி உயர்வைச் சமாளிக்கத், தொழிலாளர்களுக்குப் பொருள்களாக ஊதியத்திலிருந்து ஒரு பகுதி தரலாம்" என்று கூறிய யோசனையும், "முதலாளிகள் தொழிலாளர்களுக்காக நியாயவிலைக் கடைகள் திறக்கலாம்" என்று ஐ. என். டி. யூ. சி. தலைவர் திரு. வாசவதா அருளிய ஆலோசனையும், "போனஸைப் பிடித்துக் கொண்டு முதலீடு போட்டு முதலாளிகள் வீடு கட்டித் தரும் திட்டத்தை அமலாக்கலாம்" என்று கூறியுள்ள கருத்துக்களும் வரவேற்கத் தக்க, செயலாற்றத் தக்கவையாகும்.

## தொழிலாளர் பொறுப்பு

தொழிலாளர்களுக்குப் பொறுப்புணர்ச்சி ஏற்படவேண்டும். "நிர்வாகத்தில் தொழிலாளர்கள் பங்கு கொள்வதற்காகக் கூட்டு நிர்வாகக் கவுன்சில்களை அரசாங்கத் துறை முக்கியமாக

நிறுவ வேண்டும். தொழிலாளர் கல்விக்காகத் திட்டங்களைத் தீவிரமாக ஏற்படுத்த வேண்டும்" என்று அமைச்சர் திரு. நந்தா உரைத்துள்ள யோசனை தொழிலாளர்களை "வேலை நிறுத்தமே பிரதானம்" என்ற மூடுபனி மூட்டத்திலிருந்து மீட்டு, "பொறுப்புணர்ச்சி" என்ற ஒளியிடத்திற்கு இட்டுக் கொணர உதவும்.

அமைப்புமுறை ரீதியாக வேலை நிறுத்தத்திற்குத் தீர்வுகாணும் மூன்றுகளைத் திரு. V. V. கிரி (கேரளா கவர்னர்) அடுக்குகிறார்:

1 ஒவ்வொரு தொழிலிலும், ஒவ்வொரு தொழில் நிறுவனத்திலும், இரு கூட்டுத் தரப்பார் (முதலாளிகள், தொழிலாளிகள்) அடங்கிய முழுவும், முக்கூட்டுத்தரப்பார் (முதலாளிகள், தொழிலாளிகள், அரசாங்கம்) அடங்கிய குழுவும் அமைக்கப்படவேண்டும். அவை குறிப்பிட்ட காலங்களில் அடிக்கடி கூடித் தொழிலாளர் நலத்திட்டங்கள், தொழிலாளர் அவதிகள், தொழிற் பிரச்சினைகள் முதலானவற்றைப்பற்றி விவாதிக்க வேண்டும்.

2. ஏதாவதொரு பிரச்சினையில் உடன்பாடு ஏற்படாவிடில் சமரச போர்டுகள் (Conciliation Boards) நிறுவப்பட வேண்டும். அரசாங்கம் பல தொழில்களிலிருந்து பல சமரச அதிகாரிகளைத் தேர்ந்தெடுத்து அனுப்பி வைக்க, அவர்களிலிருந்து முதலாளிகளும், தொழிலாளிகளும் ஒன்று சேர்ந்து ஒருவரையோ அல்லது ஒரு 'போர்டை'யோ தேர்ந்தெடுக்கவேண்டும். அவர்கள் சமரசம் செய்து வைக்க முயல்வார்கள். ஒருபடி மேலாக, பிரச்னை(களி)யின் நன்மையை அலசி ஆராய்ந்து, உடன்பாடு ஏற்படாத காரணங்களை ஆராய்ந்தறிய விசாரணைக் குழுக்கள் ஏற்படுத்தப்படவேண்டும்.

3. வேறுபாடுகளையும், தகராறுகளையும் தீர்க்க இரு கூட்டுத்தரப்பாரும் முக்கூட்டுத்தரப்பாரும் அடங்கிய கூட்டங்கள் (Conferences) கூட வேண்டும்.

## குடை

பண்டைக்கால முதலே உள்ள பொருள்களில் குடை ஒன்று. மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சீனாவில் குடை பயன்பட்டிருக்கிறது.

தமிழ்நாட்டில் தொன்றுதொட்டே குடை ஆட்சியின் சின்னமாக விளங்கியுள்ளது. தொல்காப்பியம் போன்ற பழைய நூல்களில் இதற்கு ஆதாரம் உள்ளது.

கிரீஸ்—ரோம் ஆகிய நாடுகளில் முதலில் பெண்களே குடையைப் பயன்படுத்தினர். ஆண்கள் குடை பிடிப்பதில்லை, ஆண் தன்மைக்கு ஏற்றதல்ல என்ற எண்ணத்தினால். 1702—1714 ல் ஆங்கிலநாட்டு மக்கள் குடையைப் பயன்படுத்தத் தொடங்கினர். இன்று உலகின் எல்லா நாடுகளிலும் பயன்படுகிறது.

பண்டைக்காலத்தில் தாழை, மூங்கில், தோல், பிரம்பு முதலியவற்றால் செய்யப்பட்ட குடை. 18-ஆம் நூற்றாண்டின் இறுதியில் எஃகுக் கம்பியினாலும் துணியினாலும் செய்யப்பட்டது.

பயன்படுத்தாதபோது சுருக்கி மடித்துச் சட்டைப்பையில் வைத்துக்கொள்ளக் கூடிய குடைகளும், மடித்து ஒரு கைப் பிரம்புக்குள் வைத்துக் கொள்ளக் கூடிய குடைகளும் இன்று உற்பத்தி செய்யப்படுகின்றன.

4. வல்லுநர் குழு ஏற்படுத்தப் பட்டு அது வேலை நிறுத்தம் அல்லது கதவடைப்பு சம்பந்தப்பட்ட பிரச்சினைகளை ஆராய்ந்து, ஆலோசனை தர, முக்கூட்டுத் தரப்பாருள்ள குழுக்கள் தகராறுகளைத் தீர்க்க முயலவேண்டும். இத்தகைய குழுக்கள் மாநில ரீதியிலும், அகில இந்திய ரீதியிலும் தேவையான நிதி வசதி, அலுவலர்கள் கொண்ட நிலை இவற்றோடு நிரந்தரமாக நிலவ வேண்டும்.

5. அப்படியும் தீர்வு காண முடியாவிடில் அரசினரும், தொழிற் சங்க, முதலாளிகள் சங்கப் பிரதிநிதிகளும் சம்பந்தப்பட்ட தகராறுக்குரியோரை தம் மிச்சையான மத்தியஸ்தத்திற்கு (Voluntary Arbitration), அதாவது பஞ்சாயத்துத் தீர்வுக்கு, உடன்படத் தூண்ட வேண்டும். மத்தியஸ்தர்கள் இருதரப்பாரும் விரும்புபவராக இருக்க வேண்டும்.

6. அப்படியும் சமரசம் ஏற்படாவிடில் தொழிற் தகராறுகளைத் தீர்த்து வைப்பதில் தேர்ந்த அறிவும், அநுபவமும் பெற்ற ஒரு நடுவரிடம் (Umpire) பூசல் ஒப்படைக்கப்பட வேண்டும்.

7. பூசலின் ஒவ்வொரு நிலையிலும் சமரசப் பேச்சு வார்த்தைகளுக்கும் (Negotiations), கூட்டுப் பேரத்திற்கும் (Collective bargaining) இடமளிக்கப்பட வேண்டும்.

புதுடெல்லி மாநாடும் பஞ்சாயத்துத் தீர்ப்பையே வலியுறுத்தியது; தொழிற் சமாதானத் தீர்மானத்தையும் தொடர்ந்து செயலாற்ற முடிவு செய்தது.

எது எவ்வாறாயினும், தொழிலாளர் வர்க்கம் உண்மையான குடிமக்களுக்குத் தேவையான பொறுப்புணர்ச்சியும், அரசியலறிவும் பெறவேண்டும். தங்களுக்குள்ளாகவே தொழிற் சங்க நிர்வாகிகளைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளவேண்டும். அரசாங்கமும், தொழிலாளரல்லாதார் நிர்வாகிகளாகப் பணியாற்றும் தொழிற்சங்கங்களுக்கு ஒப்புதல் தருவதை மறுக்கவேண்டும். அரசியல் கட்சிகளின் ஊடுருவலின்றி, ஆதிக்கமின்றி, கட்டுப்பாடு இன்றித் தொழிற்சங்கங்கள் இயங்கினாலொழிய தொழிலாளர் வர்க்கம் சுதந்திரமாகச் சிந்தித்துச் செயலாற்றவோ, தானாகவே கேடு ஏதுமின்றி வளர்ச்சியடையவோ முடியாது.

எதற்கெடுத்தாலும் 'வேலை நிறுத்தம்' என்ற தொட்டாற் சுருங்கி மனப்பான்மை என்று ஒழிகிறதோ, எந்த நேரத்தில், கடைசிக் கருவியாக, வேலை நிறுத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதை தொழிலாளர் வர்க்கம் என்று உணருகிறதோ, அன்றுதான் —

வேலை நிறுத்தத் தொற்று நோயின் தீயசக்தி குறையும்; தொழில் வளர்ச்சி சீரடையும்; தொழிலாளர் வர்க்கம் பொது ஜன மதிப்பெய்த முடியும்.

"கோவை மாறன்"

# சாக்கோ-வான் ஸெட்டி

*['கோவைமாறன்' பல்துறைப் படிப்பாளர்; சிறந்த சிந்தனையாளர். கணிதம், பொருளாதாரம், தமிழ் இலக்கியம், இங்கிலீஷ் இலக்கியம், — இத்தனையிலும் ஆழ்ந்த கல்வி அறிவு உடையவர். இவரது பரந்த படிப்புத்தென்றலைத் தமிழர்கள் நன்கு பயன்படுத்திக் கொள்ளவில்லை; ஆழ்ந்த அறிவு ஊற்று நீரைப் பருகவில்லை. அன்று கொல்லப்பட்ட இரு நாத்திகத் தியாகிகளை நினைவூட்டுகிறார், இன்றுள்ள "ரப்பர்" வாழ்க்கை மக்களுக்கு! —ஆசிரியர்]*

அமெரிக்க நீதிமுறைக்கு அழியாத களங்கம் விளைந்தது 1927 ம் ஆண்டில். ஆண்டுதோறும், அம்மறு அகன்று கருத்து பெரிதாகிறது. கழுவாய் செய்ய இயலாதது. முப்பது ஆண்டுகளுக்கு முன்பு, துருவி, ஆராய்ந்து, அமெரிக்கரின் மனச்சாட்சிக்கு முன் இம்மறுவை நிறுத்திய எழுத்தாளர் அப்டன் ஸிங்க்லேர். அவரைத் தொடர்ந்து ஹவார்ட் ஃபாஸ்ட், ஃப்ரான்சிஸ் ரஸ்ஸல் — ஆகியோரும் இக்கருத்தை ஒட்டி சிறந்த நூல்களை இயற்றியுள்ளனர்.

ஸாக்கோ, வான்ஸெட்டி — இருவரும் இத்தாலியர். 1908 - ம் ஆண்டில் அமெரிக்காவுக்கு வந்து ஸாக்கோ செருப்புத் தைக்கும் தொழிலிலும், வான்ஸெட்டி மீன் விற்கும் தொழிலிலும் ஈடுபட்டனர். இருவரும் ஆங்கில மொழி செவ்வனே அறியார்; ஆயினும் இத்தாலிய மொழியில் பேசும், எழுதும் திறன் பெற்றிருந்தனர். இருவரையும் ஒன்று சேர்த்தது அவர்களுடைய தீவிர நாத்திகம்; அதனுடன் அராஜக வாதம். நாத்திகமும் அராஜக வாதமும் சிந்தனை, சொல் அளவிலே; செயல் முறையில் அன்று. அவர்கள் இருவரும் ஈ, எறும்பைக்கூடக் கொன்று அறியார்; பிறர் துன்பம் காணச்சகியாதவர்கள். தமக்கென வாழத் தெரியாதவர்கள். முதல் உலகப்போரில் பட்டாளத்தில் சேர விருப்பம் இன்றி ஒளிந்தனர். போர் எதிர்ப்புப் பிரசாரமும் செய்தனர்.

ஸாக்கோ — வான்ஸெட்டி அமெரிக்காவிலேயே அன்றும் இன்றும் நுண்மாண் நுழை புலத்திற்குப் பேர்போன பாஸ்டன் நகரில் வாழ்ந்தனர் இங்கிலாந்தின் ஆதிக்கத்துக்கு எதிராக 1756-ல் அமெரிக்க புரட்சி தொடங்கியது இந்நகரில். நீதி மன்றங்கள், தொழில் கூடங்கள், பல்கலைக்கழகங்கள் தோன்றிய இடம். திரு. கென்னடியின் ஊர். பல நூற்றாண்டுகளுக்குமுன் தமிழ்க்கலைக்கும் ஆசாரத்திற்கும் உறைவிடமான மதுரையில் மன்னவன், "தாழ்ந்த குடையன் தளர்ந்த செங்கோலன்" ஆகி, மதுரையும் அழிந்தது போல், அமெரிக்காவின் மதுரை எனத்

தகும் பாஸ்டன் நகரம் இந்நூற்றாண்டில் இக்கொடுமைக்கு இடம் ஆகியது.

1919-ம் ஆண்டில் கிறிஸ்துமஸ் நாளுக்கு முந்நாள் பாஸ்டனில் ஒரு வழிப்பறி நடந்தது. 1920 ஏப்ரலில் மற்றொரு வழிப்பறியில் இருவர் கொல்லப்பட்டனர். அவற்றில் சம்பந்தப்பட்டதாக போலீசார் ஸாக்கோ — வான் ஸெட்டி இருவரையும் கைது செய்தனர். போதுமான சாட்சிகள் இன்றி, சிலர் கூறிய பொய்ச் சாட்சியின் பலனாக, பல உண்மைகளை மறுத்து, வெப்ஸ்டர் தேயர் என்ற நீதிபதி, ஓராண்டுக்குப்பின், அவர்களுக்கு மரண தண்டனை விதித்தார். அவர்கள் மதமற்ற, அராஜகக் கொள்கைகளைப் பூண்டிருந்தனர், என்ற வெறுப்பு ஜூரர்களை உந்தியது. இவ் இரண்டு வழிப்பறி நடந்த நாட்களிலும் அவர்கள் அவ் இடங்களில் இல்லை என்று பலர் சாட்சியம் கூறியதையும் ஒப்புக்கொள்ளவில்லை. இக்கொடுங்கோன்மையைக் கண்டு அமெரிக்கா அலறியது. பின்னால் சுப்ரீம் கோர்ட் நீதிபதியாக வந்த ஃப்ரான்க் புர்டர் முதல் பல வழக்கறிஞர், ஜான் டாஸ்பாஸாஸ் போன்ற எழுத்தாளர், மற்றும் பலரும் அப்போதிருந்த கவர்னர் ஃபுல்லரையும் பிரசிடன்ட் கூலிட்ஜையும் கோரியன அனைத்தும் நிராகரிக்கப்பட்டன. சாட்சியம் கொடுத்தவரே தாம் பொய் சொன்னதாகப் பின்னர் கொடுத்த வாக்குமூலங்களை தேயர் அனுமதிக்கவில்லை. வேறொருவன், தான் இரண்டாவது வழிப்பறியில் சேர்ந்த குற்றத்தைக் கோர்ட்டில் ஒப்புக்கொண்டதும் கூடத் தள்ளப்பட்டது.

ஏன்? ஸாக்கோ — வான் ஸெட்டி கடவுளை நம்பாதவர்கள், மதத்தை வெறுப்பவர்கள், அராஜக வாதிகள் என்ற காரணம் முதலிலிருந்து அகலவே இல்லை. எப்படியாவது அவர்கள் சாக வேண்டும்!

1927 ஆகஸ்டில் தண்டனை விதிக்கப்பட்டு ஆறு ஆண்டுகளுக்குப்பின் ஸாக்கோவும் வான்ஸெட்டியும் உடல் மீது மின்சார சக்தியைப் பாய்ச்சி நீதி முறையில் கொல்லப்பட்டனர். அவ் ஆறு ஆண்டுகளிலும் அதன் பின்னரும் இவ்வழக்கை அலசிப் பல நூல்கள், புது சாட்சியங்கள் வந்துள்ளன. இன்று, அவ்விருவரும் குற்றவாளிகள் என யாரும் நம்ப இடமில்லை. மறு எப்படி மறையும்? விளக்க விளக்க உலகிற்கு தெற்றெனப் புலப்படும். ''குடிப் பிறந்தார் கண் விளங்கும் குற்றம் விசும்பின் மதிக்கண் மறுப்போல் உயர்ந்து''

## இரு நிகழ்ச்சிகள்

ஸாக்கோ—வான்ஸெட்டி வரலாற்றில் இரண்டு நிகழ்ச்சிகளைக் குறிப்பிட விரும்புகிறேன்.

### இன்ப வழி

''இன்பத்தை நாடிச் செல்லுவதில் பாதி மக்கள் தவறான பாதையில் செல்கின்றனர். எதையும் தன் சொந்தமாக்கிக் கொள்வது, பிறரிடமிருந்து பெற்றுக் கொள்வது, பிறர் உழைப்பை அடைவது — இவைதான் இன்பம் என்று இவர்கள் கருதுகின்றனர்; அல்லவே அல்ல. இன்பம் என்பது, பிறருக்குத் தருவதில், பிறருக்காக உழைப்பதில் தான் இருக்கிறது. பெறுவதைவிட தருவதுதான் இன்பத்தை அடைவதற்குள்ள ஒரே பாதை. அது ஒன்றே தான் அகலமான, சீரான ராஜபாதை.''

ஹென்றி டிரம்மண்ட்.

அவர்கள் சாவதற்கு முன்னாள். அவ்விருவரும் ரோமன் கதோலிக் மதத்தைத் தழுவிய பெற்றோருக்குப் பிறந்தவர்; ஆகையால், ஒரு பாதிரியாரை அவர்களுக்கு இறுதிச் சடங்கு செய்விக்க அரசாங்கம் அனுப்பியது. அப்பாதிரியார் சொன்னார்: ''எப்படியும் நீங்கள் நாளை சாவது திண்ணம். நீங்கள் பிறந்த மதத்திற்கு ஏற்ப இச்சடங்கு செய்து கொண்டால் என்ன கெடுதி வரக்கூடும்? ஒருக்கால், கடவுள் இருப்பது உண்மையானால், இச்சடங்கால் நீங்கள் அவ் இறைவனை அடைந்து இன்பம் உறலாம். அன்றி, நீங்கள் நினைப்பது போல கடவுள் இல்லாவிட்டாலும் இச்சடங்கினால் உங்களுக்கு ஒரு நஷ்டமும் இல்லை''

அதற்கு ஸாக்கோ — வான் ஸெட்டி கூறிய மறுமொழி சரித்திரத்தில் இடம் பெற உரியது:

"ஐயா, தங்கள் அறிவுரைக்கு மிக நன்றி. நாங்கள் இத்துணை ஆண்டுகள் வாழ்ந்தது எங்களுக்காக மட்டும் அன்று; எங்களைப் போன்ற கொள்கை உள்ளவர்கள் பலர் உண்டு. அக்கொள்கைகள் மேலும் பரவவேண்டும் என்பது எங்கள் அவா. அவர்களை எல்லாம் நினைத்துப் பாருங்கள். 'இறுதி நாளில், ஸாக்கோவும் வான்ஸெட்டியும்கூட, 'ஒருக்கால் கடவுள் இருக்கலாம்; அவருடைய மன்னிப்பு பெற்று அவருடைய உலகத்துக்குப் போகலாம் என்ற கருத்து உடையவர்கள்' என்ற பழி உண்டாகுமானால் எங்கள் வாழ்க்கையே பயனற்றதாகி விடும்; எம் கொள்கை தளர்ந்து விடும். எம்மனோர் அனைவரும் மனம் உடைந்து போவார்கள். நாங்கள் இருவர் செத்தபின் சுவர்க்கத்துக்கோ, நரகத்துக்கோ போவது பெரிதல்ல; இன்னும் உயிர் வாழ்வோர் பலருடைய கொள்கை வலிதான் பெரிது. ஆதலின் அச்சடங்குக்கு ஒப்பமாட்டோம்.''

இம்மனப்பான்மைக்குத் தமிழ் வரலாற்றிலும் ஒரு சிறந்த சான்று உண்டு. வைணவர் போற்றி வருவது திருமந்திரம். அம்மந்திரத்தையும் அதன் பொருளையும் ஆசிரியன் தன் இறுதிக்காலத்தில் சிறந்த மாணவனைத் தேர்தெடுத்து அவனுக்கு மட்டும் ஓதுவது முறையாக இருந்தது. அம்மாணவனும் அவ்வாறே தன் இறுதிக்காலத்தில் ஒரு மாணவனுக்குத்தான் சொல்ல வேண்டும். இதை ''ஓரான்வழி" என்பர். பலருக்கு இம்மந்திரத்தை ஓதினால் அவன் நரகத்துக்குப் போவான்! இந்த குரு பரம்பரையில் திருக்கோட்டியூரில் 12-ம் நூற்றுண்டில் வாழ்ந்த நம்பி ஒருவர், தமக்கு உரிய சீடனாக இராமானுசரைத் தேர்ந்து எடுத்து அவருக்கு இம்மந்திரத்தை ஓதினார். இராமானுஜர் உடனே அவ்வூரில் கோபுரம் ஏறி அன்று திருவிழாவுக்காகக் கூடியிருந்த அனைவருக்கும் இம்மந்திரத்தை ஓதிவிட்டார்! கடுங்கோபம் உற்ற நம்பி, இராமானுசரை அழைத்து, ''நீ செய்ததன் தவறு அறிவாயா? அதன் பலனை நீ அனுபவிக்க வேண்டும்" என்றாராம். இராமானுஜர், "ஆம்! நான் நரகத்துக்குப் போக வேண்டியதே. ஆனால் இம்மந்திரத்தைத் தெரிந்து கொண்டதால் ஆயிரக்கணக்கான மக்கள் வைகுந்தத்துக்குப் போகும் போது, நான் ஒருவன் நரகத்துக்குப் போவதில் என்னகேடு?"

## பதிப்பு உரிமை

இலக்கியம், இசை, இதர கலைகள்பற்றி ஒருவர் உண்டாக்கியதை மற்றவர் அப்படியே பிரதி (Copy) செய்வதைத் தடுப்பதே பதிப்புரிமை என்பது.

முதலில் 1847-லும் பிறகு 1914-ம் ஆண்டிலும் இந்தியாவில் பதிப்புரிமைச் சட்டங்கள் இயற்றப்பட்டன. பிறகு 1957ல் புதிய சட்டம் (The Copyright Act) இந்திய பார்லிமெண்டில் இயற்றப்பட்டது.

இலக்கியம், நாடகம், இசை-கலை-ஆகிய படைப்புக்கள், சினிமா ஃபிலிம்கள், ஒலிப்பதிவுத்தட்டுக்கள் - முதலியவற்றுக்குப் பதிப்புரிமை உண்டு.

பொதுவாக, இப்படைப்புகளின் ஆசிரியரே பதிப்புரிமையின் சொந்தக்காரர் ஆவார். ஆசிரியரின் ஆயுள் காலத்தில் வெளியான படைப்பிலுள்ள பதிப்புரிமை, அவர் இறந்த ஆண்டிற்கு அடுத்த ஜனவரி மாத முதல் 50 ஆண்டுக்காலம் நீடித்திருக்கும். புனை பெயருடன் வெளியிடப்பட்டிருந்தாலும் இதே விதிதான். ஃபோட்டோ, சினிமா ஃபிலிம்கள், பதிவுத்தட்டுகள் முதலியவற்றிற்கும் இது பொருந்தும்.

பதிப்புரிமை பற்றி முடிவு செய்யவும், அனுமதியளிக்கவும், பதிப்புரிமை கழகத்துக்கு (Copyright Board) விண்ணப்பித்துக் கொள்ளவேண்டும்.

தெரிந்து கொண்டே பதிப்புரிமைச் சட்டத்தை மீறினாலும், மீறுவதற்கு உதவினாலும், ஓராண்டு வரையில் சிறைத் தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப் படலாம்.

என்றாராம். நம்பி தன் அறியாமையை உணர்ந்து "நீ அன்றே, எம்பெருமானார்!" என்றாராம்.

ஸாக்கோ—வான்ஸெட்டி இப் பரம்பரையைச் சேர்ந்தவர்.

இரண்டாவதாக, ஸாக்கோ—வான்ஸெட்டியின் இறுதி அறிக்கை. அதன் மொழி பெயர்ப்பு:

"இப்படிப்பட்ட சாவு எங்களுக்கு நேர்ந்துள்ளது பற்றிப் பெருமை அடைகிறோம். வாழ்ந்திருந்தால், நாங்கள் செருப்புத் தைத்தோ, மீன் விற்றோ பலரும் இகழத்தெருவில் சுற்றிக் கொண்டிருப்போம். இன்று எங்கள் வாழ்க்கை பயன் அடைந்தது. எங்கள் சாவால் மானுடம் வென்றது. இத்துணை மேம்பாடு, சகோதரத்துவம், நீதி இவற்றை மனிதகுலம் வேறு வகையில் அறிந்திராது. இப் பெருமைக்கு முன் எம் சொற்கள், வாழ்க்கை, கஷ்டங்கள் எம்மாத்திரம்? எம் இருவர் சாவு எம்மாத்திரம்? இறுதியில் யாம் படக்கூடிய மரண துன்பமே எங்கள் புகழ்; வெற்றி. அதனால், ஏற்படக்கூடிய நன்மையே நாங்கள் வாழ்ந்ததற்குச் சான்று பகரும்."

சாக்ரட்டீசின் இறுதி மொழிகளோடு ("குத்தூசி" ஊசி: 1 குத்து: 5, பக்கம் 48) ஒப்பிடத்தக்கவை.

அவர்களுடைய 'கேடு' (மரணம்) 'நத்தம்' (உயர்வு) போன்றது. அவர்களுடைய 'சாக்காடு' என்றும் உளதாய புகழைத்தருவது. அவர் வித்தகர்.

"நத்தம் போல் கேடும் உளதாகும் சாக்காடும்
வித்தகர்க்கு அல்லால் அரிது."

# கடிதங்கள்

## "விலை உயர்வு"

தங்கள் செப்டம்பர் 1963 இதழில் இத்தலைப்பு பூண்ட ஒரு கட்டுரையைக் கண்டேன்.

"நோய் நாடி, நோய் முதல் நாடி, அது தணிக்கும் வாய்நாடி, வாய்ப்பச்செயல்" என்றார் வள்ளுவர். 'நோய்' பணவீக்கம் (inflation); 'நோய்முதல்' நாம் இன்று வாழும் தனி மனிதனுடைய 'முன்னேற்றம்' குறிக்கோளான முதலாளித்துவ சமூகம்; 'வாய்' (உபாயம்) சமூக மாறுதல். ஆனால் 'வாய்ப்ப' (முறைமையின் வழாது) செய்ய யார்உளர்? எந்த மருந்தும் நோயை அகற்றுவதுடன் உடல் உறுதியையும் குறைக்கிறது என்பது யாவரும் அறிந்ததே. சமூகத்தையே கட்டுப்படுத்தும் முறைகளை அரசாங்கம் அரை மனதுடன் கையாளுவதால் தீங்குகள் மிகுமே அன்றி நல்ன் தராது. உறுதியான முறைகளைக் கையாளுவதற்கு உறுதியான அரசாங்க அமைப்பு வேண்டும். உறுதியான கொள்கை வேண்டும். அரசாங்கமும் கொள்கையும் மக்களுடன் தொடர்பு கொண்டிருக்க வேண்டும். ஏழை நாட்டில் ஏழை மக்கள் தொடர்பு அற்ற எந்த மந்திரியும் ஆணையாளரும் இத்தகைய மாறுதலை உண்டாக்கவோ செயல்முறையில் நடத்தவோ முடியாது.

மக்கள் மடமையால் தங்களுக்கு வேண்டியிராத பொருள்களை வாங்கி வீண் செலவு செய்கிறார்கள். ஏழைத் தொழிலாளியும், திருமணம், சாவு, தீபாவளி, பொங்கல் என்ற காரணங்களுக்குப் பொருளற்ற செலவு செய்கிறான். பட்டாசு ஆவது வெடிக்கிறான். இவற்றை அரசாங்கம் தடுக்கவேண்டும். பொருளை வீணாக்கும் தனி உரிமைக்கு இந்நாட்டில் இடமில்லை.

இவ்வூரில் உள்ள பேதையரை நோக்கித் திருவள்ளுவர் ஒரு குறளை இயற்றி உள்ளார்; "மையல் ஒருவன் களித்தற்றால், பேதைதன் கைஒன்று உடைமை பெறின்." அறியாமை மிக்கவன் பொருளைப் பெற்றால், அது பைத்தியக்காரன் குடித்து ஆட்டம் போட்டது போல, என்றார். இக் "கல்லார் கண் திரு"ப் படாது சமூகம் வரையறுக்க வேண்டும். இன்றேல், அது சமூகத்தை அழித்துவிடும். நல்லார் கண் பட்ட வறுமை கேடுவிளையாது. கல்லார் கண்பட்டதிரு கேடு தரும். தனிமனிதனிடம் செல்வத்தைக் குவிக்காதவாறு தடுக்க நம் குடி ஆட்சி அமைப்பு அரசாங்கத்துக்கு ஆணை இடுகிறது. ஐந்தாண்டுத் திட்டங்கள் பறை சாற்றுகின்றன. நடைமுறையிலோ ஏறுமாறாக நடக்கிறது!

ஆனால், எந்த மந்திரிக்கு, அரசாங்க ஆணையாளருக்கு, இதை நிறைவேற்ற ஆர்வம் இருக்கிறது? மந்திரிகள் செல்வவான்களுடன் குலாவுவதும், ஆணையாளர் ஊழியத்தில் உள்ளபோது செல்வவான்களைப் போல வாழ வேண்டும் எனக் கருதுவதும், அரசாங்க ஊழியத்திலிருந்து விடுதலை பெற்றதும் செல்வவான்களுடைய ஆட்காரர் ஆவதும்- நடைபெறும்வரை இந்தக்

கொள்கைகள் எழுத்தளவில், பேச்சளவில் நிற்கும் இந்தச்சூழ் நிலையில், இம்மாதிரிக் கட்டுரை களைத் தாங்கி உங்கள் ஏட்டை ஏன் கெடுத்துக் கொள்கிறீர்கள்? மற்ற வெளியீடுகளைப் போலப் பெண்கள் படங்களையும் 'காதல்' கதைகளையும் இன்பக் கவிதை களையும் போடுவது தானே! மக்கள் விரும்புவார்கள்! உங்கள் 'ஒருசாண்' வளர்க்கவும் வழி உண்டு!

K. V. இராமசாமி
(கோவை)

* * *

## சுதந்திரா கட்சிக் கொடி!

வாஷிங்டனிலுள்ள "தேசீய நிலநூல் ஆராய்ச்சி மன்றத்தின்" சார்பில் வெளிவரும் "நேஷனல் ஜாக்ராபிக்" என்ற (1961 செப் டம்பர்) இதழைப் பார்த்தேன். அதனுள் ஆஃப்ரிக்காவிலுள்ள சுதந்தர நாடான சொமாலியா குடி அரசு நாட்டின் தேசீயக் கொடி, வர்ணத்துடன் காணப்படு கிறது. கொடியின் நிறம் நீலம்; 5 கூர்கொண்ட வெள்ளை நட்சத் திரம் நடுவில் பொறிக்கப்பட்டுள் ளது இந்நாட்டிலுள்ள சுதந்தரா கட்சிக்கும் இதே கொடிதான் இருக்கிறது. அய்க்கிய நாடு களைச் சேர்ந்த ஒரு நாட்டின் தேசீயக் கொடியை மற்றொரு நாட்டிலுள்ள அரசியல் கட்சி பயன்படுத்தலாமா? விளக்கம் தருக.

பி. ஜி. உடையார்
(கும்பகோணம்)

* * *

## ஏழு பிறவி?

"ஒருநாள் எழுநாள் போல்
செல்லும் சேட்சென்றார்
வருநாள்வைத்து ஏங்குபவர்க்கு"
குறள் எண் (1269).

வெளிநாடு சென்ற காதலரை நினைத்து ஒருநாள் ஏழுநாள் போல் தலைவிக்கு பெரிதாகத் தோன்றுவதாக அவளது மன நிலையைமிகைப்படுத்திக் கூறுதல் காணும்பொழுது, குறள் எண் களான 62, 107, 126, 398, 538, 835 ஆகிய குறள்களில் வரும் 'எழு' என்ற எழுத்தை ஏழு என்றே பொருள் கொள்ளலாம். எனவே, ஒரு நாள் ஏழு நாள் போலத் தோன்றியதாகக் கூறு வதால் இப்பிறவியில் செய்யும் நன்மையே அன்றித் தீமையோ, ஒருவர்க்கு ஏழு பிறவியில் நன் மையோ அன்றித் தீமையோ, உண்டாகும் என நம்மை அச் சுறுத்தி சொல்லுகிறாரே ஒழிய, (குறளாசிரியர்) மக்களுக்கு ஏழு பிறவி உண்டு என்று அவர் கூற வரவில்லை என்பதாக உணர லாம். மறுபிறப்பைப் பற்றிய பேச்சே எழவில்லை என்பதையும் உணரலாம்.

நா. கலியமூர்த்தி
(நெய்வேலி)

* * *

## கருத்தும் கட்டுரையும்

உரைநடை பொருளுக்கு ஒவ்வு மாறு இருக்க வேண்டும் கம்ப ராமாயணத்தைப்பற்றி கி. வா. ஜகந்நாதன் கதை அளப்பதும், காவிய ஆராய்ச்சியைப்பற்றி மு. வரதராசனர் எழுதுவதும், இலக் கியநுகர்ச்சியைப்பற்றி தெ.பொ. மீ. எழுதுவதும், தொல்காப்பியத் தை சோமசுந்தர பாரதியார் விளக்குவதும் வெவ்வேறு இனத் தவை.

இனி, பொருளாதாரத்தைப் பற்றி, அதுவும் அடிப்படைக் கொள்கைகளைப்பற்றி, இதுவரை யார் எழுதியிருக்கிறார்கள்? (அறி யாமையால் கேட்கிறேன்) சாமி நாத சர்மா ஆங்கிலத்தை அப் படியே வாக்கியம் வாக்கியமாகத்

தமிழ்ப்படுத்தினர். இராமகிருஷ்ணன், முத்தையா ஒரு குட்டையில் குழுஉக்குறிகளை இட்டு அலசினர்கள். (இராமகிருஷ்ணன் வாலியைப்பற்றி எழுதிய நூலுக்கும் அவருடைய பொருளாதார—சமூக கட்டுரைகளுக்கும் எத்துணை வேறுபாடு!) ஜீவானந்தம் தமிழ் நூல்களைப் பற்றித் தெளிவாக, உயிர்தந்து பேசக்கூடியவர், (Technical) விஞ்ஞானத்தைப்பற்றி என்ன எழுதியுள்ளார்? இன்றையப் பள்ளிக்கூடங்களில் எவ்வாறு கற்பிக்கிருர்கள்? இவற்றையெல்லாம் என்னல் அறியமுடியவில்லை.

Let Shakespeare try to write a sonnet on the "International Bank for Resettlement and Development." இவ்வளவு எழுதினலும் யார் படிக்கிருர்கள்?

'கல்கி'யில் அவ்வப்போது திரு ராஜகோபாலாச்சாரி] எழுதும் கட்டுரைகள் சிலவற்றில் பல நல்ல கருத்துக்கள் இருப்பினும் வெறுப்பு உணர்ச்சியால், என்னைப் பொறுத்த வரையில், பயன் இழந்து போகின்றன. திரு. வி. க. நடை அங்கங்கு வழங்குகிறது யாரையாவது திட்டினல், மக்கள் படிக்கத் தயாராக உள்ளனர். ஆக்கவேலைக்கு. யார் வருகிருர்கள்?

ஜூலை மாதம் Encounter இல் இங்கிலாந்தின் இன்றைய நிலைமையைப்பற்றி பலர் எழுதியிருக்கிருர்கள். சுவை நிறைந்தது. அவ்வாறு இன்றை—நாளைய— தமிழ்நாடு பற்றி ஒரு "குத்து" விடுங்கள்; "இன்று இருப்பதும் நாளை எதிர்பார்ப்பதும்" என்ற போக்கில் கைத்தொழில், வியாபாரம், கல்வி (Technical), கல்வி (General), தொழில் (Employment), ஊர்வகுப்பு (Town & Village Planning), காவியம், உரைநடை, கூத்து, திரைப்படம், நாடகம், இசை, உழவு, Irrigation, Power, Agriculture, உணவு இத்தியாதி.

அரசியல் கட்சிகள் தவிர ஒவ்வொன்றிலும் ஆராயவல்ல, உணர்ச்சிமிக்க அறிஞர்களைக் கொண்டு எழுதுவிக்கவேண்டும்.

சில சமயம் "Hindu", "Capital", "Commerce", "AICC. Economic Review"— போன்றவற்றிலும் ஆண்டு மலர்களிலும் இம்முறையில் கட்டுரைகள் வருகின்றன. ஆனல், அக் கட்டுரைகள் வேற்ருரால் எழுதப்பட்டு, பெரிய மனிதர்கள் பெயரில் வெளியிடப்படுவன. அப்பெயர்களால் விளம்பரம் கிடைக்கிறது. இவற்றுக்கும், நான் மேலே குறிப்பிட்ட 'Encounter'க்கும் வேறுபாடு பெரிது!

வரதராசன்
(கோவை)

* * *

## மாணவரா? ஆசிரியரா?

பகீரதன் அவர்களது கட்டுரை கண்டு வியப்பும், வேதனையும், வருத்தமும் அடைகின்றேன். பண்டைய ஆசிரியர்களுக்கு மதிப்பு பொது மக்களிடையே இருந்ததை யாரும் மறுக்க முடியாது. பள்ளிகளில் உள்ள எல்லா ஆசிரியர்களுக்கும் மாணவனை அடிக்கும் அல்லது கண்டிக்கும் உரிமை கிடையாது தலைமை ஆசிரியர் மட்டும் குறிப்பிட்ட காரணத்துக்கு, மாணவனை குறிப்பிட்ட முறையில்மட்டும், தண்டிக்கலாம், என்ற சட்டம் அமுலில் இருப்பது ஒரு வேளை இக்கட்டுரை ஆசிரியருக்குத் தெரியாதோ?

1959ல் திருச்செங்கோட்டில் மாணவர் தேர்ச்சித்தாளில்

பொய்க் கையொப்பமிட்ட மாணவனை ஆசிரியர் தண்டித்ததற்கு அவர்மீது வழக்குத் தொடுக்கப்பட்டு அவ்வழக்கு சென்னை உயர்நீதிமன்றம் வரை சென்றது.

சினிமாவிலும், அரசியல் உலகிலும் பங்கு கொள்ளும் ஆசிரியர்கள் மிகச் சிறுபான்மையினர் இருக்கலாம். அதற்காக ஆசிரியர்களே மாணவர்களை திரைப்படத்துக்குச் செல்லப் பயிற்சி தருகின்றனர், என்ற கூற்று எப்படி உண்மையாகும்? வீட்டிலே 19 மணி நேரம் உள்ள (பள்ளி நேரம் 5 மணி போக) மாணவர்களை கண்காணிக்க வேண்டிய பொறுப்பு பெற்றோர்களைச் சேர்ந்தது. அந்த நேரத்தில் அவன் படக் காட்சியை திருட்டுத்தனமாகப் பார்த்தால், அப்பழி அப்பாவி ஆசிரியரை எப்படிச் சாரும்? பிள்ளைகளைப் பெற்று விட்டால் போதுமா? 19 மணி நேரம், தாங்களே பெற்ற, தாங்களே பழகிய பிள்ளைகளை சினிமா—அரசியல் உலகிலிருந்து பெற்றோர்கள் ஏன் தடுக்கக் கூடாது? ஆகவே முழுக்க முழுக்க, மாணவனின் தேர்ச்சிக் குறைவிற்கு ஆசிரியரைப் பொறுப்பாளி ஆக்குவது அறிவுடைமையாகாது. 5 மணி நேர ஆசிரியர் பொறுப்பைக் காட்டிலும் 19 மணி நேரப் பெற்றோருக்கே பொறுப்பு அதிகம். மாணவர்களில் இத்தனை சதவீதம் தேர்ச்சி பெறும்படி செய்தே ஆகவேண்டும், என்ற சட்டம் இன்னும் ஆரம்பப் பள்ளிகளில் அமுலில் இருப்பது அன்பருக்குத் தெரியாது போலும்!

ஆகவே, மாணவர்களின் தேர்ச்சிக்குறைவிற்கு ஆசிரியர்கள் மட்டுமே முழுப் பொறுப்பாளிகள் ஆகார்; பெற்றோர்களும், மாணவர்களும் மட்டரகமான மஞ்சள் பத்திரிகைகளுமே காரணம் என்பதை அனுபவ ரீதியில் அறிஞர் ஒப்புக்கொள்வர்.

வீ. ஆர். ராம் மோகன்
(த. முருங்கைப்பட்டி)

* * *

## பாதை விலகினரா?

'ஆகஸ்ட்' குத்தூசியில் வெளியான "பாதை விலகிய பாரதி" என்னும் கட்டுரை என் கவனத்தை ஈர்த்தது. ஓவியம் என்னவோ அழகாய்த்தான் தொடங்கப்பட்டிருக்கிறது. ஆயினும் கண்கள் இரண்டும் இல்லை! சென்னையில் 1907 - 1908 ஆம் ஆண்டுகளில் பாரதியாருடன் எனக்கு நெருங்கிய தொடர்பு உண்டு. அக்காலத்தில் அவரிடமிருந்து நான் பல தன்மதிப்புக் கருத்துக்களைத் தெரிந்துகொண்டேன். பார்ப்பனையும், அவன் கொடுமைகளையும், இந்து மதம், ஜாதி முதலியவற்றால் ஏற்பட்ட கேடுகளையும் பாரதி கடுமையாகக் கண்டிப்பார். "ஜாதி மதங்களைப் பாரோம், உயர் ஜென்ம மித்தேசத்தில் எய்தினராயின்..." என்னும் பாடலையியற்றி, அதனை என் முன்னால் அரங்கேற்றியது, இன்றும் என் நினைப்பில் உள்ளது. இப்படியிருக்க திரு. மு. குழந்தைவேலு அவர்கள், பார்ப்பான் என்றால் தலை வெடித்துப்போய்விடுமோ என்று அஞ்சி, அவனைப்பற்றி மூச்சுவிடாமலிருப்பது, அவருக்கு அச்சத்தினால் ஏற்பட்டதென்று கருதுகிறேன்! பாதிக் கிணறு தாண்டுவது கூடாது.

டி. கே. விஜயராகவலு
(நாகை)

உணவு உண்டு. யாவருக்கும் முன்னதாய் எழத்தயாராயிருத்தல் வேண்டும். போர்க்களத்தில் பகைவர்கள் நெருங்கி வந்தவிடத்தும் புறங்கொடாது இறுதிவரை நின்று போரிட வேண்டும்" என்பதே 'பந்திக்கு முந்து; படைக்குப் பிந்து' - என்ற பழமொழியின் நேர்ப்பொருள் ஆகும். இதனை புறப்பொருள் வெண்பா மாலை, திருக்குறள், கலிங்கத்துப்பரணி முதலிய நூல்கள் மூலம் நன்குணரலாம்.

சி. இரா. பரசுராமன்
(திருவண்ணாமலை)

* * *

## சோதிடமும் பாரதியும்

சோதிடப் புரட்டைத் துணிந்து கூறியவர்களில், மகாகவி பாரதியும் ஒருவன் இதை அவர் யாத்த ஆத்திசூடியில் காணும்,

'சோதிடந்தனை இகழ்'. (35)

'வானநூற் பயிற்சி கொள்,(104)

எனும் வரிகளால் நன்கறியலாம். ஆனால் வானநூற் பயிற்சி மட்டுமே, சோதிடம் போன்ற மூடநம்பிக்கைகளை ஒழிக்கபோதுமானது அல்ல உண்மையான ஏற்றத்தாழ்வற்ற சமுதாயம் அமைந்தாலொழிய சோதிடப் புரட்டுக்களை ஒழிக்க முடியாது என்பது எனது கருத்து.

வி. ராமசாமி.
(ஆத்தூர்)

* * *

## பெருக்கி எழுதுக!

ஏப்ரல் இதழில், "ஏழு நாத்திகப் பெரியோர்" என்ற தலைப்பிலுள்ள கட்டுரையில், அறியாமையிருளை அகற்ற முயன்ற சிந்தனைச் சிற்பிகளின் வரலாற்றை ஆசிரியர் (காதம்பரி) குறிப்பிட்டிருந்தார். பகுத்தறிவுப் பஞ்சம் நிறைந்த நம் நாட்டில் இத்தகைய பெரியோர்களின் வரலாற்றை எழுதுவதன் மூலம் அவர்கள் கண்ட ஓர் உயர்ந்த உலகிற்கு ஓரளவாவது பாதை காண முடியும். ஆனால், அத்தகைய பெரியோர்களின் வாழ்க்கை வரலாற்றை சிறு குறிப்பாக மட்டும் தந்துள்ளது போதுமானதாகத் தெரியவில்லை ஒவ்வொரு பெரியாரின் வரலாற்றையும் குறைந்தது இரண்டுபக்க அளவிலாவது தீட்டி, அவர்கள் கூறிச்சென்ற பகுத்தறிவுக் கொள்கைகளை வலியுறுத்தி, படிப்பவர்கள் அவர்களுடைய கருத்தோடு ஒன்றிப் போற்றுமாறு மிகுந்த அளவில் பெருக்கி எழுத வேண்டும். எடுத்துக் காட்டாக, 1963 ம் ஆண்டு ஃபிப்ரவரி மாத இதழில் 'இங்கர்சாலின்' வாழ்க்கைக் குறிப்பை வெளியிட்டது போல், மற்ற அறுவரைப்பற்றியும் தனிக்கட்டுரை எழுதியிருக்கலாம். வில்லியம் காட்வின் (William Godwin) நூலைப்படித்து, புரட்சிக் கவிஞன் ஷெல்லி நாத்திகராக மாறினார் என்று கூறுகிறார், ஆசிரியர். எனவே இத்தகைய பெரியோர்களின் கருத்துக்களை விரிவாக எழுதுவதன் மூலம்தான் கட்டுரை அதன் முழுப்பயனையும் அடைகிறது. ஆகவே, இத்தகைய சிந்தனைச் சிற்பிகளைப் பற்றி தனிக்கட்டுரையாக எழுதுவதே பயன் தரும்.

த. மனோகரன்
(தஞ்சை)

## விலை உயர்வு

அமெரிக்க மக்களும் ருஷ்ய மக்களும் ஏறத்தாழ ஒரே தொகையினர் (17 கோடி). அமெரிக்கா நாட்டில் அதிகமான விளைவு. பொருள்களின் விலை குறைவு. விலை குறைவாக இருப்பதால், அதிகவிலைக்காக பகுதிப்பொருளை அழிக்கின்றனர்: இலவசமாக அனுப்புகின்றனர். ருஷ்யாவில் உணவுப் பெருக்க முயற்சியிருந்தும் விளைவுபற்றாத நிலையில் அங்கு எப்பொருளுக்கும் கட்டுப்பாடு. விலையும் உயர்வு. தேவைக்கும் கிட்டாது. தேவையான பொருள் கிடைக்காது. ஏதோ, கட்டுப்பாட்டில் மக்கள் கட்டுண்டு கிடக்கின்றனர்.

இந்தியாவிலோ இரண்டும் கெட்ட நிலை! விவசாயத்திலும் சரி; கொள்கையிலும் சரி; ஏமாந்த நிலை! ஒரு மாநிலத்தில் விளைந்த உணவுப் பொருளை மறு மாநிலத்துக்குக் குறைந்த விலைக்கு கொடுத்து விட்டு, பிறகு அதிக விலைக்கு வாங்கி கொடுமைக்குள்ளாகும் அவல நிலை!

தமிழ் நாட்டில் எல்லாப் பொருள்களும் விலையேறி இருக்கும் இந்நேரத்தில் உணவு விலை மட்டும் குறைய வேண்டுமா? குறைந்தால் உணவுப் பொருள் விளைவு அதிகமாகுமா? அல்லது குறையுமா? கரும்பும், மஞ்சளும் பயிரிடுகின்ற ஆவலைவிட, உணவுப்பொருள் உற்பத்தியில் ஆவல் குறைவாயிருப்பதன் காரணமென்ன? நல்ல வருமானம் உள்ளதைத்தானே யாரும் விரும்புவார்கள்? இழப்புக்கு யாரும் பாடு பட மாட்டார்களே!

தொழில் செய்யும் முதலாளி பொருளை விலைக்கு வாங்கி நல்ல முறையில் பாதுகாத்து, நல்ல சரக்காக கடைசிவரையில் வைத்திருந்து, ஒரு சிறிது லாபத்திற்கு விற்றால், அதைக் கொள்ளை லாபமாக நினைப்பது தவறு. இழப்பு வரும்போது யாரும் அள்ளிக் கொடுக்க மாட்டார்கள்! துணிந்து முதலிட்டவருக்கு ஏதாவது வருவாய் கிடைத்தால் தான், மீண்டும் நல்ல முறையில் சரக்கை வாங்கி வைத்திருந்து, மக்களுக்கு அளிக்க முடியும்.

கட்டுப்பாட்டின் விளைவால் முன்பு துன்பப்பட்டது போதும்! அதன் ஆரம்பம்தான் இது நேரம் அரசாங்கம் கொண்டு வரும் திட்டம். கட்டுப்பாடு செய்யச் செய்ய அதன் பலன் துன்பமாக முடியுமே தவிர இன்பமாக இருக்காது. அவர்கள் நேர்மையாக, உண்மையாக நடந்தால் தான் எல்லாரும் நலமாக இருக்க முடியும்.

த. கோவிந்தன்
(மண்ணச்சநல்லூர்)

* * *

## பழமொழி விளக்கம்

''உணவு உண்ணும் பந்தியில், மருந்து போன்று சிறிய அளவு

> ### சிறுபான்மையோர்
>
> ''உலகில் எந்த நாட்டின் வரலாற்றை எடுத்துக்கொண்டாலும், வேதங்கள், சாஸ்திரங்கள், கலைகள் — இம் மூன்றையும் ஒரு சிறுபான்மையோரே அனுபவித்துக் கொண்டு வந்தார்கள். பெரும்பான்மையான மக்கள் இவற்றை அநுபவிக்கக் கூடாது என்று சாஸ்திர சம்பந்தமான கட்டுப்பாடுகளையும் ஏற்படுத்தியிருந்தார்கள். பாமர மக்கள் கண் விழித்துக்கொண்டால் பிறகு அவர்களை ஏமாற்ற முடியாது.''
>
> ஆர். கே. ஷண்முகம் செட்டியார்

அலுவல் பார்க்கும் பெண்களின்

# குடும்ப வாழ்க்கை

[கனகசவுந்தரி இளந்திரையன், எம்.ஏ., எம்.லிட்.]

*[வெளி அலுவல் பார்க்கும் மனைவிகள் தம் குடும்பத்திலும் முழுப் பொறுப்போடு நடந்துகொள்ள முடியுமா? உள்ளமும் உடலும் இதற்கு இடந் தருமா? பிறநாடுகளிலுள்ள இந்த முறை இந் நாட்டுக்கும் வந்துகொண்டிருக்கிறதே! இதை எப்படிச் சமாளிப்பது? இக் கட்டுரையாளர் தமது பட்டறிவை (அநுபவம்)க் கொண்டு ஆராய்கிறார். இதற்கு மாறுபட்ட கருத்துள்ள பட்டதாரிப் பெண்களும் இருக்கலாம்; அவர்களும் எழுதலாம்.—ஆசிரியர்.]*

நமது நாட்டில் பெண் கல்வி தீவிரமாகப் பரவத் தொடங்கிய காலத்தில், அதாவது சென்ற தலைமுறையில், படித்து அலுவல் பார்க்கவந்த பெண்களிலே ஒரு குறிப்பிட்ட தொகையினர் திருமணம் செய்து கொள்ளாமலே வாழ்ந்து வந்தார்கள். பழமைப் போக்குடைய சில குடும்பத்தினர் இதைப் பார்த்துவிட்டுத் தங்கள் பெண்களைப் படிக்க வைக்கவே தயங்கினார்கள்.

அவர்களின் தயக்கத்துக்குப் பல காரணங்கள் உண்டு. நன்கு படித்த ஆடவர்களும் கூட, படித்த பெண்களை மணந்து கொள்ள முன்வரவில்லை. படித்த பெண்களும் சில இலட்சியப் பெண்களைத் தவறாகப் புரிந்து கொண்டும், 'ஆண்களும் பெண்களும் சரிநிகர் சமானம்' என்பதன் கருத்தை முறையாக ஏற்றுக் கொள்ளத் தெரியாமலும், திருமணம் செய்யாமல் வாழ்வதே சுதந்திர வாழ்க்கை என்று கருதியிருந்தார்கள். கல்யாண வாழ்வின் இன்பத்தைப் புரிந்து கொண்டோ, புரிந்து கொள்ளாமலோ, அதை ஒரு நீங்காக் கடமையாக ஏற்று, 'பதினாறும் பெற்று பெருவாழ்வு வாழ்ந்து' வந்த நம்மவர்களுக்குத் தங்கள் பெண்களின் போக்கு பேரதிர்ச்சியை ஏற்படுத்தியது. 'திருமணமில்லாமல் பெண்பிள்ளை வாழ்வதாவது!' என்று மருண்டார்கள்....

ஆனால் கல்விவெள்ளம் பெருக்கெடுத்துப் பாய்ந்து, பெற்றோர்–பெரியோர் தடைகளை எல்லாம் தகர்த்தெறிந்து விட்டது. பெண்களும், மருண்ட நிலைமாறி ஓரளவு தெளிந்தார்கள். படித்த ஆண்கள் படித்த பெண்களை மணந்து கொள்வதில் இருந்துவந்த தயக்கமும் தீர்ந்துவிட்டது. சொல்லப் போனால், படித்தவர்கள் படித்த பெண்களையே விரும்பி மணந்து கொள்கின்றார்கள். தங்கள் குடும்பத்தின் பொருளாதார நலனைக் கருதியும், கற்ற கல்வி சமுதாய நலனுக்குப் பயன்பட வேண்டும் என்ற எண்ணத்தினாலும் பல படித்த பெண்கள், குடும்ப வாழ்-

வோடு அலுவல் வாழ்வையும் ஏற்றுக் கொண்டுள்ளார்கள்.

"அலுவல் பார்க்கும் பெண்களின் குடும்பவாழ்வு இன்பமானதாக அமைந்திருக்கிறதா? அலுவல் வாழ்வு அவர்களின் குடும்ப வாழ்வைப் பாதிக்கவில்லையா?" என்பன போன்ற கேள்விகளுக்குப் பலர் ஆவலோடு பதிலை எதிர்பார்க்கிறார்கள். மற்றவர்களை விட அலுவல் பார்க்கும் பெண்களே, இந்தக் கேள்விகளுக்குரிய தெளிவான பதிலைத் தேடித் தங்களைத் தாங்களே துழாவிக் கொள்கின்றார்கள்.

'கணவனும் மனைவியும் வேலைக்குப் போவது' அநேகமாக எல்லாச் சமூகங்களிலும் இருந்துவரும் பழக்கம்தான். நமது நாட்டுப்புறங்களில் இந்தப் பழக்கம் அன்றும் இன்றும் இருந்து வருகிறது. ஆனால், அங்கெல்லாம் இருந்துவரும் இப்பழக்கத்திற்கும், படித்த பெண் வேலை பார்ப்பதற்கும் பல வேறுபாடுகள் உள்ளன; அங்கே, கணவன் கொத்துவேலை செய்தால், மனைவி அதே இடத்தில் சிற்றாளாக இருப்பாள்; கணவன் ஏர் உழப் போனால், மனைவி அதே வயலுக்கு உரம் சுமக்கவோ நாற்று நடவோ போவாள்; கணவன் விறகு வெட்டப் போனால், மனைவியும் விறகை அடுக்கிக் குவித்துவைக்கவோ வண்டிகளில் ஏற்றவோ உடன் செல்வாள். படித்து அலுவல் பார்க்கும் பெண்களுக்கு இந்த வாய்ப்பு அமையவில்லை. இருவரும் வெவ்வேறிடங்களில் வேலை பார்க்க வேண்டும்; வெவ்வேறு வகையான வேலைகளும் பார்க்க வேண்டும். வெவ்வேறு ஊர்களிலும் கூட வேலை பார்க்க வேண்டும்! இந்த வேறுபாட்டின் நிழல் குடும்ப வாழ்வின் மேல் விழாதிருக்குமா?

## சிக்கலான நிலைமை!

நாட்டுப்புறத்துப் பெண் வேலை முடிந்து திரும்பியதும் வீட்டு வேலைகளில் ஈடுபடுகிறாள். வெளியில் செய்த வேலையைப் பற்றிய நினைவுகள் (வீட்டிலே) அவளுக்குத் தேவை இல்லை. அதைப் பற்றிய சிந்தனைக்கும் திட்டங்களுக்கும் அவள் கணவன் இருக்கிறான். படித்து அலுவல் பார்க்கின்ற பெண்ணோ, தனது அலுவலைப் பற்றிய சிந்தனையை, வீட்டுக்கு வந்ததும் துண்டித்துக் கொள்ள முடிவதில்லை. அவள் வேலை வேறாகவும் அவள் கணவனின் வேலை வேறொன்றாகவும் இருப்பதால், அவள் வேலையைப் பற்றிய சிந்தனையையும் பொறுப்பையும் அவள் கணவன் ஏற்றுக் கொள்ள முடிவதில்லை.

நாட்டுப்புறப் பெண், வெளியில் செய்த வேலையின் களைப்பை வீட்டுவேலைகளில் மாற்றிக் கொள்ள முடிகிறது. 'ஓய்வு என்பதே, ஒரு வேலையை விட்டு அதனோடு தொடர்பே இல்லாத வேறொரு வேலையில் ஈடுபடுவது தானே?' இந்த வாய்ப்பு அலுவல் பெண்ணுக்கு இல்லை; நாளின் பெரும்பகுதியில், அவள் வேலையைப் பற்றிய நினைவே அவள் நெஞ்சை ஆட்கொண்டு கிடக்கிறது. நாட்டுப்புற நங்கை, வீட்டுக்கு வந்த சிறிது நேரத்துக்கெல்லாம் உற்சாகமாகக் கணவனுக்கு வேண்டிய பணிவிடைகளைச் செய்யத் தொடங்கி விடுகிறாள். அலுவல் பார்ப்பவளுக்கோ அது அவ்வளவு எளிதில்லை; கணவனைப் போலவே அவளும் ஒரு பொறுப்பைத் தனியே சுமந்து களைத்துப் போய் வந்திருக்கிறாளே! உடல் உழைப்பை விட மூளை உழைப்பு அதிகக் களைப்புத் தரக்கூடியதல்லவா? நாட்டுப்புறத்தில் கணவ-

ணின் 'நிழலாக' அல்லது அவனுடைய 'இடப்பாகமாக' நின்ற பெண், இங்கே தனிப்பெண்ணாகவே நிற்கவேண்டியதாகி விடுகிறது.

இந்த இடத்திலேதான் நமது குடும்பவாழ்க்கைச் சம்பிரதாயம் குறுக்கிடுகிறது. நமது நாட்டு ஆண்களும் பெண்களும் படித்துப் பட்டங்கள் பெற்று அலுவல் பார்க்க வந்துவிட்டாலும், இந்த நாட்டுக்குரிய குடும்பப் பண்பு அவர்களோடு ஒட்டிக்கொண்டே இருக்கிறது. குடும்பவாழ்வை நாம் ஒரு கடமையாகச் சுமக்கவில்லை; அதை ஒரு இனிய கலையாகவே கொள்ளுகிறோம். கணவனும் மனைவியும் ஒருவருக்கொருவர் செய்யும் காதற் பணிவிடைகளே அதில் முக்கியம்.

''முளிதயிர் பிசைந்த
காந்தள் மெல்விரல்
கழுவுறு கலிங்கம்
கழாஅது உடீஇ,
குவளை உண்கண்
குய்ப்புகை கமழ,
தான்துழந்து அட்ட
தீம்புளிப் பாகர்
'இனிது' எனக்
கணவன் உண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன்று
ஒண்ணுதல் முகனே..''

என்னும் குறுந்தொகைப் பாட்டில் விவரிக்கப்படும் குடும்பக் காட்சிக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுப்பது நம்முடைய இல்வாழ்க்கை. அலுவல் பெண் தானே சமைத்த உணவைத் தன் கணவனுக்குத் தானே படைத்து மகிழும் காதற்பணிவிடை இன்பத்தை எப்போதும் அனுபவிக்க முடிவதில்லை. அவனுக்கு முன்னே அவள் வேலைக்குப் புறப்பட வேண்டியிருந்தால், அவள் சமைப்பதற்கும் படைப்பதற்கும் நேரம் ஏது?

## ஓய்வும் உழைப்பும்

ஓய்வுக்கும் உழைப்புக்கும் உள்ள தொடர்பை உணராதவர்கள் மலிந்தது நமது நாடு. வாரத்தில் ஆறேமுக்கால் நாள் 'ஆபீசு'க்குப் போனால் தான் அதிக வேலை நடக்கும் என்று பலர் எண்ணி வருகிறார்கள். எந்திரத்திற்கு ஒருவேளை இது சரியாக இருக்கலாம். அறிவைக் கொண்டு வேலை செய்யும் மனிதர்களுக்கு அதிக ஓய்வு அவசியம். போதிய அளவு ஓய்வு இருந்தால்தான், வேலை செய்யும் நேரத்தில் முழுக்கவனமும் தீவிரக் கவனமும் வேலையிலேயே செலுத்த வாய்ப்பு உண்டு. அது இல்லாததால்தான், இன்று பெரும்பாலான அலுவலகங்களில் வேலை நேரம் ஓய்வு நேரமாகவே போய்விடுகிறது!!

'வாரத்தில் ஆறுநாள் வேலை; ஏழாவது நாள் ஓய்வு' என்று சொல்லப்படுகிறது. பார்க்கப் போனால் அது ஓய்வுநாளே அல்ல! ஆறுநாள் வேலையின் நினைவுவெள்ளம் அந்த ஏழாம் நாளை அடித்துக் கொண்டு போய், எட்டாவது நாள் வேலையைப் பற்றிய நினைவில் தள்ளிவிடுகிறது. தன் குடும்பத்தைப் பற்றி நினைக்க அவளுக்கு நேரம் ஏது? ஆகையால் குடும்பவாழ்வைப் பற்றிய சம்பிரதாயங்களையும் பழக்கவழக்கங்களையும் மாற்றிக் கொள்ள வேண்டியிருக்கிறது. முன்பு பெரிய இன்பமாகக் கருதிய சின்னஞ்சிறு நிகழ்ச்சிகளை எல்லாம் கைகழுவி விட்டு, சமையல்காரியின் செயல் வண்ணத்தையும் வேலைக்காரனின் படைப்பு வண்ணத்தையுமே கணவனும் மனைவியும் 'சுவைக்க' வேண்டியிருக்கிறது. அந்தக் கட்டத்திலே கூட இருவரும் எப்போதும் ஒன்றாக இருக்க வாய்ப்பதில்லையே!

இந்த மாறுதல், ஒருவகையில், இக்காலக் குழந்தைகளுக்கு நல்லது அலுவல் வாழ்வுக்கேற்ற சூழ்நிலே அவர்களுக்கு இளமையிலேயே பழக்கப்பட்டுப் போகிறதல்லவா? 'நம் அன்னேயும் தந்தையும் வாழ்ந்த காதலின்ப வாழ்க்கை நமக்கு அமையவில்லேயே' என்று இக்கால அலுவல் தம்பதிகள் வருந்துகின்றனர்கள்; அந்த வாழ்வையே கண்டிராத இக்காலக் குழந்தைகள் அப்படி வருந்தமாட்டார்களல்லவா?

'கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை' என்று ஒரு பழமொழி சொல்வார்கள். கணவனும் மனேவியும் அலுவல் பார்க்கும் குடும்பங்களின் நிலே இப்படித்தான் இருக்கிறது. தொழில் இன்பமும் குடும்ப இன்பமும் ஒன்றை ஒன்று பாதிக்கும் போது, இரண்டையும் உரிய வகையில் சரிப்படுத்திக் கொள்வதே நல்லது. நமது பழைய வாழ்க்கைமுறை பூஞ்சோலே போன்றது. அங்கே செடிகொடிகள் ஒன்ருேடு ஒன்று பின்னிப் பிணைந்து கிடக்கும். அதிலே ஓர் அழகு உண்டு. அலுவல்-குடும்பவாழ்க்கை, வகுத்து வரிசைப்படுத்தி வைத்த வீட்டுத் தோட்டம் போன்றது. இதிலே ஒவ்வொரு செடியும் கொடியும் தனித்தனியே தனக்குரிய இடத்தில் நிற்கும்; இதிலேயும் ஒரு அழகு உண்டு. பூஞ்சோலேயில் அழகு கண்டு பழகிய கண்களுக்கு வீட்டுத்தோட்டம் அழகாகவே தோன்றுவதில்லே. ஆனல், சோலேகள் இல்லாத போது வீட்டுத் தோட்டத்தில் அழகு காணப் பழகிக் கொள்வதே நல்லது. அலுவல் பார்க்கும் பெண்களும் அவர்களின் கணவன்மார் முதலிய உறவினர்களும் இதைத் தெளிவாக உணர வேண்டும். அலுவலகக் கடமையை அலுவலகத்தோடு விட்டுவிடவும், வீட்டுக் கடமைகளே வீட்டோடு விட்டுவிடவும் பழக வேண்டும். எதையும் அதனதன் நேரத்தில் செய்வது என்ற நினேவே இல்லாதிருந்த பழைய வாழ்வை மறந்து, எழுவது, குளிப்பது, படிப்பது, உண்பது, உறங்குவது போன்ற அன்ருடக் கடமைகளே எல்லாம் 'மணிப்படி' செய்யப்பழக வேண்டும். 'நாம் கலே உலகில் வாழ்ந்த அத்தியாயம்

---

## பயோரியா

(Pyorrhoea alveolaris)

பயோரியா என்னும் பல்நோய் பலருக்கு உண்டு. பல்லும் ஈறும் சேருமிடத்தில் சீழ் வரும். முதலில் ஈற்றில் வீக்கம் கண்டு பிறகு சீழ்பிடிக்கும். இதனல் பல் நாளடைவில் அசைந்து தளர்ந்துவிடும். வாயிலிருந்து கெட்ட நாற்றம் வீசும். ஈற்றிலுள்ள சீழினல் வயிற்றிலும் குடலிலும் புண்கள் ஏற்படக் காரணமாகிறது. எக்ஸ்ரே எடுத்தால் இந்நோயைக்கண்டு பிடிக்கலாம்.

துவக்கத்திலேயே சரியான மருத்துவஞ் செய்ய வேண்டும். எதையும் நன்ருக மென்று தின்னவேண்டும்; லபக்—லபக்கென்று விழுங்கவே கூடாது. குறிப்பாக, இனிப்புப் பொருளேத் தின்றபிறகு வாயை நன்ருகக் கொப்புளிக்கவேண்டும். அதிகாலேயில் பல் துலக்கி வாயைக் கொப்புளிக்கவேண்டும்; இரவிலும் உறங்கப் போகுமுன் இப்படிச் செய்யவேண்டும்.

இந்நோய் முற்றிப் பல் ஆடிவிடுமானல் அப்பல்லேப் பிடுங்கியே தீரவேண்டும். இல்லாவிடில் சீழிலுள்ள கிருமிகளால் இருதயத்துக்கும்கூடக் கேடு ஏற்படக்கூடும்.

---

முற்றிற்று, தொழில் உலகில் வாழும் அத்தியாயம் தொடங்கி விட்டது' என்பதை உணர்ந்து காரியங்களைச் செய்ய வேண்டும்.

## புது வாழ்விலும் ஓய்வு

நம்மை இந்தப் புதுவகையான வாழ்வில் திருப்பிவிட்ட மேலை நாட்டவர்கள் நமக்கு வழிகாட்டு கிறார்கள். இங்கிலாந்து போன்ற நாடுகளில் குடும்பவாழ்க்கை, தொழில்யுகத்திற்கு ஏற்றதாக மாறியிருப்பது கவனிக்கத்தக்கது. வாரத்தில் ஐந்துநாள் கணவனும் மனைவியும் அவரவர் வேலைக்கு ஒழுங்காகச் சென்று வருகிறார்கள். தொடர்ந்து வரும் இரண்டு (ஓய்வு) நாட்களில் அலுவலகத்தை அடியோடு மறந்துவிட்டு, குடும்பநிகழ்ச்சி களில் ஈடுபடுகிறார்கள். குடும்பத் தோடு வெளியிடங்களுக்குச் சென்று, மற்றவர்களோடு உறவாடி மகிழ்கின்றார்கள். இயற்கை வனப்பு உள்ள இடங்களுக்கும் செயற்கைச் சிறப்புள்ள இடங்களுக்கும் உல்லாசப் பிரயாணம் செய்கின்றார்கள். அடைபட்ட நகரவாழ்வின் எல்லைகளுக்கு அப்பால், தங்கள் குழந்தைகளோடு இன்பமாக உலவி வருகிறார்கள்.

ஒன்றிலிருந்து ஒன்றைத் தனிமைப்படுத்தியே பழகியிராத நமக்கு இத்தகைய வாழ்க்கை சிறிது கடினமாகவே இருக்கும். ஆனாலும் பழங்காலத்தில் பல வகையான பிரிவுகளால் கணவன் – மனைவி அன்பு மிகுதிப்பட்டு வலுப்பட்டது போல, இந்த வகையான 'பிரியாப்பிரிவு' வாழ்விலும் அன்பு அதிகரிக்க வழி உண்டு. பட்டணங்களில் சென்று தனிக்குடித்தனம் நடத்துகின்ற அலுவல் தம்பதிகளுக்கு, இந்தப் பிரிவு ஒரு வகையில் நல்லதே.

நமது நாட்டைப் பொறுத்த வரையில், சமுதாயச் சம்பிரதாயம் எதுவும் ஆண்களைவிடப் பெண்களின் நெஞ்சிலேயே ஆழமாக வேரூன்றி உள்ளது. அந்த மரபில் வந்து, படித்து அலுவல் பார்க்கும் பெண்கள், ''நாம் நமது குடும்பக் கடமைகளை ஒழுங்காக நிறைவேற்ற முடியவில்லையே!" என்று வருந்துவது இயற்கை. பல் துலக்குவது முதல், இரவில் படுக்கச் செல்வது வரையில் ஒவ்வொரு சிறிய வேலையிலும் கணவனுக்குத் துணை நிற்பவர்கள் நமது நாட்டுப் பெண்மணிகள். அடுத்த வீட்டுப் பெண்ணும் எதிர்த்த வீட்டுப் பெண்ணும் அவைகளைத் தவறாது செய்து வருவதைப் பார்க்கின்ற அலுவல்பெண், தன் குடும்பத்தில் அவை அனைத்தும் நிகழ முடியவில்லையே என்று வருந்துவதும் இயற்கை.

இந்த எண்ணங்கள் பெண்களின் இதயத்தில் புண் ஏற்படுத்தி விடாதபடி பார்த்துக் கொள்ள வேண்டியது அவர்கள் கணவன்மாரின் கடமை. அவர்கள் தங்கள் தந்தையர் கொண்டாடிய 'உதவி உரிமை'களில் சிலவற்றையாவது கைவிட்டுத் தங்கள் மனைவியரை ஊக்கப்படுத்த வேண்டும். சிறிய விடுபாடுகளைப் பெரிதுபடுத்தாமல், குடும்ப அமைதியையும் இன்பத்தையும் பேணிப் பாதுகாக்க வேண்டும்.

ஒருசமயம் கவிஞர் பாரதிதாசனாரைச் சந்தித்தபோது. அவருடைய குடும்ப விளக்கு பற்றிப் பேச்சு வந்தது. ''குடும்ப விளக்குக்கு இத்தனை வேலைகளைக் கொடுத்திருக்கிறீர்களே!'' என்று என் கணவர் கேட்டார்கள். உடனே பாரதிதாசன், ''இத்

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

# பாராளுமன்றத்தில் புளுகுப்போர்?

[ டாக்டர் எம். ஜே. கே. தவராஜ், M. A., Ph. D. ]

*[அடிப்படைப் புள்ளி விவரங்கள் ஏன் முரண்பாடு கொண்டிருக்கின்றன என்பது பற்றியும், இந்தியரின் வறுமையும் வேலையின்மையும் ஏன் சிறிதுகூடக் குறையவில்லை என்பதுபற்றியும் ஆராய்கிறார், பொருளாதார ஆராய்ச்சி நிபுணர்-கட்டுரையாளர். இந்தியத்தொழில்களின் மொத்தப் பகுதியில் மூன்றில் ஒரு பங்கு ஏழே ஏழு பணக்காரக் குடும்பங்களிடம்; பாங்குகளிலுள்ள சேமிப்புப் பணத்தில் முக்கால் பகுதி பதினைந்தே பாங்குகளிடம்! இதுதான் சோஷ்யலிசமா, என்று அறைந்து கேட்கிறார், கட்சிசார்பற்ற முறையில். இன்றுள்ள சமுதாயக் கேடுகளின் காரணத்தையும் பிளந்து காட்டுகிறார்,—ஆசிரியர்.]*

"பள்ளிக் கணக்கு புள்ளிக்கு உதவாது," என்றது அந்தக் காலம்; புள்ளிக்கணக்கு புளுக உதவும் என்பது இந்தக் காலம்! நம் நாட்டு மக்களின் சராசரி வருவாய், வரவு-செலவு வாழ்க்கைத் தரம் எல்லாம் ஊரறிந்த, ஏன்? உலகறிந்த செய்தி. இருந்தாலும் புள்ளிவிபரம் காட்டவேண்டுமல்லவா? அதுபற்றித்தான் பாராளுமன்றத்திலே "புளுகுப் போர்" மூண்டது போலும்!

காங்கிரஸ் ஆட்சியில் கஞ்சிக்கும் வழியில்லை என்று காட்டி விரும்பினார், பாராளுமன்றத்தின் புதுமுகம் டாக்டர் லோகியா. "மக்கட் தொகையில் அறுபது சத விகிதத்தினருக்கு சராசரி நாளொன்றுக்கு மூன்று அணா கூட வருவாயில்லை; இப்பிச்சைக் காசைக் கொண்டு உணவு, உடுக்கை, இருக்கை ஆகிய அத்தியாவசியத் தேவைகளை எப்படிப் பூர்த்தி செய்ய முடியும்? இது தானா பதினைந்து ஆண்டுகளாக

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

தனை வேலையா? பெண்களைக் கேளுங்கள், இது என்ன வேலை, இன்னும் எத்தனையோ செய்யலாமே, என்பார்கள்", என்று சொல்லிவிட்டு, "ஏன், அம்மாளையே கேளுங்களேன்", என்று என்னைச் சுட்டிக் காட்டினார். கவிஞர் கூறியது முற்றிலும் உண்மை. பொதுவாக, (விதிவிலக்குகள் தவிர) நமது பெண்கள், எவ்வளவு அதிகமான வேலை இருந்தாலும், அத்தனையும் செய்து குடும்ப வாழ்வை இன்பமயமாக்கவே முயல்கின்றார்கள். வேலைப்பளுவை எண்ணிப் பெண்கள் அஞ்சித் தயங்குவதே இல்லை.

ஆயினும், "கொள் எனக் கொடுத்தல் உயர்ந்தன்று அதனெதிர், கொள்ளேன் என்றல் அதனினும் உயர்ந்தன்று" என்பது போல, "செய்யேல்" என்று சொல்லிச் சில கடமைகளிலிருந்து மனைவிக்கு விடுதலை கொடுக்க முன் நிற்பது கணவனுக்கு அழகு; "செய்வேன்" என்று ஆர்வத்தோடு முன் நிற்பது அலுவல் பார்க்கும் மனைவிக்கு அழகு. இதுதான் நமது இரத்தத்தில் ஊறியுள்ள காதல் செயல் முறை.

நடந்துவரும் காங்கிரஸ் ஆட்சியில் நாடு கண்ட பலன்?'' என்ற பொருள்படும்படி முழங்கினார்.

''இதென்ன அபாண்டம்? நாட்டின் சராசரி வருவாயே பதினைந்து அணாவாயிற்றே! அப்படியிருக்க இருபத்தேழு கோடி மக்களுக்கு மூன்றணாகூட கிடைப்பதில்லை என்றால் எப்படிப் பொருந்தும்?'' என்று பதிலிறுத்தார், பாரதப் பிரதமர், நேரு.

நேருவும் லோகியாவும் இப்படி ஒருவர்மீது மற்றொருவர் புள்ளிக் கணக்குகளை அள்ளிவீசிக்கொண்டிருக்கும்போது அப்போதைய திட்ட அமைச்சர் நந்தா பை நிறையப் புள்ளி விவரங்களைக் கொண்டுவந்து கொட்டினார்! இவ்விவரங்கள் வருவாயைப் பற்றியவை அல்ல; செலவை அடிப்படையாகக் கொண்டவை. அதன்படி, அடித்தளத்திலுள்ள அறுபது சதவிகிதம் மக்களின் சராசரிச் செலவு நாளொன்றுக்கு மூன்றணாவுமல்ல; பதினைந்து அணாவுமல்ல; ஏழரை அணா' இச்செலவு வருவாயை மிஞ்சிய செலவாகவும் இருக்கலாம் என்பது இலை மறைகாய்போல விளங்குவதாகும்.

பாராளு மன்றத்தில் நடந்த இப்போர் பத்திரிகை உலகிலும் எதிரொலித்தது. ஒரு சில லோகியாவுக்குப் பக்கபலமாக அணிவகுத்து நின்றன. வேறு சில அரசாங்கத்துக்குச் சப்பைக் கட்டுக் கட்டத் தலைப்பட்டன. உண்மை உணர்ந்தவர் இப்புளுகுப் போரின் போக்கைக் கண்டு மிரண்டுபோயினர்.

## யாரை நம்புவது?

திட்டக் கமிஷனும் இது பற்றித் தெளிவான கருத்துக் கொண்டிருப்பதாகத் தெரியவில்லை. சில மாதங்களுக்கு முன்னால் திட்டக் கமிஷன் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் அடித்தட்டிலுள்ள அறுபது சதவிகிதம் மக்களுக்கு மாதம் தலா இருபத்திரண்டு ரூபாய் வருவாய்கூட இல்லை என்று கண்டிருந்தது. (அதாவது நாளொன்றுக்குப் பன்னிரண்டு அணாகூட கிடைப்பதில்லை) இதனடிப்படையில்தான் நந்தாவும் சராசரிச் செலவு ஏழரை அணா என்று கணித்தார் போலும். ஆனால் அதே அறிக்கையில் உழைக்கும் சக்தி குன்றாதிருக்கப் போதிய உணவு, உடை, இருக்கை ஆகியவற்றுக்கென சராசரி மாத வருவாய் முப்பத்தைந்து ரூபாயாவது இருக்கவேண்டும்; அதுவும் விலைவாசிகள் ஏறாமல் இருந்தால் தான், என்று குறிப்பிட்டனர். இவர்களில் யாரை நம்புவது? நாட்டுத் தலைவர் நேருவையா? எதிர்க்கட்சிக்காரர் லோகியாவையா? அல்லது நிபுணர்களைக் கொண்ட திட்டக் கமிஷனையா? மூன்று கணக்குகளும் ஒன்றுக்கொன்று முரண்பட்டிருப்பது கண்கூடு.

இந்தச் ''சராசரி'' சங்கதியே இப்படித்தான். ஒருவனுக்கு ஒரு லட்சம் வருவாய் இருப்பதாகவும் மற்றொருவனுக்கு வருவாயே இல்லை என்றும் வைத்துக் கொண்டால் இருவருக்கும் சேர்ந்து சராசரி வருவாய் ஐம்பதினாயிரம் என்று ஆகும்! இந்தக் கணக்கு ஒருவனுக்கு வருவாயே இல்லை என்ற உண்மையை அப்படியே மூடி மறைத்துவிடுகிறது! இன்றும் நம் நாட்டில் லட்சக்கணக்கான ஆண்டிகளும் அபலைகளும் உலவி வருவது யாவரும் அறிந்ததே. எச்சிலைக்காக நாய்களுடன் போட்டியிடுவதும் ஓட்டாண்டிகளாகத் தெருவும் திண்ணையுமாகத் திரிந்து திண்டாடுவதும் பழங்கதைகள் ஆகிவிடவில்லை.

வேலை இன்மை பெருகி வருகிறது; வேலைக்கான வாய்ப்புகளோ ஆமை வேகத்தில் அதிகரித்து வருகின்றன! இந்நிலையில் கோடிக்கணக்கான பேர் அரை வயிறும் கால் வயிறுமாக இருப்பதில் வியப்பொன்றுமில்லை. பிச்சை எடுப்பவர் பலர்; அண்டை அயலார் வீட்டில் வடிக்கும் கஞ்சித்தண்ணீரைக் கொண்டு வயிறு கழுவுபவர்கள் வேறு சிலர். பஞ்சத்தால் செத்து மடியாவிட்டாலும் ஓட்டாண்டிகளாக, நடைப்பிணங்களாக, பல்லாயிரமானவர் நாடெங்கணும் நடமாடி வருகின்றனர்.

> ## "நான்கண்ட இந்தியா (1953)"
>
> "மகாவீரரும் கவுதம புத்தரும் க்ஷத்திரிய வகுப்பைச் சேர்ந்தவர்கள். கொஞ்சம் கொஞ்சமாக மதச் சடங்குகளும், நம்பிக்கைகளும், ஜாதிகளும் பெரும் அளவுக்கு ஓங்கிவிட்ட சமூக அமைப்பை இருவரும் எதிர்த்தார்கள். புராதனமான கடவுள்களை மறுத்தார்கள். புத்தர், தனி வாழ்க்கையின் ஒழுக்கமும், முக்கியமாக அகிம்சையும்தான் முக்கியம் என்று பலமாக வற்புறுத்தினர்கள். புத்தர் கீழ்த்தரமான மூடநம்பிக்கைகளை மட்டுமின்றி, இந்துமதத்தின் உயர்ரகவேதாந்தப்புதிர்களையும்தாக்கினர். ஜாதிகளை ஒப்புக்கொள்ள மறுத்தார். புத்தரின் இந்தக் கருத்துக்கள் இந்திய மக்களுக்கு "தென்றல் போல் இருந்தது" என்கிறார், நேரு."
>
> செஸ்டர் பவுல்ஸ்
> (பக்கம் 79)

## ஏழு கோடீசுரக் குடும்பங்கள்

திட்டங்கள் இருக்கத்தான் செய்கின்றன. வறுமையை விரட்டவேண்டும்; வேலைக்கான வாய்ப்புகளைப் பெருக்க வேண்டும்; மக்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டும்—என்ற பல தலையாய குறிக்கோள்களைத் தாங்கியவை அத்திட்டங்கள். குறிப்பாகத் தனிநபர் வருவாயை இருபத்தேழு ஆண்டுகளில் இரட்டித்துவிட வேண்டும்-என்பது திட்டம். ஆனால் நாட்டு வருவாய் எதிர்பார்த்த வேகத்தில் வளருவதாக இல்லை. மக்கட்தொகையோ கட்டுக்கடங்காமல் எவ்வுகிறது. இந்நிலையில் கடந்த பன்னிரண்டு ஆண்டுகளில் தனிநபர் வருவாய் (நிலையான விலையில்) இருபது சத விகிதமே உயர்ந்திருக்கின்றது. எஞ்சிய எண்பது சத விகிதத்தையும் பாக்கியுள்ள பதினைந்து ஆண்டுகளில் ஏற்றிவிடலாம் என்பது எளிதல்ல.

செல்வம் ஒரு சிலரின் கையில் போய்க் குவிவதைத் தடுக்க வேண்டும் என்பது அரசியல் சட்டம். இதே கருத்தைத்தான் திட்டங்களும் பறை சாற்றின. சமதர்ம அடிப்படையை அமைக்கப் போவதாக ஆவடி காங்கிரஸ் அறிவித்தது. ஆனால் நடைமுறை வேறு விதமாக உள்ளது. நாட்டு வருவாயில் கால் பகுதி மக்கட் தொகையில் ஐந்தே சத விகிதத்தினரின் கையில் சிக்கியுள்ளது. தொழில் துறையிலோ, ஒரு சில குடும்பங்களின் ஆதிக்கமே ஓங்கிக்கொண்டிருக்கிறது. தொழில்களின் மொத்த மதிப்பில் மூன்றில் ஒரு பகுதி ஏழு பணக்காரக் குடும்பங்களின் கையில் உள்ளன. அவற்றின் செல்வாக்குத் தொழில்துறை எங்கணும் படர்ந்து பரவி வருகிறது. அயல்நாட்டு மூலதனமும்

ஆங்காங்கே புகுந்து புரையோடி வருகிறது. முதல் திரட்சி மேன்மேலும் ஒரு சிலரின் கையிலேயே ஒதுங்குகிறது. பாங்குகளில் மக்கள் வைப்பாகப் போட்டு வைக்கும் தொகையில் முக்கால் பகுதிக்குமேல் பதினைந்தே பாங்குகளின் கைப்பிடியுள் அடங்கியுள்ளது. தொழில் அதிபர் பலர் பாங்குகளிலும் ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர். எனவே பாங்குகளிடம் உள்ள பணத்தைக்கொண்டு தங்கள் தொழில்களை வளர்க்கும் வாய்ப்பு அவர்களுக்குக் கிட்டுகிறது.

நிலத்திலும் இதே நிலைதான். கோடிக்கணக்கில் நஷ்டஈடு கொடுத்து ஜமீன்தாரியை ஒழித்தோம். ஆனால் நிலம் பணக்கார விவசாயியின் கைக்கு மாறுவதைத் தடுப்பதில் அவ்வளவு வெற்றி காணவில்லை நிலத்தில் உயர்ந்தபட்ச வரம்பை விதிப்பது பெரும்பாலும் கண்துடைப்பாகவே இருந்து வருகிறது அதன் பயனாக நிலத்தில் ஏற்றத் தாழ்வு வளருகிறது. நிலத்திலிருந்து கிடைக்கும் வருவாயில் மூன்றிலொரு பகுதி மூன்றே சதவிதமான பணக்கார விவசாயிகளிடம் போய்க் குவிகிறது. நில உடைமையும் அதே நிலையில்தான் உள்ளது. நிலமற்ற விவசாயக் கூலிகளின் எண்ணிக்கையும் குறைவதாகக் காணோம் சுருங்கக் கூறின், உள்ளவனுக்கு அதிகமாகக்கிடைக்கிறது; இல்லாதவனிடமிருந்து உள்ளதும் பறிபோகிறது. பாரதப் பிரதமரும் இவ்வுண்மையை ஏற்றுக்கொள்ளாமலில்லை.

காரணம் என்ன ?

சொல்லுக்கும் செயலுக்கும் இடையே ஏன் இந்த இடைவெளி ? திட்டங்கள் என்ன, வெறும் ஏட்டுச் சுரைக்காய்களா ? அல்லது திட்டம் தீட்டியவர்கள் கனவுலகில் சஞ்சரிப்பவர்களா ? அப்படியும் சொல்லிவிடுவதற்கில்லை. பின்னை ஏன் இந்த இழிநிலை ?

அடிப்படைக் காரணங்களை அடுக்கி வரைவோம். இன்று நம் நாட்டிலுள்ள அரசியல் தலைவர்கள் பலரிடையே தெளிவான நீண்டகாலக் கண்ணோட்டமில்லை; பொது நலனில் போதுமான பற்றில்லை. அறிஞர் பலருக்குப் பாமரரின் கருத்தோட்டங்களும் செயல் முறைகளும் பெரும் புதிராக உள்ளன. எனவே திட்டங்கள் மிதவாதப் போக்கிலேயே அமைந்துள்ளன. அவற்றை அமுல் நடத்த வேண்டிய அரசாங்க எந்திரமோ அடக்குமுறை, எதேச்சாதிகாரம் ஆகியவற்றில் பழக்கப்பட்டவை. சட்டத்தையும் அமைதியையும் நிலைநாட்டும் போலீஸ் சர்க்காராக இருந்த அது, மக்களது பொருளாதார — சமூக — நலன்களைப் பேணிவளர்ப்பதற்கான திட்டங்களை அமுல் நடத்தக் கூடியதாக, "மறு பிறவி" எடுப்பது எளிதான காரியமல்ல. அதிகாரம் ஒரு சிலரின் கையில் குவிந்து கிடக்கின்றது. கையிலுள்ள அதிகாரத்தைத் திறம்படகொண்டு செலுத்தும் ஆர்வமுமில்லை; பொறுப்புணர்ச்சியுமில்லை. எவனுக்கு வந்த கேடோ என்ற மனோபாவம் தலைதூக்கி வருகிறது. லஞ்சமும் ஊழலும் மலிந்துவிட்டது அரசியல் வாதிகளின் குறுக்கீட்டால் எஞ்சியுள்ள பொறுப்புணர்ச்சியும் குட்டிச் சுவராகிறது. அதிகாரிகளுக்கோ மக்களது நலன்களில் அக்கறை இல்லை; மக்களுக்கோ அதிகாரிகளின் மீது நம்பிக்கையில்லை. இந்நிலையில் அவர்கள்

(64 பக்கம் பார்க்க)

கவிதைப் பகுதி .

# கட்டாரி நீட்டுகின்றார்!

—கவிஞர் முருகுசுந்தரம்—

*[ஏதென்சு நகர மக்கள் பேரவை கூடியிருக்கின்றது. சிந்தனைச் சிற்பி சாக்ரட்டீசு குற்றவாளிக் கூண்டில் ஏற்றப்பட்டிருக்கிறார். தம் மீது சுமத்தப்பட்ட குற்றங்களை மறுத்து; அவர் ஆற்றிய சொற்பொழிவே இது.]*

1

ஏதென்சு நாட்டவரே! குன்றெ டுத்த
எர்குலிசின் பரம்பரையே! அத்து மீறிக்
காதலித்துக் கரையோரம் ஆயிரம் போர்க்
கப்பல்களை வரவழைத்த அழகுப் பூசல்
மாதரசி ஹெலனுக்குப் பின்பி றந்த
மறவர்களே! இறவாமல் இனிக்கும் காதற்
காதைக்குள், கவிதைக்குள் வாழும் ஹோமர்
கால்வழியில் வந்தவரே! கிரேக்க மக்காள்!

2

எழுத்துக்கள் அணிவகுக்கும் வாக்கி யத்தின்
எல்லையிலே நிற்கும்வினாக் குறியைப் போலக்
கிழத்தன்மை யால்முதுகு வளைந்து விட்டேன்.
கேள்வியினால் இந்நாட்டு மடத்த னத்தை
முழம்போட்டுப் பார்ப்பதுதான் எனக்கு வேலை.
முட்டாளை மூக்கறுத்தேன் என்ப தல்லால்
பிழையென்ன செய்துவிட்டேன் நாட்டில்? இந்தப்
பேரவையில் அமர்ந்திருப்போர் சிந்திக் கட்டும்.

3

நாத்திகனும்! நல்லிளைஞர் பிஞ்சு நெஞ்சை
நஞ்சாக்கி விட்டேனும்! அவருள் ளத்தில்
காத்திருந்து கன்னக்கோல் வைக்கின் றேனும்;
கதைக்கின்ருர்! நானென்ன கன்னிப் பெண்ணு?
பாத்தியிலே தலைநீட்டும் களைகள், நல்ல
பயிர்ச்செடியை அழிப்பதற்கு நிற்ப தைப்போல்
காத்திருக்கின் ருர்என்னை அழிப்ப தற்குக்
கட்டாரி நீட்டுகின்ருர் முதுகுப் பக்கம்!

4

வில்லாற்றல் வீரனுக்கு வெற்றி; பெண்டிர்
விழியாற்றல் காதலுக்கு வெற்றி; தேனைச்
சொல்லாக்கித் தருகின்ற புலவ னுக்குச்
சுவையாற்றல் தான்கவிதை வெற்றி; நல்ல
சொல்லாற்றல் பெற்றிருக்கும் எனக்கு முன்ஞல்
சுள்ளியைப்போல் ஒடிந்தார்கள் ஒன்ருய்க் கூடி
மல்லுக்கு நிற்கின்ருர்! சேற்றில் யானை
மடிகிறது! மாய்க்கிறது, நரியின் கூட்டம்!

5

பிறப்புக்குப் பகையான சாவில், என்னைப்
பிடர்பிடித்துத் தள்ளுகிறீர்! மாந்தர் வாழ்வில்
இறப்பென்ருல் வேறென்ன? கனவு கூட
இடையூறு செய்யாத இனிய தூக்கம்!
இறப்புக்கு நானஞ்ச வில்லை! ஆனல்
என்சாவு தற்கொலைதான் உங்க ளுக்கு
சிறப்பான நல்லறிஞன் என்னை விட்டால்
செகத்தினிலே வேருருவன் கிடைக்க மாட்டான்!

6

நூறுமுறை சாவதற்குத் தண்டித் தாலும்,
நும்முள்ளம் எனையின்று மன்னித் தாலும்
வேறுதொழில் நான்செய்யப் போவ தில்லை.
வேங்கையைப்போய் வரிக்கோட்டை மாற்றிக்
[கொள்ளக்

கூறுகின்றீர்! நடைபெறுமா? உயிரின் மேலாம்
கொள்கையினை நான்துறக்க மாட்டேன். பாயும்
ஆறுகளும் திசைமாறும்; ஆனால் இந்த
அறிஞனென்றும் திசைமாறப் போவ தில்லை.

7

நதிவீதி சந்திக்குமுச் சந்தி ஏறி,
நாவீரம் காட்டிப்பல் கூட்டம் கூட்டி
"விதியில்லை; வெவ்வேறு கடவு ளில்லை;
விண்ணியலும் மண்ணியலும் அறிதல் வேண்டும்;
அதிகார அரசியல்தான் அற்பர் வீடு:
ஆணவத்தின் மறுபதிப்பே கொடுங்கோல் ஆட்சி;
புதுப்பாதை காட்டுகிறேன்; அறிவைத் தேடிப்
புறப்படுங்கள்!' என்றுசொல்லத் தயங்கமாட்டேன்.

8

விண்ணைவிட மிகப்பெரிய போர்வை யில்லை,
வெங்கதிரோன் போல்பெரிய விளக்கு மில்லை;
என்னுடைய தொண்டைவிடப் பெரிய தொண்டும்
இந்நாட்டில் இனிநிகழப் போவ தில்லை.
மண்ணுலகில் என்னறிவை முதலாய் வைத்தே
மதிப்புலமை வளர்ந்தாக வேண்டும்; நீல
விண்மீது விடிவெள்ளி எழுந்த பின்தான்
வெயில்வட்டம் இருள்கிழிக்கும்;தலையைநீட்டும்.

9

கொல்லவந்த நல்லவரே! உங்கட் கொன்று
கூறுகிறேன்; வல்லவர்கள் சாகும் போது
சொல்லுகின்ற சொல்லுக்கு வலிமை யுண்டு.
சுழற்காற்று கட்டாயம் மாறி வீசும்.
கல்லெடுத்து வீசுகிறீர்! எதிர்கா லத்தில்
கட்டாயம் உம்மீது மலையே வீழும்!
நில்லென்று நீர்க்குளத்தில் தள்ளுகின்றீர்!
நெருப்பாற்றில் நீர்குளிக்க வேண்டி நேரும்!

# சொற் சிலம்பம்

—( சாலை இளந்திரையன், எம்.ஏ., எம்.லிட். )—

*[இந்தி நுழைப்பினால் தமிழ் அழியாவிட்டாலும் வளராது. வளராமலிருக்கும் மாஞ்செடி பூத்துக் காய்த்துப் பழந் தருவது எப்போது? என்றும் மாஞ் செடியாகவே காட்சி தந்துகொண்டிருந்தால் போதுமா? கட்டான உடல் என்றாலும் அடிக்கடி ஏதாவதொரு விபத்து ஏற்பட்டுக் கொண்டேயிருந்தால்...? இந்தி நுழைப்பைப் பற்றியும் இந்தி எதிர்ப்பைப் பற்றியும் இன்று சொற் சிலம்பம் விளையாண்டு கொண்டிருக்கும் தமிழ் நாட்டு அரசியல் வாதிகளுக்கு நல்ல அறிவுரை யாகும், இக் கட்டுரை.—ஆசிரியர்]*

இன்று மிகுதியாக ஆராயப்படும் பிரச்னைகளிலே ஒன்று, ஆட்சிமொழிச் சிக்கல். இச் சிக்கலில், யார் தலையிலோ மண்ணை அள்ளிப்போடுவதாக நினைத்துக்கொண்டு, தமிழகத்திலே உள்ள இந்தி ஆதரவாளர்கள் தங்கள் தமிழின் தலையிலேயே மண்ணை வாரிக்கொட்டிக் கொள்வது வேதனை தருவதாக உள்ளது. தங்கள் கொள்கையை விவாதித்து நிலைநாட்டி விட்டதாக எண்ணிக்கொண்டு அவர்கள் பேசுவதும் எழுதுவதுமோ வேடிக்கையாக இருக்கிறது.

'இந்தித் திணிப்பால் தமிழுக்கு ஆபத்து இல்லை!' என்ற கொடியை உயர்த்திக் கட்டிக் கொண்டு, அவர்கள் முழங்கும் முழக்கம் என்ன தெரியுமோ?

வடமொழியால் வாடாத தமிழ்,—
உர்துவால் உலையாத தமிழ்,—
தெலுங்கால் சிதையாத தமிழ்,—
ஆங்கிலத்தால் அழியாத தமிழ்,—
இந்தியாலா, இடிந்துவிடப் போகிறது?

இது முதல் முழக்கம். இரண்டாவது முழக்கம் பின்வருமாறு:

எத்தனையோ கடல்கோள்கள்,—
எத்தனையோ தீக்கொளுத்தல்கள்,—
எத்தனையோ சமயப் பூசல்கள்,—
இவைகளால் எல்லாம அழியாத தமிழ்,—
இந்தியினாலா அழிந்துவிடப் போகிறது?

முழக்கம் இத்துடன் தீரவில்லை. மூன்றாவது முழக்கமும் ஒன்று இருக்கிறது:

ஆயிரமாயிரம் ஆண்டுகளாகியும்,—
அழியவில்லை தொல்காப்பியம்,—
அழியவில்லை திருக்குறள்;—
அழியவில்லை ஐம்பெருங்காப்பியங்கள்!—

அவைகளெல்லாம் இந்தச் சுண்டைக்காய் இந்தியால் அழிந்துவிடுமா? இந்தித் திணிப்பால் தமிழ் அழிந்துவிடும் என்று சொல்லுகிறவர்கள் கோழைகள்; தமிழின் வளத்திலே நம்பிக்கையில்லாதவர்

கள். ஏன், தமிழே தெரியாதவர்கள்!

தமிழின் பெருமை கிளத்தும் இந்த முழக்கங்களைக் கேட்கும் கூட்டத் தமிழன்கள் கைவலிக்கும் வரை 'கரகோஷம்' செய்துவிட்டு, மீசை மேல் கைபோட்டுக்கொண்டு கிளம்பி விடுகிறது கள்! இப்படித் தூக்கிவிட்டுத் தூக்கிவிட்டேதான் இதுவரை எல்லாரும் தமிழன் தலையில் மசாலா அரைத்து வந்திருக்கிறார்கள் என்பதை அப்பாவித் தமிழன்கள் உணரவில்லை. புகழுரை கேட்டே கோட்டைவிட்ட பரம்பரையாயிற்றே!

இந்தித் திணிப்பை எதிர்க்கின்ற அரசியல்வாணர்களெல்லாம் உண்மையிலேயே தமிழன் நலன் கருதித்தான் எதிர்க்கிறார்கள் என்று சொல்ல முடியாது. அவரவர் கட்சிக் கோட்டையைப் பலப்படுத்திக் கொள்ளவும், தங்கள் சாதியினருக்குப் பாதுகாப்புத் தேடவுமே முக்கியமாக அவர்கள் இந்தி எதிர்ப்பு நடத்துகிறார்கள் என்பது எல்லோருக்கும் தெரிந்ததே. ஆனால் இந்தி ஆதரவாளர்கள் தமிழன் கையாலேயே தமிழன் கண்ணைக் குத்துவதுதான் வருந்தத்தக்கதாக இருக்கிறது. தங்கள் இந்திக் கட்சியை நிலைநாட்ட, அவர்கள் இந்தியின் பெருமையை (அல்லது பெரும்பான்மையைக்) காட்டலாம்; தாங்கள் தவறாகப் புரிந்துகொண்டுள்ள தேசியத்தைக் காட்டலாம்; இல்லாவிட்டால் கையில் உள்ள சட்டத்தைக் காட்டலாம். அதை எல்லாம் விட்டு, தமிழின் பெருமையையே திரித்துக் கூறித் தமிழுக்கு அவர்கள் தீங்கு தேடுவதுதான் சரியாகப்படவில்லை.

## 7. தமிழைத் தேயவைத்த வகை

தமிழ் வளமான மொழி என்பதும், இத்தனை இடையூறுகள் நேர்ந்தும் அது அடியோடு அழிந்துவிடவில்லை என்பதும் உண்மையே. ஆனால்...!

ஒருவன் சிறந்த வீரன். ஒருவர்பின் ஒருவராக சண்டைக்கு வந்த நான்குபேரை வீழ்த்திவிட்டான்...அதற்காக, ஐந்தாவது, ஆறாவது என்று ஆட்களை அவன் மேல் அனுப்பிக்கொண்டே இருக்கவேண்டுமா? அவன்

---

*(59-ம் பக்கத் தொடர்ச்சி)*

அரசாங்கம் முன்வைத்துள்ள திட்டங்களை அமுல் நடத்துவதில் பங்கு கொள்ளுவதெப்படி? எனவேதான் திட்டங்கள் விரும்பிய அளவு வெற்றிபெற வழியில்லை.

இந்நிலை மாறுமா? மக்களின் நலனே பெரிதெனக் கருதும் அரசியல் தலைவர்கள் ஆட்சிபீடம் ஏறுவார்களா? மக்களின் நல்வாழ்வுக்கான திட்டங்கள் வடிவெடுக்குமா? அவற்றை மனது வைத்துச் செயல்படுத்தும் அதிகார எந்திரம் உருவாகுமா? லஞ்சம் ஒழியுமா? ஊழல் மறையுமா? இவைகள் இல்லாமல் வருவாய் எப்படி வளரும்? ஏற்றத் தாழ்வுகள் எப்படிக் குறையும்? மக்கள் இதற்கு என்ன செய்ய இருக்கிறார்கள்? இத்தனை மாற்றங்களும் ஏற்படும் வகையில் தங்கள் வாக்குகளையும் வலிமையையும் பயன்படுத்துவார்களா? அல்லது ''மந்திரத்தில் முளைக்கும் மாங்காயைப்'' போல சமதர்மம் பழுத்து வாயில் விழும் என்று இறுமாந்திருப்பார்களா? சிந்திக்க வேண்டும்.

சாகவில்லை என்பது உண்மை தான். ஆனால் நாலுபேரோடு தொடர்ந்து சண்டை போட்ட அவன் எவ்வளவு களைத்திருப் பான் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டாமா? எந்தக் 'கில்லாடி' யானாலும், புதிது புதி தாக வந்த நான்கு பேரை ஒரே மூச்சில் எதிர்த்த அவன் எவ்வ ளவு களைப்படைந்திருப்பான்! அவனுக்குச் சிறிது ஓய்வெடுத் துக் கொள்ளவாவது அவகாசம் வேண்டாமா?

தமிழுக்கு வருவோம்: வட மொழியால் தமிழ் அழியவில்லை; ஆனால் தமிழில் வளர்ந்திருக்க வேண்டிய தத்துவங்கள், ஆட்சி யின் செல்வாக்கை வடமொழி பெற்றிருந்ததால் வடமொழியில் வளர்ந்தன; தமிழில் வளர வில்லை. தமிழர்களே வடமொழி யில் எழுதினார்கள். வாழ்த்து மொழியாகவும் இறைவணக்க மொழியாகவும் வடமொழி உயர்வு பெற்றது: 'இறைவர்க்ளெல் லாம் விரும்பிக் கேட்டு உவந்த தமிழ்' கோயிலுக்கு வெளியே நின்றது!

உர்தூ வந்தது; அதனால் தமிழ் அழிந்துவிடவில்லை. ஆனால், அதுவரை இருந்து வந்த தமிழ் ஆட்சிமுறைகளும் அவற்றிக்குரிய தமிழ்ச் சொற்க ளும் மறைந்தன; 'தமிழில் ஆட் சிச் சொற்கள் போதிய அளவு இல்லை' என்ற பழிச் சொல் வளர்ந்துள்ளது!

தெலுங்கு வந்தது; தமிழ் அழியவில்லை. ஆனால் தமிழில் வளர்ந்திருக்க வேண்டிய இசை, தெலுங்காகப் பெருகியது. தமி ழர்களே கர்நாடக இசைப்பாடல் களைத் தெலுங்கில் அமைத்தார் கள். அதன் விளைவாகத் ''தமிழ் ஸங்கீதத்துக்கு ஏற்ற பாஷை அல்ல'' என்று முழங்கிய விந் தைத் தமிழ் மனிதர்கள் தோன்றி னார்கள். தமிழ் நாட்டுக்குள் ளேயே, தமிழ் இசைவாணர்க ளிடமே,'தமிழில் பாடவேண்டும்' என்று கோரிக்கை விட வேண் டிய பரிதாப நிலை ஏற்பட்டது.

ஆங்கிலம் வந்தது; தமிழ் அழிந்துவிட வில்லை. ஆனால், ஆட்சித்துறை முதல் அனைத்துத் துறைகளிலும் செழித்திருக்க வேண்டிய தமிழின் வாய்ப்பை அது பறித்துக்கொண்டது. இன்று, 'ஆட்சித் துறைகளுக்கும் கல்வித் துறைக்கும் தமிழ் போது மானதுதானா?' என்ற வினா எழுந்துள்ளது.

சிறிது அமைதியாகச் சிந்தித் துப் பாருங்கள்: கதையும் கவி தையும் எழுதப் பயன்படுகிறது தமிழ்; அருமையாகக் கருத்துக்க ளைக் கதை-கவிதையாக்குகிறோம் மொழி என்பது இதற்குமட்டுந் தானா? 'வளம் சான்றது தமிழ் மொழி' என்று சொல்லுகிறோம். அந்த வளம் அரசியல், தத்து வம், இசை, இலக்கியம், அறிவி யல் ஆகிய அனைத்துத் துறை களிலும் அல்லவா இருக்கவேண் டும்? வடமொழியும், உர்தூவும், தெலுங்கும், ஆங்கிலமும் தமிழ் நாட்டில் தொடர்ந்து உயர்நிலை எய்தியதால் தமிழ் அழியவில்லை என்று கவலைப்படுவோர் எண் ணிப் பார்க்கவேண்டும்; அவை அனைத்தும் ஒவ்வொரு துறை யைப் பறித்துக்கொண்டதால் தமிழ், ஒரு கதை-கவிதை மொழி யாகக் 'களைத்து இளைத்து விட் டது' உண்மை யல்லவா? இல் லாவிட்டால், இப்போது, தட்டுத் தடங்கல் இன்றி, நீதிமன்றம், பல்கலைக் கழகம் முதல் எல்லாம் தமிழிலே யல்லவா நடைபெற் றுக் கொண்டிருக்கும்? தமிழ் நாட்டில், 'பயிற்றுமொழியாக இருப்பதற்குத் தமிழ்மொழி தகுந்

## பொதுத் தேர்தல்கள்

**முதல் தேர்தல்: 1951-52**

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | 17.3 கோடி | |
| வாக்களித்தவர்கள் | 10.5 ,, | |
| அரசாங்கச் செலவு | 10.4 ,, | ரூ. |

**இரண்டாவது தேர்தல்: 1957**

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | 19.3 கோடி | |
| வாக்களித்தவர்கள் | 12 ,, | |
| அரசாங்கச் செலவு | 5.9 ,, | ரூ. |

**மூன்றாவது தேர்தல்: 1962**

| | | |
|---|---|---|
| வாக்களித்தவர்கள் | 21 ,, | |
| அரசாங்கச் செலவு | 10 ,, | ரூ. |

**வாக்களிப்பு விகிதம்**

| | |
|---|---|
| கேரளம் | 69.16% |
| சென்னை | 66 55% |
| ஆந்திரா | 62.62% |
| பஞ்சாப் | 59.1[illegible]% |
| குஜராத் | 55.37% |
| இராஜஸ்தான் | 50 27% |
| ஒரிசா | 23.32% |

ததுதானா?' என்ற பரீட்சார்த்தங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்துமா உங்களுக்கு இது புரியவில்லை? இந்த மொழிகளின் படை எடுப்புகள் இல்லாதிருந்தால் தமிழ் இன்றுள்ள நிலையில்தான் இருக்குமென்று நினைக்கிறீர்களா?

தொடர்ந்து பல மொழிகளின் தாக்குதலால் தமிழ் அழியவில்லை என்பது உண்மை. அதேபோல், ஒவ்வொரு தாக்குதலும் தமிழின் வளர்ச்சியை வெகுவாகப் பாதித்திருக்கிறது என்ற உண்மையையும் நாம் உணரவேண்டும். அழியாமல் இருப்பதுமட்டும் ஒரு மொழிக்குப் பெருமையாகி விடாது; எல்லாத் துறைகளிலும் வளர்ந்து செழிப்பதுதான் மொழிக்குப் பெருமை.

இதை மறந்துவிட்டுத், 'தமிழை அழிக்க முடியாது,' என்று ஆட்சிச் செல்வாக்குள்ளவர்கள் முழங்குவதைப் பார்த்தால், கடந்த காலத்தின் பல தாக்குதலைப் போன்ற ஒரு இந்தி மொழித் தாக்குதலுக்கும் தமிழ் மொழி தயாராக இருக்க வேண்டும் என்றே எண்ணத் தோன்றுகிறது. தமிழின் போராட்ட வரலாற்றுக்கு என்றைக்குத்தான் ஒரு முடிவு ஏற்படுமோ தெரியவில்லை.

---

*"காரணங்களின் உட்பொருள் நமக்கு விளங்காவிட்டால் நாம் எதையும் விதி-விதி என்று கதறுகிறோம்."*

—R. W. எமர்சன்

∴ ∴ ∴

*"பணக்காரர்களையும் ஏழைகளையும், ஒருவரிடமிருந்து மற்றவரைக் காப்பாற்றுவதாகக் கூறி, பணக்காரர்களிடமிருந்து பணத்தையும், ஏழைகளிடமிருந்து வோட் (வாக்கு) களையும் பெறுகின்ற நளினமான கலைதான் அரசியல் என்பது,"*

—ஸ்டாஃபோர்டு கிரிப்ஸ்

## இலக்கியப் பகுதி :

# குறை இசை தந்த நிறை மாண்பு

மு. குழந்தைவேலு, பி. ஏ.

*[அறிவுக் கண் கொண்டு, ஆராய்ச்சிக்கண் கொண்டு, நுனிப்புல் மேயாமல், ஆழமாக இலக்கியத்தைப் படித்துணர் பவர் மிகச் சிலரே! இலக்கியத்தில் காண்பது முழுதுமே உண்மை யல்ல; முக்காலத்துக்கும் பொருத்தமானதுமல்ல. ஆனாலும் கடலில் மூழ்கி முத்தெடுப்பதுபோல், இக்கட்டுரை யாளர் இளங்கோ அடிகளின் படைப்பிலுள்ள முத்து ஒன்றைக் காட்டுகிறார்—ஆசிரியர்.]*

தோல்வியோ, நிறைபெறாத குறைவோ, இடையூறோ ஏற்படும்போது 'எல்லாம் நன்மைக்கே' எனக்கூறி ஆறுதலும், தேறுதலும், அறிவுரையும், தெளிவுரையும் கூறும் தனிச் சிறப்பு நம் தமிழருக்கே உரிய சிறப்புப் பண்பு எனக் கூறலாம். இப் பண்பு, குறை ஏற்படும்போது தளரா மனம் ஊட்டும் தன்மை ஏற்படுத்துவதோ டல்லாமல், தவறும் ஒரு நன்மை ஏற்படுவதற்கு அடிப்படையாக அமைந்த அடையாளம் என்றும் நிரூபித்துக்காட்டும். யாரோ ஒரு ஆங்கில எழுத்தாளர், 'மறதியும் மாண்பே' என்று விளக்கிக் காட்டியுள்ளார். மறதி மனித மனத்திற்கு இன்ப மூட்டுகிறது. மறதி இல்லாவிட்டால் மனிதன் ஷெல்லியையும், ஷேக்ஸ்பியரையும் அடிக்கடிப் படிக்கமாட்டான். மறதி இருப்பதால்தான் அடிக்கடி அதைப் படித்து அதில் உள்ள சுவையைச் சுவைத்து மனமகிழ்ச்சியும் அதனால் அமைதியும் கொள்கிறான் என்பது அவ் வாசிரியர் கருத்து.

இராமாயணத்தைப் போல், சிலம்பைப் பொறுத்த வரையில் 'குறையும் நன்மைக்கே' எனும் ஆன்றோர் வாக்கு மிகவும் பொருத்தமானதே. காட்டில் இருந்த சீதை தன்னைக் காத்துக் கொள்ளவில்லை. தன்னைக் கொண்டவன் நலம்பேணுபவளாகவும் தெரியவில்லை. மாயமானின் எழில் மயங்கி இருக்கும் கொடிய சூழ்நிலையையும் மறந்து, அவ்வழகுப் பொருளை அடைய வேண்டுமென சீதை விரும்பினாள். அது ஒரு பெருங் குறை எனலாம். கலை உள்ளம் என்று கூறி சிலர் தேற்றினாலும், அதுவும் ஒரு பெரும் குறையுள்ளம் என்றுதான் ஆராய்ச்சி முடிவு கட்டும். மனைவியை மகிழ்ச்சியூட்டக் கருதி அல்லற்படும் சாதாரண ஆடவர் நிலையில் தான் இராமனும் இருந்தான். இராமன் சீதையைப் பிரிந்து செல்லாதிருந்தால் பிற்றை நிகழ்ச்சிகள் இம்முறையில் நடந்திராது அழகுக்கு அடிமைப் பட்ட சீதையின் குறை உள்ளத் தால் எவ்வளவோ இடையூறு

களை இராமனும், இராவணனும் அடைந்தனர்.

சிலப்பதிகாரத்தில் மாதவியின் குறைபட்ட இசைப் பயிற்சியோ அல்லது கோவலனின் நிறைவு பெருத இசைக் குறைவோ தான் கண்ணகியின் சிலைக்கல் உருவில் கனக-விசயரின் கழுத்தை நெரித்தது. எழில் கொழிக்கும் பூம்புகார் கடல் மணப் பரப்பில் அமைத்த கூடாரத்தில் மாதவியுடன் கோவலன் யாழ்மீட்டி கானல்வரிப் பாட்டுகள் பாடுகிருன். மாதவி, கோவலன் யாழில் வேறு ஒரு பெண்மேல் மனம் வைத்துப் பாடுவதாகக் கருதி கோவலனிட மிருந்து யாழை வாங்கித் தானும் வேருெருவன் மேல் இச்சை வைத்ததாகக் குறிப்புணர்த்திப் பாடுகிருள். யாழிசை மேல் வைத்து ஊழ்வினை உருத்திற்று.

"கானல் வரியான் பாடத்தான்
ஒன்றின்மேல் மனம் வைத்து
மாயப் பொய் பலகூட்டும்
மாயத்தாள் பாடினுள்"

என்று மாதவிமேல் கோவலன் கோபமும், வெறுப்பும் கொள்கிருன். "நான் கானல்வரி பாடினேன். அவள் குலக் குணத்தைக் காட்டிவிட்டாள்," என்று இகழ்ந்து பேசுகிருன். கோவலன் யாழில் பாடியது மாதவிக்குக் கானல் வரியாகப்படவில்லை. வேருெருத்தி மேல் கொண்ட காமக் குறிப்புணர்த்தும் வரிகளாகவே தெரிந்தது. இங்கு கோவலன் இசையில் குறை இருக்கவேண்டும். அல்லது மாதவிக்குத் திறம்படப் பகுத்துணரும் ஆற்றல் முதிர்ச்சி பெருததாக இருக்கவேண்டும். இந்த இரண்டில் ஒன்று தவிர, வேறு ஒன்றிருக்க நியதியில்லை.

## இசை மயக்கம்

சில இசைக் கலைஞர்கள் 'சகாளு' பாடும்போது 'கானடா' ராகம் போல் பாடுவது இன்றைக்கும் நிகழும் நிகழ்ச்சி. தந்யாசி பாடும்போது தந்யாசி பிடிப்பா அல்லது தோடி பிடிப்பா என்று ஐயுறுமாறு அமைவது காண்கிறேம் இதுபோல் சில சமயம் மயக்கம் ஏற்படுவதுண்டு. இது நிறை பெருத இசைப் பயிற்சியிலிருந்து எழுவது.

அடிகள் இந்நூலின் ஆரம்பத்திலேயே மாதவி தனது பன்னிரண்டாம் ஆண்டிலேயே அழகிலும், ஆடற்கலையிலும், இசையிலும் சிறந்து விளங்கினுள் எனக் கூறுகின்ருர்.

"எண்ணும், எழுத்தும் இயல்
ஐந்தும் பண் நான்கும்
பண் நின்ற கூத்துப் பதி
ஞென்றும்—மண்ணின்மேல்
போக்கினுள்; பூம்புகார்ப்
பொன்தொடி மாதவிதன்
வாக்கினுல் ஆடு அரங்கின்
வந்து"

எனும் உரையால் மாதவி புவி முழுவதும் உள்ளோர் எல்லாம் புகழ்ந்து பேசும்படி ஆடியும், பாடியும் காட்டி உலகம் போற்றும் சிறப்புப் பெற்ருள் எனக் கூறுகிருர். கோவலனை எழில் கண்ட போது மயங்கும் நிலையற்ற, கலை உள்ளம் கொண்டவளுகவே நமக்குக் காட்டுகிருர்.

பூம்புகார் கடற்கரையில் கோவலன் இருந்த நிலையும், ஆடவரும் பெண்டிரும் வந்த தன்மையும் சிலம்பு கூறுவது நோக்கும் போது, அழகிய காட்சி கண்டு கோவலன் மனம், தான் செய்யும் தொழில்–யாழ் வாசிப்பது-மறந்து புறத் தோற்றத்தில் மயங்கி இருந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. இன்றும் சில கலைஞர்கள் தங்கள் தொழில் மறந்து

புறத்தழகில் ஈடுபட்டுத் தன் நிலை மறந்து இசைக் குறைவு ஏற்படுத்துவதைக் காண்கிறோம். இசையில் தவறியது கோவலன் தான் என்று முழுதும் அறுதியிட்டுக் கூறமுடியா விட்டாலும், பெரும் பொறுப்பு, அடிகள் அவனை உருவாக்கி இருக்கும் நிலையை ஆய்ந்தால், கோவலனையே சேரும் எனலாம்.

இசையின் இக்குறையும் ஒரு பெரும் புகழுக்கே அடிப்படையாக நிகழ்ந்தது என்று கூறலாம். யாழின் மேல் வைத்து "ஊழ்வினை" விளையாடியது. கோவலனும், மாதவியும் பிரிந்தனர். மாதவி யாழ்வாங்கி அவளும் மற்றொருவன் மேல் காமம் கொண்டதாகக் குறிப்புணர்த்தா விட்டால், கோவலன் "விடுதல் அறியா விருப்பு"டன் அவளைக் கூடி முயங்கியே நாளனைத்தையும் கழித்திருப்பான். மாதவியையும், கோவலனையும் பிரித்து, மாதவியை வாடச் செய்த கானல்வரிதான் மாதவி பொருட் பெண்டிர் வழி வந்தவளாயினும், கற்பில் சிறந்த தலைமகள் என்பதை உலகறிய உணர்த்தி அவளுக்கு இணையற்ற சிறப்பு ஈன்றது.

மாதவியையும், கோவலனையும் பிரித்த அக்குறை இசைதான் கற்புக்கடம் பூண்ட திருமா பத்தினி கண்ணகியின் துயர் நீக்கப் பாலமாக அமைந்தது. காட்டில் காய்ந்த நிலவாக மக்கி மறையும் அவள் வாழ்வு, கலைஞர்கள் கையில் அகப்பட்ட உயர்காவியமாகத் திகழ வழி கோலியது. கோவலனின் குறை இசை கண்ணகியின் நிறைவு மாண்பை வெளிக்காட்ட அமைந்த ஓர் சிறந்த வாய்ப்பாக விளங்கியது. யாழ் வடிவில் உருவான ஊழ் புகுத்தி, அடிகள், "உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர்," என்ற உயர் நெறியை மக்கள் மனதில் புகுத்தினர்.

### தீமையிலும் நன்மை

சேற்றிலும் செந்தாமரை மலரும்; நாற்றமெடுக்கும் சிப்பி வயிற்றிலும் ஒளிக்கும் முத்து விளையும்; பொருளை விரும்பி, அருள் கொடுத்துச் சமுதாயத்தை மறைமுகமாக சாக்கடையாக்கி அழித்தொழிக்கும் பொருட் பெண்டிருள்ளும், ஒருவனுக்கே உள்ளத்தைத் தந்து, உலகில் கற்பியல் வாழ்வு நடத்த முடியும், என்பதை நாம் உணர வாய்ப்பு அளித்தது குறை இசையே ஆகும்.

காம உணர்ச்சியால் அறிவிழந்து அரசியல் நெறி தவறியவரும், தன் குற்றம் உணரும் போது ஈடுசெய முடியாத இழப்பாகிய—குலப் பெருமையைத் தன் உயிர் கொடுத்தாவது மீட்க நினைப்பர் தமிழர்சர் என்பதை நெடுஞ்செழியன் செயலிலும்; விசாரிக்காமல் தண்டனை கொடுத்துஒருபெண்ணை விதவையாக்கிய மன்னன், தனது பிழையை உணர்ந்து மாண்டான் என்றாலும், முறை செயாது கோல் கோடிய மன்னன் மனைவி என்று உலகு பழிதூற்றுமே என்றஞ்சி மானத்துக்காகக் குலைந்து நடுங்கிஉயிர்விட்ட தமிழ்ப்பெண் கோப்பெருந் தேவியையும், குறைந்தஇசை தந்த நிறைந்த செயலால்தான் நாம் காண முடிந்தது. "அரசியல் பிழைத்தார்க்கு அறம் கூற்றமாகும்" என்ற கருத்தை இளங்கோ அடிகள், நெடுஞ்செழியன் மூலம் நமக்குக் காட்டினர். தென்னவர் கோன் நெடுஞ்செழியன் நேர்மை தவறினல் வாழலாகாது என்ற உயர் நெறியைத் தன் சாவின் மூலம் மரண அறிக்கையாக நமக்கு விட்டுச் சென்றான்.

K. S. மகாதேவன் B. SC., M. A.

குழந்தைக்குப் புத்தகம் :

# 3. படிப்பும் பருவமும்

*[இக்கட்டுரையாளர் குழந்தைப் புத்தகத்துறையில் ஆழ்ந்து ஆராய்ச்சி செய்துகொண்டிருப்பவர். விஞ்ஞானத்துடன், தமிழிலும் தனிப்பட்டம் பெற்றிருப்பவர். எனவே, உண்மையான தமிழ் வளர்ச்சிக்கான அந்த வேலையில் ஈடுபட்டிருப்பவர். பகுத்தறிவு - விஞ்ஞானம் - பொது அறிவுத் துறைகளில் ஏராளமான கட்டுரைகளை எழுதியிருப்பவர்; எழுதிக்கொண்டே யிருப்பவர். பழைய இலக்கியக் குட்டைக் குள்ளேயே மிதந்துகொண்டிருப்பவரல்லர்; பல்துறைப் பரந்த கடலில் நீந்திக்கொண்டிருப்பவர். குழந்தைக்கான புத்தகம் பற்றிய மூன்ருவது கட்டுரை இது. ஆட்சியாளரும் நூல் வெளியிடுவோரும் ஊன்றிப் படிப்பார்களாக!]*

—ஆசிரியர்.

வயது வந்த பெரியவர்களில் எந்த வயதினர்,எத்தகைய புத்தகங்களைப் படிக்க விரும்புகின்றனர் என்று எவரும் திட்டமாகச் சொல்லிவிட முடியாது. ஆனுல், வளர்ந்து வரும் குழந்தைகளைப் பொறுத்த வரையில் எந்தெந்த வயது நிலையில் எந்தெந்த வகைப் புத்தகங்களை அவர்கள் மிகுதியாக விரும்புகின்றனர் என்று ஓரளவு நம்மால் வரையறுத்துக் கூற முடியும். குழந்தை என்ற சொல் 'பால் குடிக்கும் பச்சைப் பிள்ளை'யிலிருந்து "நீர் நணிப்படி கோடேறி, நெடு நீர்க் குட்டத்துத் துடும், எனப் பாயும்" பதினைந்து வயதுக் 'குழந்தை' வரை பொதுவாகக் குறிக்கும்!

## மூன்று பருவங்கள்

"குழந்தைப் பருவத்தை அவற்றின் மன வளர்ச்சிக்கு ஏற்ப மூன்று பகுதிகளாகப் பகுத்துக் கொள்வது பொருத்தமாகும். பிறப்புத் தொடங்கி ஐந்து வயது வரை உள்ள காலத்தைக் குழவிப் பருவம் என்றும், ஐந்திலிருந்து பன்னிரண்டு வயது வரை உள்ள காலத்தைப் பிள்ளைப் பருவம் என்றும், பன்னிரண்டிலிருந்து பதினைந்து வயது வரை உள்ள காலத்தை முன்னிளமைப் பருவம் என்றும் அழைக்கலாம். இம் மூன்று பருவத்திலும் உள்ள குழந்தைகள் தத்தம் உள்ள வளர்ச்சிக்கேற்ப வெவ்வேறு வகைப் புத்தகங்களில் ஆர்வம் காட்டுவதை ஆராய்ச்சியாளர் கண்டிருக்கின்றனர். பழங்காலப் புலவர்கள் குழந்தைகளை அவர்கள் வளர்ச்சி நிலைக் கேற்பப் பல பருவங்களாகப் பகுத்துக் கொண்டு பிள்ளைத் தமிழ் இலக்கியங்களைப் படைத்திருப்பதையும் இங்கு நினைவில் கொள்ளலாம். குழந்தைகளின் இத்

சிலம்பில் பொற்கலசத்திற்குப் பொட்டிட்டதுபோல் அமைந்த நிகழ்ச்சி, தமிழருடைய விவரம் பற்றி உரைப்பதாகும். காவா நாவிற் கனகனும், விசயனும் கல் சுமக்க வைக்கச் சேரன் வஞ்சினம் கூறியது, வடவர் தமிழரை இகழ்ந்ததன்காரணத்தால்தான். இகழ்ச்சிக்கு ஈடுகட்டும் நேரம் கண்ணகிக்குச் சிலை அமைக்கும் நேரமாக இருந்தது.

கண்ணகியின் இன்ப வாழ்வு சிதைந்தபோது, "கள்வனே என் கணவன்" என்று காய் கதிர்ச் செல்வனைக் கேட்டுக் கண்ணீர் விடும்போது,

"கீழ்த் திசைவாயில் கணவ
னோடு புகுந்தேன்
மேற்றிசை வாயில் வழியேன்
பெயர்கு"

எனப் புலம்பிக் கண்ணீர் விடும் போது, நெஞ்சுருகி நாம் கண்ணீர் விடுகிறோம். அந்த இருளையும், ஏக்கத்தையும் நாம் போக்கிக் கொண்டு ஆறுதல் அடைய கண்ணகி நமக்கு விட்டுச் சென்றது, சமுதாய அரசியல் குறிப்புகளாகும்.

இசையால் பிரிந்து கோவலன் வீடுவந்தபோது கண்ணகி வாழ்வு தளிர்விட்டது என்று உவகை கொண்டோம். மதுரைக்குப் பொருள் தேடச் சென்றபோது கோவலன் கடமை உணர்ச்சி—அக்காலத் தமிழரின் முறை—என்பது உணர்ந்து பாராட்டினோம். கவுந்தி அடிகள் துணைக்குச் சென்றபோது மதம் மக்களுக்கு அன்று செய்த நன்மை என்ன, மதத் தலைவர் நெறி என்ன, என்பது பற்றி அறியும் வாய்ப்புப் பெற்றோம்; தமிழர் அறம் அல்லாதவை செய்தால் நாணும் உயர் நெறியும்; மங்கையர் கற்பும்; மன்னர் கடமை தவறா முறையும்; மொழி காக்க நாடுகாக்க, நாட்டவர் மானம் காக்கத் தன் உயிர் காக்காத செங்குட்டுவர் செய்கையும்; இச்சகம் பேசாத மாண்புடைய நாக்கமைந்த புலவர் வாழ்வு முறையும்—இன்ன பிற ஏற்றமான கருத்துக்களையும் சிலம்பில் இளங்கோ கூறினார். இந்நிறைமாண்பனைத்தையும், நாம் உணர வாய்ப்பளித்தது காவிரியின் தண் பரப்பில் இருந்து கோவலன் யாழ் மூலம் எழுந்த குறை இசையேயாகும் என்பதை நினைத்து, அக்காலத் தமிழர் சமுதாயமும், வாழ்வு நெறியும்; உயர்ந்த உள்ளப் போக்கும் அரசியல் வழிகளும் அறிய வழி வகுத்த அக்குறை இசையை இளங்கோ,

"திங்களைப் போற்றுதும்;
திங்களைப் போற்றுதும்...
ஞாயிறு போற்றுதும்;
ஞாயிறு போற்றுதும்..."

என்றாற் போல்,

"கானல்வரி போற்றுதும்;
கானல்வரி போற்றுதும்...
குறை இசை போற்றுதும்;
குறை இசை போற்றுதும்,

என்று போற்றிப் புகழ்ந்து, 'குறையும் நிறைவிற்கே' என்று நினைத்து மகிழ்ந்து "எல்லாம் நன்மைக்கே" என ஆறுதல் கூறும் தமிழறிஞர் நெறியைப் பின்பற்றுவோமாக.

தகைய பல்வேறு, பருவ நிலைகட்கேற்ப அவர்கள் படிக்க விரும்பும் புத்தக வகைகளும் மாறுபடுவதை ஆராய்ச்சியாளர்கள் கண்டிருக்கின்றனர்.

## குழவிப் பருவத்தில்

குழவிப் பருவமே குழந்தைகள் மொழியை விரைந்து கற்று முன்னேறும் பருவமாகும் இப்பருவத்திலுள்ள குழந்தைகள் சொற்களை ஒலித்துப் பார்ப்பதை ஒரு விளையாட்டாகக் கருதிப் பயில்கின்றனர். மூன்று வயதினை எட்டியதுமே, எதுகை மோனை இயைபுகளோடு கூடிய பாடல்களைத் துள்ளலோசையில் பாடி மகிழ்வதில் குழந்தைகள் பேரார்வமுடையவர்களாக இருக்கின்றனர். தம்மைச் சூழ்ந்துள்ள இயற்கைப் பொருள்களைக் காண்பதிலும், அவை பற்றி அறிந்து கொள்வதிலும் மிகுந்த ஆவலைக் காட்டுகின்றனர். இயற்கையில் காணும் ஒவ்வொரு நிகழ்ச்சியும் ஒரு பாடலை அவர்களுக்கு அடியெடுத்துக் கொடுத்து விடும்! வானத்தில் முளைத்தெழும் வெண் திங்கள்,

நிலா நிலா ஓடிவா
நில்லாமல் ஓடி வா!
மலை மேலே ஏறி வா!
மல்லிகைப் பூ கொண்டு வா!
நடு வீட்டில் வை;
நல்ல துதி செய்!

என்ற பாடலை, வரவழைக்கும். அவ்வாறே வானத்தில் வெண் பூ மாலை போல் வரிசையாகப் பறந்து செல்லும் மடையான் கூட்டம்,

மடையான் மடையான்
பூப்போடு!
மடைக்கு இரண்டு பூப்போடு!
அறிவாள் முனையைத் திருப்பி
வைத்தேன்
அதற்கு இரண்டு பூப்போடு!

என்ற பாடல் இசைப்பதற்கு வழி வகுக்கும். இப்பருவத்தில் குழந்தைகள் சொன்ன சொற்றொடர்களையே திரும்பத் திரும்பச் சொல்வதில் தனிப்பட்ட இன்பத்தைக் காணுகின்றனர். குழந்தைகள் ஒருங்கே கூடி விட்டால்,

பூ! பூ! புளியம் பூ!
பொன்னுங் கண்ணிக்குத்
தாழம்பூ!
காய்! காய்! கருப்பங்காய்!
கஞ்சி வடித்த
நெல்லிக் காய்!

போன்ற அடுக்குத் தொடர்கள் மீண்டும் எழுந்தொலிக்கும்! ஐந்து வயதுக் குட்பட்ட குழவிப் பருவத்தில் குழந்தைகள் எழுத்துக் கூட்டிப் படிக்கும் கலையில் தேர்ச்சி பெற்றிருப்பார்கள் என்று, நாம் எதிர்பார்க்க முடியாது. மேலும், எந்த ஒரு செய்தியிலும் குழவிப் பருவத்தினர் நெடு நேரம் தம் கவனத்தைச் செலுத்துவதுமில்லை; எனவே, ஒரே சமயத்தில் படித்து முடித்து விடக் கூடிய சிறிய கதைகளை ஆசிரியர்களோ, பெற்றோர்களோ படித்துக் காட்டினுல் கண்களை அகலத் திறந்து கொண்டு அவர்கள் கேட்பார்கள். குழவிப் பருவத்தில் இருக்கும் குழந்தை தனக்காகவே எல்லாம் இருந்து வருகின்றன என்ற எண்ணம் மேலோங்கப் பெற்றிருக்கின்றது. அதனால் தான் கேட்கும் கதைகளில் வரும் மாந்தர்களோடு தன் பெயரை இணைத்துக் கொள்கிறது! அவர்கள் செய்த அருஞ்செயல்களையெல்லாம் தான் செய்ததாகக் கருதிக் கொள்கின்றது! தன்னைச் சுற்றிலும் உள்ள பொருள்களில் குழந்தைக்கு வர வர ஆர்வம் உண்டாகிறது. தான் நாள் தோறும் கண்டும் கேட்டும் வரும் செய்திகள் பற்றிச் சொல்லப்படும் கதைகளில் பெரு விருப்பம் கொள்கின்றது. கற்பனை

பெருக்கெடுத்து ஓடும் இப்பருவத்தில் குழந்தைகள் மண்க்கோட்டை கட்டியும், பிறர்போல் நடித்தும், பாவனை விளையாட்டுக்களில் ஈடுபட்டும் காலத்தைக் கழிக்கின்றனர். உயிரில்லாத பொருள்கள், உயிருள்ள விலங்குகள், பறவைகள் ஆகியவைகள் பேசுவதாகவும் எண்ணுவதாகவும் எழுதப்பட்ட கதைகள் இப்பருவத்துக்குக் குழந்தைகளைப் பெரிதும் மகிழ்விக்கின்றன. குழவிப் பருவம் பெற்ரோரின் அரவணைப்பில் அன்பையும், பாதுகாப்பையும் எதிர் நோக்கி வாழும் பருவமாகும். பெற்ரோரின் அறிவுரையைக் கேளாமல் போகாத இடங்களில் போய், செய்யாத செயல்களைச் செய்து, துன்புற்று இறுதியில் வீடு திரும்பி பெற்ரோரின் அன்பையும் பாதுகாப்பையும் மீண்டும் பெறும் கோழிக் குஞ்சு, நாய்க் குட்டி முயல் குட்டி, போன்றவற்றின் கதைகளை இப்பருவத்துக் குழந்தைகள் விரும்பிச் சுவைக்கின்றனர். இறுதியாக ஐந்து வயதை எட்டி விட்ட குழந்தை பெரியவர்களின் உதவியில்லாமல் தானே தன் வேலைகளைப்பார்த்துக் கொள்ளத் துடிதுடிக்கின்றது. எதிர்பாராத அச்சந்தரும் சூழ்நிலைகளில் தங்களைத் தாங்களே சமாளித்துக் கொள்ளும் சிறுவர்கள் பற்றிய கதைகளில் அதிக ஆர்வம் காட்டுகிறது பின்னர் குழந்தை பிள்ளைப் பருவத்தை அடைகிறது.

## பிள்ளைப் பருவத்தில்

ஆறுவயதினை எட்டிய குழந்தைக்கு ஒரே சமயத்தில் பல பொருள்களின் மீதும் கவனத்தை வீசும் திறன் மிகுந்து விடுகிறது. சிறுகதைகளை நன்கு சுவைக்கின்றது. ஒவ்வொரு அத்தியாயமும் அதனளவில் முழுமையுடையதாக அமைந்திருந்தால் நீண்ட கதையையுங் கூட அதனுல் சுவைத்து மகிழ முடிகிறது! தனது செயல்களைப் பெரியவர்கள் பாராட்ட வேண்டுமென்று விரும்புகிறது. இப்பருவத்தில் ஆசிரியர்கள் புத்தகத்திற்குச் சிறப்பிடம் கொடுப்பதோடு, படிப்பதை மகிழ்ச்சி நிறைந்த ஒன்ருகவும் அமையும்படி பார்த்துக்கொள்ள வேண்டும். பெரியவர்களின் தலையீடு இன்றித் தானே புத்தகங்களைத் தேர்ந்தெடுப்பதில் குழந்தை முனைந்து நிற்கின்றது. இருந்தாலும் பெரியவர்களின் அரவணைப்பைப் புறக்கணித்து விடுவதில்லை. குடும்ப உறவை வளர்க்கும் வகையில் அன்னை, தந்தை, அக்கா, தங்கை ஆகியவர்களைக் கதைமாந்தராகக் கொண்டு எழுதப்பட்ட புத்தகங்கள் இப்பருவத்தினரால் பெரிதும் விரும்பப்படுகின்றன. குழவிப் பருவத்தில் முளைத்த இயற்கைப்பொருள் பற்றிய ஆர்வம் இப்பொழுதும் தொடர்ந்து நீடிக்கின்றது. நல்ல படங்களுடன் பல்வேறு செய்திகள் பற்றியும் கவர்ச்சியாக எழுதப்பட்ட புத்தகங்களைப் படிப்பதில் குழந்தை பெருமை கொள்கின்றது. நீதியிலும் நேர்மையிலும் உறுதியான நம்பிக்கை பிறக்கிறது. அதன் விளைவாக நல்லது வாழ வேண்டும்; அல்லது அழிய வேண்டும், என்ற கொள்கை பிள்ளைப்பருவத்தில் முகிழ்க்கத் தொடங்குகிறது. குழந்தைக்காக எழுதப்படும் புத்தகங்கள் இக்கருத்தினையே மையமாகக் கொண்டு அமைய வேண்டும். நல்லவர்கள் வீழ்ச்சியடையும் அவலக் கதைகளைக் குழந்தைகளால் சுவைக்க முடிவதில்லை. நகைச்சுவையுணர்வும் இப் பிள்ளைப் பருவத்திலேதான் தலை

காட்டத் தொடங்குகிறது. நகைச் சுவையுடன் கூடிய இலக்கியங்களைப் படித்துக்காட்டிக் குழந்தைகளைப் பெருஞ்சிரிப்பில் ஆழ்த்துவது மிகவும் எளிது. பிள்ளைப் பருவத்திலேதான் முதன்முதல் பல் விழுந்து முளைக்கின்றது. இத்தகைய நிகழ்ச்சிகளைப் பயன்படுத்திக் கொண்டு உடலில் ஏற்படும் வளர்ச்சி மாற்றங்கள் பற்றிய செய்திகளைத் தருகின்ற புத்தகங்களைக் குழந்தைகட்கு அறிமுகம் செய்து வைக்கலாம். எல்லாவற்றினும் மேலாக, எடுத்த ஏட்டினைத் தங்கு தடையின்றிப் படிக்கும் கலையில் தேர்ச்சி பெறும் பருவமாக இப் பிள்ளைப்பருவம் இருக்கின்றது. குழவிப்பருவம் போலின்றி இப் பருவத்தில் ஒரு செய்தியில் நீண்டநேரம் கவனத்தைக் குழந்தையால் செலுத்த முடிகின்றது. எவரும் படித்துக் காட்டவோ, விளக்கந்தரவோ வேண்டாத நிலையில் தானாகவே புத்தகங்களைப் படித்துணரும் நிலையையும் அது எய்துகிறது. படிப்பது, மகிழ்ச்சி தருகின்ற பொழுது போக்காக இருப்பதைக்குழந்தை உணர்கின்றது.

இப்பருவத்தில் படிப்பைப் பொறுத்த வரையில் பால் வேறுபாடு ஓரளவு செயல்படுகிறது; பையன்களது படிப்பார்வத்திற்கும் அதே வயது நிலையிலுள்ள பெண்களது படிப்பார்வத்திற்கும் தெளிவாக வேறுபாடு காணப் படுகிறது. பொதுவாகக் குழந்தைகளின் ஆர்வம் பல்வேறு துறைகளிலும் பரவலாகச் செல்கின்றது. எனவே, பல்வேறு செய்திகள்பற்றியும் எழுதப்பட்ட புத்தகங்கள் இப்பருவத்திற்கு இன்றியமையாது வேண்டப்படுகின்றன. அஞ்சல் பில்லைகள், நாணயங்கள், போன்றவற்றைத் திரட்டிச் சேர்க்கும் ஆர்வம் மிகுவதால் இவைபற்றி விளக்கும் புத்தகங்கள் பெரிதும் குழந்தைகளால் வரவேற்கப்படுகின்றன. அவ்வாறே போட்டி விளையாடல்களிலும் ஆர்வம் மிக மிக, விளையாட்டுக்கள்பற்றிய செய்தி நுட்பங்களைத்தருகின்றபுத்தகங்களுக்கும் நல்ல வரவேற்பு இருக்கின்றது. ‘எல்லாம் தனக்கே’ என்ற குழவிப் பருவத்தில் ஓங்கி நின்ற உணர்வு இப்பொழுது தாழ்ந்து, மற்றவர்கள் பற்றியும் அறிந்து கொள்வதில் குழந்தைக்கு ஆர்வம் உண்டாகிறது. அதனால், கடந்தகாலத்தில் பல்வேறு நாடுகளிலும் வாழ்ந்திருந்த பெருமக்கள் பற்றிய வாழ்க்கை வரலாற்றினைக் குழந்தைகள் படிப்பதில் ஆர்வம் கொள்கின்றன. அதே சமயத்தில் வாழ்க்கையில் காண முடியாத சில நிகழ்ச்சிகளைக் கற்பனையில் காண்பதிலும் பிள்ளைப் பருவக்குழந்தைகள் தொடர்ந்து இன்பம் காண்கின்றனர் ஏழைச் சிறுவர்கட்கு அருள்புரிந்துதவும் கடவுட் கதைகளைப் பத்து வயதினை எட்டுகின்ற வரையில் குழந்தைகள் சுவைத்து மகிழ்கின்றனர். அதன்பின்னர் கற்பனையில் மிதப்பதை விடுத்து உண்மையுலகச் செய்திகள்பற்றி அறிந்துகொள்ள முன்வருகின்றனர். இவ்வகையில் சிறுவர்கள் அதே வயது நிலையிலுள்ள சிறுமியரை முந்திக் கொள்வதையும் காண்கின்றோம். சிறுவர்கள் தம்மை ஒத்த பையன்களின் பள்ளி வாழ்க்கை, பாசறை வாழ்க்கை, ஆகியவை பற்றிய கதைகளில் ஈடுபாடுகொள்ளும் நேரத்தில், சிறுமியர் மட்டும் தொடர்ந்து கடவுட்கதைகளிலேயே இன்பம் கண்டுகொண்டிருப்பதையும் நாம் காண்கின்றோம்! பிள்ளைப் பருவம்தான் இலக்கியங்களில் ஆர்வம் கொள்ளும் பொன்னான காலம். சிறந்த

இலக்கியங்கள் பற்றியும், இலக்கிய ஆசிரியர் பற்றியும் குழந்தைகட்கு அறிமுகம் செய்து வைப்பதற்கு இப்பருவமே மிகவும் ஏற்றதாகும். ''பொய்யகல நாளும் புகழ்விளைத்தல்'' பற்றிக் கூறும் வீரக் கதைகள் குழந்தைகளின் நாடி நரம்புகளுக்கு முறுக்கேற்றுகின்றன. சுடப்பட்டு உயிருய்ந்து அரசு கட்டிலேறிய சோழன் கரிகாலனின் கதை, ஆரியப் படை கடந்த பாண்டியன் நெடுஞ்செழியனின் கதை, உரிமைப் போருக்கு வித்திட்டு முதல் முழக்கம் செய்த வீரபாண்டியன் கட்டபொம்மன் கதை, வீர சிதம்பரனாரின் கதை, போன்ற நம் நாட்டுக்கதைகளும், வில்லியம் தெல் 'இராபின் ஊடு' போன்ற அயல் நாட்டுக் கதைகளும் பிள்ளைப் பருவக் குழந்தைகட்குப் பெரிதும் சுவை தருவதாக இருக்கின்றன. மேலும், கற்பனையாக எழுதப்பட்ட வீரச்செயல் பற்றிய கதைகளும் இப்பருவக் குழந்தைகளை மிகுதியாகக் கவர்கின்றன. அயல் நாடுகள் பற்றிக் குழந்தைகள் கொள்ளும் ஆர்வத்தைப் பயன்படுத்திக் கொண்டு நில நூல், வரலாறு போன்ற பள்ளிப் பாடங்களை எளிமையாக அவர்கள் மனத்தில் பதியச் செய்யலாம். இப்பருவத்துக் குழந்தைகள் இயந்திரங்கள் பற்றியும் கண்டு பிடிப்புக்கள் பற்றியும் அறிந்து கொள்வதில் ஆவலுடையவர்களாக இருக்கின்றனர். புதியன புனைந்தோர், புதுமைகள் கண்டோர், அரசியல் வல்லுநர், ஆட்சித்திறவோர் ஆகியோரின் வரலாற்றை எளிய முறையில் இக்குழந்தைகளுக்கு அளிப்பது நலம்தரும். இப்பருவத்துக் குழந்தைகள் ஒளி, ஒலி, மின்சாரம் போன்ற செய்திகள்பற்றி அறிந்துகொள்ள விரும்புகின்றனர். வானவூர்தி இராக்கெட், போன்ற செய்திகளைக் கொண்ட புத்தகங்களை மிகவும் ஆவலோடு பொறுக்கி எடுக்கின்றனர்.

### பத்து வயதுக்குப் பின்:

பத்து வயதினைக் கடந்துவிட்ட குழந்தைகள் இயற்கைப் பொருள்பற்றியும், பிற செய்திகள் பற்றியும் அறிவதில் பேரார்வம் காட்டுகின்றனர். பன்னிரண்டு வயதினை எட்டியதும் வீர வணக்கம் செய்யும் வேட்கை குழந்தைகளிடம் கிளர்ந்தெழுகின்றது. தாம் கேள்விப்படுகின்ற வீரர்களின் நிலையில் தம்மை வைத்துப் பார்க்கும் மன நிலையை இவ்வயதுக் குழந்தைகளிடம் நாம் காணலாம். செயற்கரிய செய்த பெரியோர்களின் வரலாற்றினைச் சுவை தரும் வகையில் சொல்லும் நல்ல புத்தகங்கள் இவ்வயதினருக்கு மிகவும் இன்றியமையாதனவாகும். காந்தியடிகள், ஆப்ரகாம் லிங்கன், எடிசன், நியூட்டன், சி. வி. இராமன் போன்றவர்களின் அருஞ்செயல்களையும், அவற்றை அவர்கள் செய்து முடித்த வரலாற்றினையும் விளக்கும் புத்தகங்கள் மிகவும் ஏற்றவையாகும். இப்பருவத்தில், வீரத்தின்பாலுள்ள ஆர்வத்தின் காரணமாகச் சில குழந்தைகள் விரும்பத்தகாத கொலை, கொள்ளைக் கதைகளில் ஈடுபாடு கொள்வதையும் காண்கின்றோம். சில குழந்தைகள் நம் நாட்டிலும் அயல் நாட்டிலும் தோன்றிய பல புராணக் கதைகளில் ஆழ்ந்து அலற்றில் வரும் வீரர்களை வியந்து பாராட்டுவதில் ஆர்வம் காட்டுகின்றனர்.

ஆனால், பெண்கள் மட்டும் இப்பருவத்தின் இறுதியில் பையன்களினின்றும் பெரிதும் மாறுபட்டுச் செல்கின்றனர். பெண்கள் பையன்களைப்போல் அறிவியற்

செய்தியில் ஆர்வம் காட்டுவதில்லை. விலங்குக் கதைகளையும் கடவுட் கதைகளையும் ஓரளவு தொடர்ந்து படித்தாலும், காதலை மையமாகக் கொண்டு வளர்ந்து செல்லும் கதைகளிலேயே அவர்களுக்கு விருப்பம் செல்கின்றது. இத்தகைய ஆர்வம், இதே பன்னிரண்டு வயது நிலையிலுள்ள பையன்களைப் பொறுத்த வரையில் அறவே இல்லாத ஒரு செய்தியாகும்!

## முன்னிளமைப் பருவத்தில்

பதிமூன்று வயதினை எட்டி முன்னிளமைப் பருவத்தில் அடிவைக்கும் குழந்தைகள் புதுமையாக ஏதேனும் செய்து–கதை எழுதியோ, புதியன கண்டோ-பெயரும், புகழும், செல்வமும் அடையவேண்டும் என்று நினைக்கின்றனர். உழைப்பாலுயர்ந்தவர்கள்பற்றி எழுதப்பட்ட புத்தகங்கள் இவ்வயதினர்க்குப் பெருவிருந்தாக இருக்கும். அதே சமயத்தில் பதிமூன்று வயதினை எட்டிய பெண்கள் பெரியவர்க்காக எழுதப்பட்ட புதினங்களைப் படிப்பதில் ஆழ்ந்து விடுகின்றனர். உள்ளத்தைத் தொடும் வகையில் எழுதப்பட்ட உணர்ச்சிக் கதைகளைப் படிப்பதில் இவர்கள் காலத்தின் பெரும் பகுதியைச் செலவிடுகின்றனர். அறிவியல் நூல்களையோ தொழில் நுட்ப நூல்களையோ படிப்பதில் பெண்கள், குறிப்பிடும் வகையில் ஆர்வம் காட்டுவதாகத் தெரியவில்லை. மாறாக, இவ்வயதில் கவிதைகளில் மிகுந்த ஈடுபாடு அவர்கட்கு ஏற்படுகிறது. ஆனாலும், இவ்வார்வம் இரண்டொரு ஆண்டுகளில் மறைந்து விடுகிறது!

பதினான்கு வயதினை எட்டும் குழந்தைகள் முன்னிளமைப் பருவத்தின் இறுதி எல்லைக்கு வந்து விடுகின்றனர். உடலிலும், உள்ளத்திலும் பல வளர்ச்சி மாற்றங்கள் ஏற்பட்டு விடுகின்றன. கற்பனைக் கதைகளைவிட அறிவியல், வரலாறு, தொழிலியல் போன்ற உண்மைச் செய்திகளிலேயே அவர்கள் பெரிதும் அக்கறை கொள்கின்றனர். இக்காலத்தில் மிகவும் அதிக அளவில் நூல்களைக் கற்கின்றனர். தங்களைப் பொறுத்த வரையில் உள்ள சிக்கல்களையும், இடர்ப்பாடுகளையும் பற்றி எண்ணுவதிலும், தீர்வு காண்பதிலும் முனைந்து நிற்கின்றனர். இவற்றிற்குத் துணைசெய்யும் வகையில் அமைந்த புத்தகங்களை அவர்கள் நாடிச் செல்கின்றனர். இவ்வயது நிலையில் இருக்கும் பெண்கள் தொடர்ந்து கற்பனையில் மூழ்கிக் கனவு கண்டபடி இருக்கின்றனர். கதைகளில் வரும் தலைவியரோடு தங்களை இணைத்துக் கொள்கின்றனர். எளிய குடியில் வளரும் இளங்கொடியைத் தேடி வந்து மணம் புரிந்து அரண்மனைக்கு அழைத்துச்செல்லும் இளவரசர்களின் கதைகள் இவர்களுக்குத் தெவிட்டாத தேனாக இனிக்கின்றன.

பதினைந்து வயதினை எட்டும்போது காளைப்பருவம் என்று பேசப்படும் இளமைப்பருவம் தொடங்கி விடுகிறது. ஒவ்வொருவரும் தனித்தன்மையுடையவராகி விடுகின்றனர். அவர்கள் தேர்ந்தெடுக்கும் புத்தகங்களும் வரையறை செய்ய முடியாதபடி அவர்களது வாழ்க்கை முறையினை யொட்டி பல்வகையாகப் பல்கி விடுகின்றன. அவைபற்றிய ஆராய்ச்சியும் குழந்தைஇலக்கிய ஆராய்ச்சிக்கு அப்பாற்பட்டதாகி விடுகிறது! ★

# 3. புணர்ச்சி மகிழ்தல்

*[குறிப்பறிந்து சேர்ந்த தலைவன் அந்த இன்பத்தைச் சிறப்பித்துக் கூறுவது இந்த அதிகாரம். இதைப் பெண் கூறமாட்டாளாதலால் ஆண் மட்டும் கூறுவதாகவே அமைத்துள்ளார், வள்ளுவர்.]*

கண்ணால் பார்த்தும், காதினால் கேட்டும், நாவினால் உண்டும், மூக்கினால் முகர்ந்தும், மெய்யினால் தீண்டியும் அறியக்கூடிய ஐம்புலஇன்பங்களும் என் காதலியாகிய இவளிடம் உள்ளன. நோய்களுக்கு வேறு மருந்துகள் இருக்கின்றன; ஆனால் இவளால் உண்டாக்கப்பட்ட காம நோய்க்கு இந்தப் பெண்ணே மருந்தாகி அந்நோயைத் தீர்த்து விட்டாள்.

தான் காதலிக்கின்ற ஒரு பெண்ணின் உடல் இன்பத்தை விட வா, பேரின்பம் என்று கூறப் படுவது உயர்ந்ததாக இருக்கும்? ஒருக்காலும் இல்லை இவளை விட்டுப்பிரிந்து விலகினால் சுடுகின்றது; நெருங்கித் தொட்டால் குளிர்ச்சியாக இருக்கின்றது; இத்தகைய புதுமையான நெருப்பு இவளுக்கு எங்கிருந்து கிடைத்தது? இவளுடைய தோள்கள், நான் விரும்புகின்ற பொருள்களைப் போலவே தோன்றி அவை தரக்கூடிய இன்பங்களைத் தருகின்றன. என் காதலியின் தோள்களைத் தழுவும் போதெல்லாம் என் உயிருக்குப் புதிய புதிய சக்தி உண்டாவதினால் அவளுடைய தோள்கள் அமிர்தத்தினால் செய்யப்பட்டிருக்க வேண்டும்!

இவளைத் தழுவியிருப்பதானது தம்முடைய வீட்டிலிருந்து, தாம் ஈட்டிய பொருள்களை மற்றவருக்குப் பங்கிட்டுக் கொடுத்து விட்டு மீதியைத் தாம் உண்பது போன்ற இன்பத்தைத் தருகின்றது. இருவருக்கிடையில் காற்றுகூடப் புகுந்து பிளவு உண்டாக்க முடியாதபடி அவ்வளவு இறுகத்தழுவிக் கொண்டிருப்பது காதலன்—காதலி இருவருக்கும் இன்பம் தருவதாகும்.

புணர்ந்தபின் பிணங்கியிருத்தலும், அதன் பிறகு கூடிச்சேர்தலும் காதல் வாழ்க்கை நிறைவேறப் பெற்றவர்கள் அடைந்த பயன்களாகும். கற்கின்ற ஒவ்வொருதடவையும், முன்பு அறியாத அறிவாகத் தோன்றுவது போல இவளைச் சேர்கின்ற ஒவ்வொரு தடவையும் முன் அநுபவிக்காத இன்பமாகவே இருக்கிறது.

மதிப்புரை:

# 1. காந்தீயத் தென்னுடு

விலை: ரூ. 1-25; பக்கம் 100;

கிடைக்குமிடம்: உதயகுமரன் பதிப்பகம்,
தாத்தையங்கார்பேட்டை (அஞ்சல்)
திருச்சி மாவட்டம்.

ஆசிரியர் டி. கே. கலாநிதி தம்மை "எந்தக் கட்சி உறுப்பினரும் அல்ல நாட்டின் நலனையே விரும்புபவன்" என்று கூறுகிருர். நூல்முழுதும் மக்களின் ஒற்றுமையையும், நல் வாழ்வையுமே விரும்பும் அவரது தூய உள்ளத்தின் பிரதிபலிப்பைக் காண முடிகிறது.

கட்சி சார்பற்ற அரசியலமைப்பால் நாட்டில் ஒற்றுமையும், செழிப்பும், மகிழ்ச்சியும் நிலவும் என்பது அவரது எண்ணம். "கட்சி என்ற ஒன்று இருப்பதனுல்தான்" எனும் தலைப்பில் எழுதிய கருத்துக்கள் சிந்திக்கப்படவேண்டியவை. இந்திய நாடு பெரிதாக இருப்பதால் அதைக் காந்தீய வடநாடு காந்தீயத் தென்னுடு, என இரண்டாகப் பிரித்து ஆட்சி நடத்தினுல் சிறப்பாக இருக்கும், என்கிருர். அதற்கு அவர் தரும் ஆதாரங்களும், காரணங்களும், அறிவுக்கு இயைந்ததாகவும், ஆட்சிக்கு உகந்ததாகவும் இருக்கின்றன.

தற்போது மக்கள் வாக்குரிமைச் சீட்டு வழங்கும் முறையைச் "சின்னம் பற்றிய அறியாமை" யில் மிகவும் நகைக்சுவைபட, அத்துடன் அறியாமையை இடித்துரைத்து, எழுதி இருப்பது காணும்போது அறிஞர் பர்னுர்ட் ஷாவின் நகைச் சுவைதான் நம் கண்முன் தோன்றுகிறது.

ஆள்வோரிடையும் பிழை கண்டபோது நேர்மை குன்ருது குற்றத்தைச் சுட்டிக் காட்டியிருக்கும் நிலையைக் காணும் போது, "வாழ்தல் வேண்டிப் பொய் கூறமாட்டேன்" என்று உறுதியோடு கூறிய நம் பழம் புலவர்களை நாம் நினைக்க வேண்டி இருக்கிறது.

பதவியிலிருக்கும்போது ஒருவர் பேசும் பேச்சுக்கும் அதே ஆள் பதவி விட்டுவிலகிய பின் பேசும் பேச்சுக்கும் உள்ள வேறுபாட்டை விளக்கி, அந்த மாறுதலுக்குக் காரணம் சொல்லும் திறன் போற்றத்தக்கது.

"ஜாதிக்காக மந்திரி என்று மட்டும் போட்டு தமிழ் நாட்டைப் பல பிரச்னைகளுக்கு இடமளிக்காதீர்கள்" என அவர் வேண்டுவது காணும்போது நாமும் வருந்துவது தவிர வேறு வழி இல்லை.

"எம். எல். ஏக்களுக்கு; கொற்றவனுக்குக் குடிமகன் கடிதம்; திரு அண்ணுத்துரை M. A. அவர்களுக்கு; கேரள, கன்னட, ஆந்திரச் செல்வங்களுக்கு"— என்ற தலைப்புகளில் கடித அமைப்பில் விடுத்த வேண்டு

கோளில் பெரும் பகுதி மிகத் திறம்பட இருக்கிறது.

"கன்னித் தமிழ் வளர்த்த கரிகாலன்; கற்பரசி விழா எடுத்த செங்குட்டுவன் ...ராஜ ராஜன் இவர்கள் காலத்தில் கட்சிகள் இருந்தனவா?" என, ஆசிரியர் கேட்கும் கேள்வி பொருத்தமற்றகேள்வி. முடியாட்சியில் கட்சிகள் இருக்கமுடியாது. குடி ஆட்சியில்தான் ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என்று கட்சிகள் இருக்க முடியும். ஆசிரியர், கட்சியே தேவை இல்லை என்பதற்காக உண்மையை மறைத்துப் பேசுவது தகாது.

"ஹோட்டலின் பெயர்ப்பலகை எந்தப் பெயரில் இருந்தால் என்ன? உள்ளே நல்லபடி சுகாதார முறைப்படி டிபன்; இட்லி; பிரியாணி கிடைத்தால் போதுமே," என்று தென்னிந்திய சுயாட்சி அமைப்புக்குச் சாதகமாக உவமைகூறுவது வருந்தத்தக்கது. பெயர்ப்பலகையில்இருக்கும் சாதிப்பெயர், உயர்ந்தவன்-தாழ்ந்தவன், என்பதைக் காட்டுகிறது; அதிலிருந்து பல சமுதாய தீய நெறிகளுக்கு இடமளிக்கிறது, வித்தூன்றுகிறது, என்பதை உணர்ந்துதான் அறிவுப் பெரியார்கள் போராடுகின்றனர். இட்டிலியும் சாம்பாரும் சுவையாக இருக்கிறதா என்பது பிரச்னை அல்ல. அது தன்மானப் பிரச்னை.

இவைபோன்ற ஒருசிறு குறைகள். நூல் மிகவும் சிறந்த நூல். உயர்ந்த கருத்து. சிந்திக்க வைக்கும் என்பதில் ஐயமில்லை.

## 2. பாட்டும் சபதமும்

விலை : *ரூ. 1-50; பக்கம் 72;*
கிடைக்குமிடம் : *பைந்தமிழ்ப் பண்ணை,*
*472, கீழவாசல், தஞ்சாவூர்.*

தோழர் மது. ச. விமலானந்தம் அவர்கள் பாரதியார் சொந்தமாகப் படைத்த குயில் பாட்டையும், இருந்த ஒன்றைச் சிறந்த ஒன்றாகச் சமைத்த 'பாஞ்சாலி சபதத்'தையும் இணைத்துப் புதுப் பெயர் சூடி இருக்கிறார், 'பாட்டும் சபதமும்' என்று குயில் பாட்டின் சிறப்பை விளக்க ஆங்கிலக் கவிஞர்களின் கவிகளோடு பொருத்தி விளக்குவது பாரதியின் குயிலுக்கும் அணி செய்கிறது. அத்துடன் ஆசிரியரின் இணைத்துப் படித்துச் சுவைக்கும் எழில் நயமும் புலனாகிறது.

இந்நூலில் பாரதியார் எந்தச் சூழ்நிலையிலே குயில் பாட்டு எழுதினார் என்பதிலிருந்து அவர் கடைசியில் சொன்ன வரிகள் வரை ஆராய்ந்து எழுதி இருக்கிறார்.

குயில் கவிஞனுடனும், குரங்குடனும், மாட்டுடனும் கொண்ட காதலை ஆசிரியர் அன்பின் ஐந்திணை, கைக்கிளை, பெருந்திணை இவற்றிற்கு எடுத்துக் காட்டு என விளக்கம் கொடுத்துத் தமிழிலக்கியத்தால் பாரதிக்குப் பெருமை தேடியது சிறந்த பகுதி; உயர்ந்த படைப்பு.

குயில், கவிஞன், குரங்கு, மாடு இந்தப் பாத்திரங்களைக் கொண்டு புறக் காதல்; அகக்

காதல். புறத் தடை, அகத் தடை இவற்றை விளக்கியது பாராட்டுதலுக்குரியது.

"ஆன்ற தமிழ்ப் புலவீர்!
கற்பனையே ஆனாலும்
வேதாந்தமாக விரித்துப்
பொருளுரைக்க
யாதானும் சற்றே இடமிருந்
தாற் கூறிரோ,"

எனும் பகுதியை வைத்து ஆசிரியர் பசு, பதி, பாசம், மும்மலத் தத்துவம் ஆகிய மதக் கருத்துக்கு விளக்கம் கொடுக்க முற்பட்டிருக்கும் முயற்சிக்கு அந்தத் துறையை நாடி உழைப்போரிடமிருந்து பாராட்டு நிச்சயம் கிடைக்கும்!

பாரதியார், கம்ப இராமாயணத்துக்கு எதிர்ப்பு வருவது போல அவருடைய கற்பனைக் கதைக்கும் எதிர்ப்பு வருமோ என அஞ்சி, "ஆன்ற தமிழ்ப் புலவீர்" என அன்பால் வேண்டி 'யாதானும் சற்றே இடமிருந்தால் கூறீரோ," எனக் கெஞ்சுகிறார்.

கற்பனை நூல்களுக்குக் கடவுள் தத்துவ விளக்கம் கொடுப்பதால் தான் பலரது கவனத்திலிருந்து அந்நூல்கள் விலகிச் சென்று வேறுபாடடைகின்றன என்பது ஆசிரியருக்குத் தெரியாததல்ல.

நடராசர் சிலைக்கு, நடராசர் திரு உருவம் எனும் பொது உடைமை, முயலகன் எனும் ஏகாதிபத்தியத்தை ஒடுக்குகிறது என்பதைக் காட்டுகிறது, என்ற புதுவிளக்கத்துக்கு புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், "அடுக்குப் பானையிலும் பொது உடைமை; ஏகாதிபத்தியம் காண்கிறேன்" என்று மறுத்துக் கேலி மொழி பேசி எள்ளி நகையாடியது போல், சிலர் ஒவ்வொரு இடத்திலும், பசு, பதி, பாசம்; மும்மல விளக்கம் கொடுக்க முற்பட்டாலும் ஆச்சரியப்படுவதற் கில்லை.

இலக்கியத்தை இலக்கியமாகவே பார்க்க வேண்டும். கற்பனையை அதன் நயத்துக்காகவே பார்க்கச் செயவேண்டும். கற்பனைக் கதைக்குப் புராண விளக்கம் கொடுத்தல் தேவை இல்லை உலகமே மாயம்; காயம் நிலையாதது என்ற தத்துவத்தைப் புராணங்கள் செய்யட்டும்!

தோழர் விமலானந்தம் அவர்களின் முயற்சி ஒரு நல்ல முயற்சி. தமிழ்க் குயிலை ஆங்கிலக் குயிலுடன் ஆங்கில வானம் பாடியுடன், 'நைட்டிங் கேலு'டன், ஒப்பிட்ட திறன் போற்றுதற்குரியது வருணனை: கற்பனை; காதல்: இயற்கை; புதுமைக் கருத்துக்கள்; உவமை: நகைச்சுவை; எனப் பல கோணங்களிலிருந்து கவிக் குயிலைப் பாராட்டியது நனி சிறப்புடைத்து. மிகச் சிறந்த மணம் கொடுத்த இதழ்கள். ஆசிரியர், "புல்லிதழ் பூவிற்கும் உண்டு" என்று கூறியது போல் மதக் கருத்துக்களை, முற்பிறப்பு, பிற்பிறப்பு பற்றியவை; பசு, பதி, பாசம்; உலகம் நிலையாமை இவற்றிற்குக் கொடுத்த விளக்கங்களை-மறந்து நல்லவைகளை ஏற்றுக்கொள்ளலாம்.

அச்சிட்டோர்: திரு. ஏ. எம். பொன்னப்பா, மாணிக்கம் பிரஸ், சென்னை-29.
ஆசிரியர் & வெளியிடுவோர்: சா. குருசாமி, 84, ஷெனாய் நகர், சென்னை-30

டெலிஃபோன் நம்பர் : 51451 | நிறுவனம் : 1930 | தந்தி : ORIDOL

தரத்தில் சிறந்த

எங்கள் பருப்பு வகைகள்

பட்டினத்தார் உளுத்தம் பருப்பு

எப்போதும் வாங்கி உபயோகியுங்கள்

எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்.

ஷெல் துவரம் பருப்பு

தயாரிப்பாளர்கள் :

P. புன்னவன் நாடார் (FIRM)

235, திருவொற்றியூர் ஹைரோடு,

சென்னை-21.

# தமிழ் நூல் நிலையம்

84, ஷெனாய் நகர் : : சென்னை-30

| | | ரூ. காசு |
|---|---|---|
| 1. | பிச்சைக்காரி (சிறு கதைகள்)<br>சா. குருசாமி. | 2·00 |
| 2. | பன்னீர்ச்செல்வம் (நாடகம்)<br>சா. குருசாமி. | 0·40 |
| 3. | குத்தூசி (12 இதழ்கள்)<br>பைண்டு செய்யப்பட்டது. | 8·00 |
| ★ 4. | குத்தூசி (கிண்டல்)-கட்டுரைகள்<br>புதிய தொகுப்பு | அச்சில் |
| ★ 5. | கட்டுரைக் கொத்து<br>சா. குருசாமி. | அச்சில் |

★ இவை இரண்டும் இதுவரையில் புத்தக உருவில் இல்லாதவை; திருத்தியும், பெருக்கியும், தனிச் சுவையுடன் எழுதப்பட்டவை. நவம்பர் இறுதியில் கிடைக்கும்.

குறிப்பு :—மேற்கண்டவைகளுக்கு அஞ்சல் செலவு தனி.